பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்

Kalaikkathir

விழியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 சித்திரை 29, வெள்ளிக்கிழமை 12.05.2017 கதிர் 187



வவுனியா நகரில் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு நாடுங்கள்

சன்சிகா நகைமாடம்

இல.114, பஸார் வீதி, வவுனியா.

தொலைபேசி: 024 222 4028



# வந்தார் பிரதமர் மோடி

## அன்பு, மகிழ்வுடன் நேற்று கொழும்பில் வரவேற்பு

கொழும்பு, மே 12

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை 5.30 மணியளவில் விசேட விமானம் மூலம் கட்டுநாயக்கா விமான நிலையத்தில் வந்து இறங்கினார்.

அவரை இலங்கையின் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விமானத்தின் படிக்கட்டுக்கு அருகில் நின்று, கைகூப்பி வணங்கி, பின்னர் கைகுலுக்கி வரவேற்றார்.

பின்னர் விமான நிலையத்தில் வைத்து, இலங்கையின் மூத்த அமைச்சர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்களுக்கு கைலாகு கொடுத்து அறிமுகம் செய்து வைக்கப்பட்டார் இந்தியப் பிரதமர்.

விமானநிலையத்தில் விசேட விருந்தினர் பதிவேட்டில் கையொப்பமிட்ட இந்தியப் பிரதமர், அங்கு இடம்பெற்ற சிறிய தேநீர் விருந்திலும், கலந்துரையாடலிலும் பங்குகொண்டார்.

தொடர்ந்து கொழும்பு கங்காராமயவில் இடம்பெற்ற வெசாக் அனுஷ்டானங்களில் இலங்கைப் பிரதமருடன் இந்தி

பக்கம் 18 >>>

# மீண்டும் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகை

## ஐரோப்பிய ஒன்றிய அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மே 12

**ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையைப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கைக்கு சகலவித அனுமதிகளும் கிடைத்துள்ளன என்று வெளிவிவகார பிரதி அமைச்சர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.**

இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீள வழங்குவதற்குரிய யோசனைக்கு ஐரோப்பிய ஒன்றியத்தின் அமைச்சரவையும் நேற்று அனுமதி வழங்கியுள்ளது. இது குறித்தான உத்தியோகபூர்வ அறிவிப்பு எதிர்வரும் 2? ஆம் திகதி வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஐரோப்பிய ஒன்றியத்தால்

பக்கம் 18 >>>

# இந்தியப் பிரதமருக்கு எதிராக சுவரொட்டி ஒட்டிய நபர் கைது!

கொழும்பு, மே 12

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை வருகையை எதிர்த்து 'எட்கா' உடன்படிக்கைக்கு மாறான தொழில் நிபுணர்களால் அச்சிடப்பட்டவை எனக் கூறப்படும் சுவரொட்டி

பக்கம் 18 >>>

# முள்ளிவாய்க்காலில் புலிகளுக்கு நினைவுச் சின்னம் அமைப்பாம்!

## புரளியைக் கிளப்புகிறது சிங்கள ஊடகம்

முல்லைத்தீவு, மே 12

விடுதலைப் புலிகளை நினைவுகூரும் நினைவுச் சின்னம் ஒன்று முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்டு வருவ

பக்கம் 18 >>>

## அளப்பு அருணாசலம்



ஊடறுப்பதுதானே ஊடகவியலாளரின் வேலை...!

# சீன நீர்மூழ்கி கொழும்புத் துறைமுகத்தில் தரிப்பதற்கு அனுமதி மறுத்தது இலங்கை

கொழும்பு, மே 12

இந்தியப் பிரதமர் இலங்கைக்கு விஜயம் செய்யும் காலப் பகுதியில் தனது நீர்மூழ்கிக் கப்பல் ஒன்றை இலங்கைத் துறைமுகத்தில் தரிப்பதற்கு அனுமதிக்குமாறு சீனா தரப்பில் விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கொழும்பு அரசு நிராகரித்துவிட்டது என விடயமறிந்த வட்டாரங்கள் தகவல் வெளியிட்டன.

சீன நீர்மூழ்கி கொழும்பில் தரிப்பதற்கான கோரிக்கையை இலங்கை அரசு நிராகரித்துவிட்டமையை உறுதிப்படுத்திய பெயர் குறிப்பிட விரும்பாத இலங்கையின் மூத்த அதிகாரிகள் இருவர், இந்த விட

பக்கம் 18 >>>









நேற்று மாலை கொழும்பு வந்தடைந்த பிரதமர் நரேந்திர மோடி பங்குபற்றிய நிகழ்வுகளின் போது...

# பிரதமர் மோடிக்கு மைத்திரி வழங்கிய இரவு விருந்தில் சம்பந்தன், விக்கி

கொழும்பு, மே 12

இலங்கை வந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு நேற்று இரவு ஜனாதிபதி மாளிகையில் இராப்போசன விருந்து அளித்து கௌரவித்தார் இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

இந்த இராப்போசன நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தனும் பங்குகொண்டார். அவர் அதிதிகளுக்கான பிரதான மேசையில் ஏனையோ

பக்கம் 18 >>>

# இன்று காலை ஒரே விழாவில் பிரதமர் மோடியும் மஹிந்தவும்!

கொழும்பு, மே 12

இன்று காலை 9.30 மணிக்கு கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் சர்வதேச வெசாக் தின நிகழ்வில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பங்குபற்றி உரையாற்றுகின்றார்.

பக்கம் 18 >>>

# மோடியின் பாதுகாப்பை ஊடறுத்து அருகே சென்ற ஊடகவியலாளர்

## அதிகாரிகளால் வெளியேற்றப்பட்டார்



கொழும்பு, மே 12

பிரதமர் நரேந்திர மோடி இலங்கைக்கு வந்திறங்கிய போது அவருக்கு வழங்கப்பட்ட அதி உச்சப் பாதுகாப்பையும் மீறி ஊடகவியலாளர் ஒருவர் அவ

பக்கம் 18 >>>

காலைக்கதிர்



# மக்கள் குடியிருப்புக்குள் மயானங்கள் வேண்டாம்

## யாழ். நகரில் நாளை கவனவீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், மே 12

யாழ்ப்பாணத்தில் மக்கள் குடியிருப்புக்களுக்கு மத்தியில் மயானங்கள் வேண்டாம் எனும் மனிதநேயக் கோரிக்கையை முன்வைத்து சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

யாழ். பேருந்து நிலையத்துக்கு முன்பாக நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு இந்தப் போராட்டம் ஆரம்பமாகவுள்ளது.

இது தொடர்பாக சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அறிக்கை ஒன்றையும் விடுத்துள்ளது.

இந்த 'அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வட மாகாணத்தில் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வரும் குடியிருப்புகளுக்கு மத்தியில் பிரேதங்களை எரியூட்டும் மயானங்கள் உள்ளன.

இந்த மயானங்களில் பிரேதங்கள்எரியூட்டப்படும்வேளைகளில் உருவாகும் பிரேதப் புகையானது அருகில் வசிக்கும் குழந்தைகள், கர்ப்பிணிகள், நோயாளர் உள்ளிட்ட மக்களால் சுவாசிக்கப்படுகிறது. தாங்கமுடியாத துர்நாற்றத்தை அனுபவிக்க வேண்டிய அவல நிலை அவர்களுக்கு ஏற்படுகின்றது.

சிலவேளைகளில் அரை குறையாக எரிந்த உடற்பாகங்கள், எலும்புப் பகுதிகள் நாய்கள் போன்ற விலங்குகளால் இழுத்துச் செல்லப்பட்டு குடியிருப்புகளில் விடப்படுகின்றன.

இதனால் சுகாதாரச் சீர்கேடும், சூழல் மாசடைவும், உளவியல் ரீதியான தாக்கங்களும் ஏற்படுகின்றன.

இதன் தாக்கம் சில வகையான நோய்களையும் ஏற்படுத்துகின்றது. எனவே, மக்களின் அன்றாட வாழ்வுக்குக் குடியிருப்புகளுக்கு மத்தியில் இருந்துவரும் மயானங்கள் அச்சத்தையும், அருவருப்பையும், சுகாதாரமற்ற சூழலையும் ஏற்படுத்திவருகின்றன.

எனவே, அவர்களின் வாழ்வுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் அமைந்துள்ள மயானங்கள் அகற்றப்படவேண்டும்.

மக்கள் குடியிருப்புகளிலிருந்து தூரமாக அமைந்துள்ள மயானங்களைப் பயன்படுத்துவது, இன்றைய போக்குவரத்து வசதிகள் சிறப்பாகவுள்ள நிலைமையில் சாத்தியமானது.

இதில் பாரம்பரியம் எனக் கூறிக் கொண்டு உள்ளார்ந்த மாகப்பண்பாட்டு ஆதிக்கத்தை, உழைக்கும் சாதாரண மக்களின் மீது திணித்து வருகின்றனர்.

இந்த விடயத்தில் பாதிக்கப்படும் மக்களைத் தமது அயலவர்களாகவோ, தமிழர்களாகவோ ஏன் மனிதர்களாகவோ காணத் தயாராக இல்லாத இழிநிலை கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இத்தகைய மயானப் பிரச்சினையானது உரும்பிராய் மேற்கு, ஈவினை வடக்கு - திடற்புலம், புத்தூர் மேற்கு - கிந்துசிட்டி, திருநெல்வேலி - பாற்பண்ணை, மல்லாகம் போன்ற பல இடங்களில் நிலவுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த கவனவீர்ப்பில் மனிதநேய சக்திகள், மக்கள் சார்பான பொது அமைப்புகள், சூழலியலாளர்கள், பொதுமக்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பு அழைப்பு விடுக்கின்றது.-என்றுள்ளது. (ஐ)

## அம்பாந்தோட்டை உடன்படிக்கை அறிக்கை ஜனாதிபதியிடம்

கொழும்பு, மே 12

அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை தொடர்பான இறுதி அறிக்கை சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டது என்று அரச வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது.

அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் வர்த்தக வலயம் ஆகியனவற்றுக்கு பெருந்தொகையான காணிகளை சீனாவுக்கு வழங்குவது குறித்து தொடர்ந்தும் சர்ச்சையான நிலைமை நீடித்து வருகின்றது.

இதன் காரணமாக அந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவது பிற்போடப்பட்டு வருகின்றது.

இந்த நிலையிலேயே, அம்பாந்தோட்டை துறைமுக ஒப்பந்தம் தொடர்பான இறுதி அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## நிரந்தர வீட்டு நிர்மாணப் பரிந்துரைக்கு குழு நியமிக்க அமைச்சரவை தீர்மானம்

கொழும்பு, மே 12

வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு பிரேரிக்கப்பட்டுள்ள 59 ஆயிரம் வீடுகளைநிர்மாணிக்கும் திட்டத்தை செயற்படுத்துவதற்கான பரிந்துரைகளை முன்வைப்பதற்கு உயர்அதிகாரிகள்கொண்ட குழுவொன்று நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின்போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக வீடுகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் செயற்படுத்துவதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள பொருத்து வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத் திட்டத்தை மீண்டும் மதிப்பீடு செய்வதற்காக அமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தலைமையிலான குழு நியமிக்கப்பட்டது.

அதன் முடிவுகளை அடிப்படையாகக்கொண்டு, ஒரு வீட்டுக்கு 15 லட்சம் ரூபா வீதத்தில் 6 ஆயிரம் வீடுகளை நிர்மாணிப்பதற்கு பொருளாதார முகாமைத்துவம் தொடர்பான அமைச்சரவைசெயற்குழு தீர்மானித்துள்ளது.

அதன்அடிப்படையில் 6ஆயிரம்முன்நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைநிர்மாணிப்பது தொடர்பில் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்த நிலையில், யுத்தத்தால் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்காக சிமெந்து கற்கள் மற்றும் சிமெந்து ஆகியவற்றை பாவித்து நிர்மாணிப்பதற்கு பிரேரிக்கப்பட்டுள்ள 59 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக்கும் வேலைத்திட்டத்தைச் செயற்படுத்தும் முறை தொடர்பில் சிபார்சுகளை முன்வைப்பதற்கு உயர் அதிகாரிகள் கொண்ட குழுவொன்றை நியமிப்பதற்குஅமைச்சரவையில் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



வெசாக்தின நிகழ்வு கொடிகாமம் ரயில் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் நடைபெற்றது.

கொடிகாமம் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி எதிரிசிங்க தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதிப் பொலிஸ்மா அதிபர் சஞ்சீவ தர்மரட்ண கலந்துகொண்டார். யாழ். மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் கஸ்ரன் ஸ்ரனிஸ்லஸ், தென்மராட்சிப் பிரதேச உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் துசிதகுமார, கொடிகாமம் பகுதி வர்த்தகர்கள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். இதன்போது அங்கு வருகை தந்தவர்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. (ஐ)

## தற்காலிக அடிப்படையிலேயே பாதுகாப்புச் செயலாளர் பதவி!

### கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவிப்பு

கொழும்பு, மே 12

தற்காலிக அடிப்படையில் தாம் பாதுகாப்புச் செயலாளராகக் கடமையாற்றுகிறார் என்று பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

கருணாசேன ஹெட்டியாராச்சி ஜேர்மனிக்கான தூதுவர் பதவிக்காக பரிந்துரை செய்யப்பட்டுள்ளார்.

புதிய பாதுகாப்புச் செயலாளர் ஒருவர் நியமிக்கப்படும் வரையில் தாம் தற்காலிக அடிப்படையில் இந்தப் பதவியில் நீடித்திருப்பார் என்று அவர் கொழும்பு ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.



''பாதுகாப்புச் செயலாளர் பதவியில் இருந்து நான் விலகும் திகதி பற்றித் துல்லியமாக குறிப்பிடமுடியாது. வேறு ஒருவரை அந்தப் பதவிக்காக நியமிக்கும் வரையில் இந்தப் பதவியில் நான் நீடித்திருப்பதில் சிக்கல் கிடையாது.''- என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஐ)

## விசுவமடு, பாரதிபுரம் மாணவன் காய்ச்சலை அடுத்து உயிரிழப்பு!

### எலிக் காய்ச்சல் என்று சந்தேகம்!!

முல்லைத்தீவு, மே 12

முல்லைத்தீவில் காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி மாணவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவில் உள்ள விசுவமடு, பாரதிபுரம் பகுதியைச் சேர்ந்த எம்.சதீஸ்குமார் (வயது - 19) என்ற மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளான்.

இந்த மரணத்திற்கு எலிக்காய்ச்சல் காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது எனவும் மேலதிக உடற்கூற்றுப் பரிசோதனைக்காக மாதிரிகள் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன எனவும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கீழ்க் குறிப்பிடப்படும் அறிகுறிகள் காணப்படும் போதும் உடனடியாக வைத்தியசாலையை நாடி உரிய பரிசோதனையை மேற்கொள்ளுமாறு கிளிநொச்சி சுகாதாரத் துறையினர் கேட்டுக் கொண்டுள்ளனர்.

எலிக்காய்ச்சல் நோய்க்கான அறிகுறிகளாக காய்ச்சல் உடல் உளைச்சல் அல்லது உடல் நோதல் தலையிடி, உடல் களைப்பு அல்லது உடல் அலுப்பு போன்றன காணப்படும். அத்துடன் கண் சிவத்தல், வாந்தி, கடும் மஞ்சள் நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல், சிறு நீருடன் இரத்தம் கலந்து வெளியேறுதல், சிறு நீர் வெளியேறுவது குறைதல் ஆகிய அறிகுறிகள் இருக்கும்.

சில நோயாளிகளுக்கு எந்தவொரு குணம் குறியும் தென்படாது. எனவே உடனடியாக வைத்தியசாலையை நாடி உரிய சிகிச்சையை பெறவேண்டும் என்று வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

# வலசைப் பறவைகள் தொடர்பாக மாணவர்களுக்குக் களப் பயிற்சி

## இன்று முதல் மூன்று நாள்களுக்கு நடத்த வடக்கு சுற்றாடல் அமைச்சு ஏற்பாடு

யாழ்ப்பாணம், மே 12

வடக்கு மாகாண சுற்றாடல் அமைச்சால் வலசைப் பறவைகள் தொடர்பாக மாணவர்களுக்கு அறிவூட்டும் விதமாக வதிவிடக் கருத்தமர்வும் வெளிக்களப் பயிற்சியும் யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று சுற்றாடல் அமைச்சு ஊடகங்களுக்கு அனுப்பி வைத்திருக்கும் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வலசைப் பறவைகள் தொடர்பாக அறிவூட்டும் வகையில் சர்வதேச ரீதியாக ஆண்டு தோறும் மே மாதத்தின் இரண்டாவது வார இறுதி நாள்களில் உலக வலசைப் பறவைகள் தினம் கடைப்பிடிக்கப்படுகிறது.

இந்த மாதம் நாளை சனிக் கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் உலக வலசைப் பறவைகள் தினம் ஆகும்.

இந்தத் தினத்தைக் கொண்டாடும் விதமாக வடமாகாண சுற்றாடல் அமைச்சு வலசைப் பறவைகள் பற்றிய வதிவிடக் கருத்தமர்வு மற்றும் வெளிக்களப் பயிற்சிகளை இன்று வெள்ளிக் கிழமை தொடக்கம் மூன்று நாள்களுக்கு மாணவர்களுக்கு வழங்குவதற்கு யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மாகாணக் கல்வி அமைச்சின் அனுசரணையுடன் வடக்கு மாகாணத்தின் ஐந்து மாவட்டங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட நூறு மாணவர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளனர்.

இவர்களுக்கான கருத்தமர்வுகள் நெல்லியடி மத்திய கல்லூரியிலும் யாழ். மத்திய கல்லூரியிலும் இடம் பெறவுள்ளன.

யாழ். குடாநாட்டின் உள்ளேயும் வெளியேயும் காணப்படும் கடல் நீரேரிகளும், இவற்றையொட்டி வளரும் கண்டல் தாவரங்களும் வலசைப் பறவைகளுக்கு உவப்பான இயற்கைச் சுழலாக அமைந்துள்ளன.

இதனால், பருவகால மாற்றங்கள் ஏற்படும் போது தென்னிலங்கையில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான பறவை இனங்கள் குடிபெயர்ந்து குடாநாட்டுக்கு வந்து பின்னர் திரும்பிச் செல்கின்றன.

இயற்கைச் சூழல் குறித்தும் வலசைப் பறவைகள் குறித்தும் அறிவூட்டும் விதமாக பறவைகள் அதிகளவில் கூடும் தொண்டைமானாறு ஏரி, வல்லை வெளி, சரசாலை குருவிக்காடு, செம்மணி, மண்டைதீவு ஆகிய இடங்களில் மாணவர்களுக்கு வெளிக்களப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

உலக வலசைப் பறவைகள் தினத்தின் இறுதி நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில், விருந்தினர் உரைகளும், மாணவர்களுக்கான பரிசு வழங்குதலும் இடம்பெறவுள்ளன. -என்றுள்ளது. (ஐ)

# அரசியல் கட்சியின் பெயர் கூறி சூறையாடப்படுகின்றது பணம்

## மக்களை அவதானமாக இருக்குமாறு மஸ்தான் எம்.பி. கோரிக்கை

*வவுனியா, மே 12*

*அரசியல் கட்சிகளின் பிரமுகர்கள் என்று கூறி வறுமைக் கோட்டுக்கு உட்பட்டவர்களுக்கு ஆசைவார்த்தைகளைத் தெரிவித்து பணம் சூறையாடும் செயற்பாடுகள் நெடுங்கேணி போன்ற பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்றன.*

*இந்த விடயத்தில் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கே.கே. மஸ்தான் தெரிவித்துள்ளார்.*

*இந்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:-*

*மக்கள் பிரதிநிதிகளுடன் நெருக்கமாக நின்று புகைப்படங்களை எடுத்துக் கொள்ளும் சிலர், பின்னர் தம்மை பிரபல அரசியல் கட்சிகளின் பிரமுகர் என்று கூறுகின்றனர். அதுமட்டுமன்றி தம்மிடம் தொண்ணூறாயிரம் ரூபாவை தந்தால் சில காலங்களின் பின்னர் அதை முப்பது லட்சமாக தர முடியும் என்றும் கூறுகின்றனர்.*

*அத்துடன், விவசாயக் கடன்கள் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுத் தருவார்கள் என்றும் கூறி வறுமைப்பட்ட மக்களிடம் பணத்தைப் பெறுகின்றனர்.*

*இவர்கள் தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும். வறுமையைப் பயன்படுத்தி சிலர் பிழைக்கப் பார்க்கின்றனர்.*

*இவர்கள் தொடர்பாக அறிந்தால் பொலிஸிடமோ, மக்கள் பிரதிநிதிகளிடமோ உடன் அறிவியுங்கள். -என்றார். (ஐ-100)*

# கட்டுப்பாட்டுடன் மணல் விநியோகம் தென்மராட்சி மக்கள் பெரும் நன்மை

தென்மராட்சி, மே 12

தற்போது மணல் விநியோகிக்கப்படுவதால் வீட்டுத்திட்டப் பயனாளிகள் உட்பட மேசன் தொழிலாளர்களும் நன்மை அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த பல மாதங்களாகக் குடாநாட்டில் மணல் விநியோகத்துக்கான அனுமதி வழங்கப்படாமையால் வீட்டுத் திட்டப் பயனாளிகளும் மேசன் தொழிலாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் சாவகச்சேரி பிரதேச செயலாளர் திருமதி தேவநந்தினி பாபு பொதுமக்களின் நலன் கருதி கெற்பேலி பகுதியில் அடையாளம் காணப்பட்ட அரச காணியில் இருந்து இயற்கைச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் மணல் அகழ்வதற்கு அனுமதியை கிராம அபிவிருத்திச் சங்கம் ஊடாக வழங்கியுள்ளார்.

இதன் மூலம் மாதமொன்றுக்கு 100 கீப் மணலை மட்டுமே பெற்றுக்கொள்ள முடியும். எனினும் இந்த மாதம் 36 உழவு யந்திரம் மூலம் மணலை மட்டுமே ஏற்ற அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மணலுக்கு கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் செலுத்தப்படும் பணம் மூலம் அப்பகுதியில் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் மற்றும் மணல் அகழ்கின்ற பகுதிகளில் மண்ணரிப்பைத் தடுக்க சவுக்கு மரங்கள் நடுதல் போன்ற செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

# தீர்வின்றித் தொடரும் போராட்டங்கள்...

## கிளிநொச்சியில் 81 ஆவது நாளாக...



வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுவரும் தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 81 ஆவது நாளாகவும் தொடர்ந்தது.

இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் சரணடைந்த மற்றும் கடத்திச் செல்லப்பட்ட தங்களுடைய உறவுகள் தொடர்பில் உரிய பதிலை கடந்த எட்டு ஆண்டுகளாக அரசு வழங்கவில்லை.

இந்த நிலையில் காணாமல் ஆக்கப்பட்ட தமது உறவினர்களின் வெளிப்படுத்தலை வலியுறுத்தி கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் தீர்வுமின்றித் தொடர்கின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முல்லைத்தீவில் 65 ஆவது நாளாக...




முல்லைத்தீவு மாவட்டத்தில் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் முன்னெடுத்துள்ள தொடர் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று 65 ஆவது நாளாகத் தொடர்ந்தது. இறுதி யுத்தத்தின்போதும் அதற்கு பின்னரும் இராணுவத்திடம் சரணடைந்த நிலையிலும் மற்றும் கடத்தப்பட்டும் காணாமற்போகச் செய்யப்பட்டுள்ள உறவுகளை மீட்டுத் தருமாறு வலியுறுத்தி போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ)

## கேப்பாபிலவில் 72 ஆவது நாளாக...



கேப்பாபிலவு மக்களின் தொடர் போராட்டம் நேற்று 72 ஆவது நாளை எட்டியது. வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில், தாம் இன்று இருக்கின்றனர் என்றும் தம்மை விரைவில் சொந்த இடத்தில் குடியேற்றுமாறும் அந்த மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ஐ)

## இரணைதீவில் 11 ஆவது நாளாக...



கிளிநொச்சி இரணைதீவுப் பகுதியில் தங்கி நின்று தொழில் செய்வதற்கான அனுமதிகள் இதுவரை வழங்கப்படவில்லை. இதற்கான அனுமதிகளை நல்லாட்சி அரசு பெற்றுத்தரவேண்டும் என்று கோரி இரணைதீவு கடற்றொழிலாளர்களின் குடும்பங்கள் கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தப் போராட்டம் நேற்று 11 ஆவது நாளாகத் தொடர்ந்தது. (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax): 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சந்திரிகாவின் யோசனைத் திட்டம்

இனப் பிரச்சினையைத் தீர்க்கும் விவகாரத்தில் தென்னிலங்கைத் தலைவர்களின் போக்கு எத்தகையது என்பதைப் புரிந்து கொள்வதற்கு நல்ல உதாரணம் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க.

இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அவரது காலத்தில் - அவரால் பிரேரிக்கப்பட்ட - யோசனைத் திட்டம் குறித்தே இப்போதும் பரவலாகப் பேசப்படுகின்றது.

"சந்திரிகா அம்மையார் முன்வைத்த யோசனைத் திட்டமே சிறந்தது. அதனடிப்படையிலேயே தீர்வுக்கான திட்டத்தைப் பரிசீலிக்க விரும்புகின்றோம்." - என்று இலங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை. சேனாதிராசா தெரிவித்திருக்கின்றார்.

அப்படி என்ன தீர்வுத் திட்டத்தை சந்திரிகா அம்மையார் முன்வைத்தார்? ஏன் அது அப்போது நடைமுறைப்படுத்தப்படவில்லை? - என்ற கேள்விகள் எழுகின்றமை நியாயமானவையே.

90 களின் முதல் பாதியில் கோரமான யுத்தம் தனது கொடூர முகத்தை வடக்கு, கிழக்கு மீது கட்டவிழ்த்து விட்டபோது, அதன் வெம்மை தாங்காது கொதி கொதித்தது தமிழர் தாயகம்.

அந்தச் சமயத்தில்தான் சமாதான தேவதையாகத் தன்னை முன்நிறுத்தினார் சந்திரிகா. அமைதித் தீர்விலும், நல்லிணக்கத்திலும், புரிந்துணர்விலும் மிகுந்த ஈடுபாடுள்ள - இடதுசாரிச் சிந்தனைப் பின்னணி கொண்ட - ஒரு தலைவியாகத் தன்னை முன்னிலைப்படுத்திய சந்திரிகாவை - மிகுந்த எதிர்பார்ப்புடன் நாட்டின் ஜனாதிபதியாக்குவதில் பங்களித்தனர் தமிழ் மக்கள் - குறிப்பாக வடக்குத் தமிழ் மக்கள்.

பதவிக்கு வந்த கையோடு 1995 ஒகஸ்ட் மாதம் 3 ஆம் திகதி அவர் முன்வைத்த தீர்வு யோசனையைத்தான் மாவை. சேனாதிராசாவும் - ஏன் முழுத் தமிழர் தரப்பினருமே - இப்போதும் சிலாகித்துப் பேசி வரவேற்கின்றனர்.

ஒற்றையாட்சி, சமஷ்டி, கூட்டாட்சி என்ற குழப்பங்களைத் தவிர்த்து, நாட்டை பிராந்தியங்களின் ஒன்றியமாக்க அந்த யோசனை அடையாளப்படுத்தியது. வடக்கிலும், கிழக்கிலும் பரந்து கிடந்த தமிழர் தாயகத்தை அது ஒரு பிராந்தியமாகச் சுட்டியது. அந்தப் பிராந்தியத்தில் கிழக்கில் முஸ்லிம்களின் நலனைக்கவனிக்கவென தனியான ஓர் அலகுக்கும் அது இடமளித்தது.

சந்திரிகா அரசில் சமாதானப் பிரியராக அப்போது காட்டிக் கொண்ட (இப்போது பேரினவாதியாகத் தம்மை நிலைநிறுத்தும்) பேராசிரியர் ஜி.எல்.பீரிஸும், அப்போதைய தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரமுகருமான நீலன் திருச்செல்வமும்தான் இந்த யோசனைத் திட்டத்தின் சிற்பிகள். அவர்களோடு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவரும், முஸ்லிம்களின் தேசியத் தலைவர் எனப் போற்றப்பட்டவருமான ஏ.எச்.எம்.அஷ்ரப்பும் தனது காத்திரமான பங்களிப்பை இதற்கு வழங்கினார்.

ஆனால், வழமைபோல தென்னிலங்கைப் பேரினவாதிகளின் கடும் அழுத்தத்தில் நசியுண்டு போனது அந்தத் தீர்வு யோசனை.

இதற்கிடையில் ஆட்சி அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அதிகார வலுதந்த மமதையால் தமது சமாதானத் தேவதை முகத்தை மெல்ல மெல்லச் சுருக்கி மாற்றிக் கொண்டார். தீவிரப் போர் வெறியராக தம்மை முன்னிறுத்தினார்.

ஈழத் தமிழர்களின் மூளை மையமாகக் கருதப்படும் யாழ்ப்பாணத்தின் மீது தமது போர் முகத்தைக் காட்டினார் அவர். மிகக் கொடூரமான - மிகப் பயங்கரமான - மிக மோசமான - மிகத் தீவிரமான - யுத்தத்தை குடா நாட்டின் மீதும், குடாநாட்டு மக்களின் மீதும் ஏவிவிடும் வரலாற்றுத் தவறை அவரே இழைத்தார்.

யாழ்ப்பாணக் குடாநாடே சின்னாபின்னமானது. ஐந்து லட்சம் மக்கள் குடாநாட்டிலிருந்து ஒரே நாளில் இடம்பெயரும் பேரவலம் நேர்ந்தது. இந்தக் கொடூரத்துக்குக் காரணமான படையெடுப்பை முன்நகர்த்தியவர் அப்போதைய ஜனாதிபதியான சந்திரிகா அம்மையார்தான்.

குடாநாட்டில் பல நூற்றுக்கணக்கில் கைதான தமிழ் இளைஞர்கள் காணாமலாக்கப்பட்ட சம்பவங்கள், சந்திரிகா காட்டிய பச்சைக் கொடியின் கீழ்தான் முன்னெடுக்கப்பட்டன. அவர்களில் பலரின் வாழ்க்கை செம்மணித் தரவைக்குள்தான் புதையுண்டது எனக் கருதப்படுகின்றது.

சமாதான தேவதையாக இருந்த காலத்தில் சந்திரிகாவால் தயாரிக்க ஆரம்பிக்கப்பட்டு வெளிவந்த 1995 ஒகஸ்ட் சமாதான திட்டம், பின்னர் அவர் போர் வெறியர் முகத்தைக் காட்டித் தீவிர சிங்களப் பேரினவாதப் போக்கை வெளிப்படுத்தத் தொடங்கியதும் நீர்த்துப் போகப் பண்ணப்பட்டது.

2000 ஆம் ஆண்டில் அத் திட்டம் நாடாளுமன்றுக்கு அரசமைப்பு நகல் வடிவமாகக் கொண்டு வரப்பட்டபோது, அதிலிருந்து நல்ல அம்சங்கள் எல்லாம் ஒவ்வொன்றாக நீக்கப்பட்டு, நீர்த்துப் போகப் பண்ணி வெறும் உயிரற்ற கோது போலவே அது முன்வைக்கப்பட்டது. அதனையே தமிழர்களின் அப்போதைய நாடாளுமன்றத் தலைமைகள் அடியோடு நிராகரித்து ஒதுக்கின.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு வர முன்னரும் வந்தவுடனும் இருந்த சந்திரிகா அம்மையார் வேறு. அதிகாரத்தின் உச்சியில் கொடி கட்டிப் பறந்தபோது இருந்த சந்திரிகா வேறு. இப்போது அதிகாரம், பதவி எல்லாம் இழந்த பின்னர் சமத்துவம், நீதி, நியாயம், நல்லிணக்கம் பற்றியெல்லாம் பேசுகின்ற சந்திரிகா அம்மையாரும் வேறு.

எப்போதும் ஒரே கருத்துடையவராக அவர் இருந்திருப்பாராயின் அப்போதே நாட்டின் தேசிய இனப் பிரச்சினைக்கு நீதி, நியாயமான தீர்வு கிட்டியிருக்கும். கண் கெட்ட பின்னர் இப்போது சூரிய நமஸ்காரம் பயனற்றதல்லவா?

# இலங்கை-சீனா இடையே கட்டமைப்பு உடன்படிக்கை

## கைச்சாத்திட அரசு தீர்மானம்

கொழும்பு, மே 12

முதலீட்டு மேம்பாடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு விடயங்களில் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் கட்டமைப்பு உடன்படிக்கை ஒன்றைக் கைச்சாத்திடுவதற்கு அரசு இணங்கியுள்ளது.

இதற்காக அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் மலிக் சமரவிக்ரமவால் முன்வைக்கப்பட்ட யோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

முதலீட்டு மேம்பாடு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை விருத்தி செய்து கொள்ளும் நோக்கில் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்று சீன வணிக அமைச்சுக்கும், இலங்கை அரசாங்கத்தின் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சுக்கும் இடையில் 2016-04-07ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

அந்த ஒப்பந்தத்தின் கீழ் முன்னுரிமை அளிக்கப்படுகின்ற வேலைத்திட்டங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு உடன்படிக்கை ஒன்றில் நடுத்தர மற்றும் நீண்டகால அபிவிருத்தித் திட்ட அடிப்படையில் இருநாடுகளுக்கும் இடையில் கைச்சாத்திடுவதற்கும் அமைச்சர் மலிக் சமரவிக்ரமவால் இந்த யோசனைகள் முன்வைக்கப்பட்டுள்ளன. (எ)

# இரட்டைக்குடியுரிமை எம்.பிக்களை தேடிக்கண்டறிய 'பவ்ரல்' தீர்மானம்!

கொழும்பு, மே 12

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றில் அங்கம் வகிக்கின்றார்களா என்று கண்டறியப் போவதாக தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களில் ஒன்றான 'பவ்ரல்' அறிவித்துள்ளது.

இதற்காக நாடாளுமன்றில் அங்கம் வகிக்கும் 225 உறுப்பினர்களதும் விவரங்கள் திரட்டப்பட உள்ளன. தகவல் அறிந்து கொள்ளும் சட்டத்தின் அடிப்படையில் இந்தத் தகவல்கள் திரட்டப்படும் என்று பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.'

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இவ்வாறு இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் நாடாளுமன்றில் அங்கம் வகித்தால் அது தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்த வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

இரட்டைக் குடியுரிமை உடையவர்கள் இலங்கையின் சட்ட திட்டங்களை உருவாக்க தகுதியுடையவர்கள் அல்லர். இரட்டைக் குடியுரிமை உடைய நாடாளுமன்ற உறுப்பினர் இரண்டு நாடுகளுக்கும் இடையிலான பிணக்கு ஒன்றின் போது எந்த நாட்டுக்கு ஆதரவாகச் செயற்படுவார் என்பதனை உறுதியாகக் கூறமுடியாது.

தமது நாட்டின் மீது நம்பிக்கையில்லாத காரணத்தாலேயே நபர் ஒருவர் வெளிநாட்டுக் குடியுரிமையைப் பெற்றுக்கொள்கின்றார்.- என்றார். (எ)

# நாட்டை அபிவிருத்தியடையச்செய்ய பேதங்களைத் துறந்து செயலாற்றுக!

## அர்ஜுன எம்.பி. அழைப்பு



கொழும்பு, மே 12

நாட்டை அபிவிருத்திப் பாதையில் முன்னெடுத்துச் செல்வதற்கு பேதங்களைத் துறந்து செயற்படுவது அவசியம் என்று துறைமுகங்கள் மற்றும் கப்பற் துறை அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

சுவர்ணசிறி கொலந்தொட்ட வெசாக் வலயம் மற்றும் காலி முகத்திடலில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள லேசர் வெசாக் அலங்காரப் பந்தல் என்பன ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து அந்த நிகழ்வில் அமைச்சர் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இலங்கைத் துறைமுக அதிகார சபை அனைத்து மக்கள் இனத்தையும் நன்கு வெளிப்படுத்துகின்ற நிறுவனமாகும்.

எங்களுடைய துறைமுக அதிகார சபை சிங்களம், தமிழ், முஸ்லிம், பறங்கியர் ஆகிய அனைத்து மக்கள் இனத்தவரையும் கொண்டுள்ளது. அவர்கள் அனைவரும் சகோதரத்துவத்துடனும் ஒத்துழைப்புடனும் பணியாற்றுகின்றார்கள். இது இலங்கைக்கு சிறந்த உதாரணமாகும்.

இந்த ஒற்றுமையை உலகுக்கு வெளிப்படுத்தும் வகையிலேயே துறைமுக அதிகார சபையால் கடந்த டிசெம்பரில் மிகப்பெரிய நத்தார் மரத்தையும், தற்போது உலகின் முதலாவது லேசர் வெசாக் அலங்காரப் பந்தலையும் நிர்மாணித்துள்ளோம்.- என்றார். (எ)

விலங்கு விசர் நோயை இல்லாது ஒழிப்போம்!

நம்பகமான ஒருவரிடமிருந்து வளர்ப்பிற்காக நாய்க் குட்டிகளை பெற்றுக் கொள்வோம். அநாதரவாக வீதிகளில் விடப்பட்டுள்ள குட்டிகளை எடுத்து வளர்ப்பதனைத் தவிர்ப்போம்.

நீர் வெறுப்பு நோய் ஏற்பட்டால் மரணம் நிச்சயம். ஆனாலும் அது தடுக்கப்படக் கூடியதே.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

13.05.2017
சனிக்கிழமை

நட்சத்திரம்: கேட்டை மு.இ 10.19 வரை
திதி: துதியை காலை 7.09 வரை
சுபநேரம் : 2.54 - 4.24 வரை
இராகுகாலம்: 8.54 - 10.24 வரை

# இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல் இசை நாடக அரங்கு -2017



**மூன்றாம் நாள் நிகழ்வுகள்**

**இடம்:**
**இலங்கைவேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கம்**

**நாள்:**
**இன்று (12.05.2017)**
வெள்ளிக்கிழமை

**நேரம்: மாலை 4.30 மணி**

தலைவர்
**செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன்**
(பிரதி அதிபர் - கோப்பாய் ஆசிரிய கலாசாலை)

பிரதம விருந்தினர்
**வைத்திய கலாநிதி த.பேரானந்தராஜா**
(பொது வைத்திய நிபுணர் - யாழ். போதனா வைத்தியசாலை)

இணுவையூர் கரிகரன் குழுவினர் வழங்கும்
**மங்கல இசை**

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| கீத கலாசிகரம் | தாவடியூர் |
| P.S. கரிகரன் | இ.குகன் |
| தமிழ்நாடு திருக்கோலிலூர் | பதுளையூர் தவில் இளம் தென்றல் |
| சிலம்பரசன் | பா.உதயசங்கர் |

**மங்கல விளக்கேற்றல்**

**திருமுறை ஓதுதல்** : செல்வன்கள் சி.மனாமிர்தன், சி.சுபாம்சன், சி.கோபிராம்

**ஆசியுரை** : மௌலவி அப்புல் அசீஸ் (கா.சிமி)
(தலைவர் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா யாழ்.கிளிநொச்சி மாவட்டம்)

**வாழ்த்துரை** : கலாநிதி கலைவாணி இராமநாதன்
(ஓய்வு நிலை பேராசிரியர் யாழ். பல்கலைக்கழகம்)

**தலைமையுரை** : தலைவர்

சைவ வித்தியா விருத்திச் சங்க "கருணை இல்லம்" மாணவிகள் வழங்கும்

**வரவேற்பு நடனம்**



நட்டுவாங்கம் : திருமதி யாழினி ரதீஸ்வரன்
பாட்டு : திருமதி வத்சலா கருணாகரன்
வயலின் : திருமதி இந்துமதி தயாபரன்
மிருதங்கம் : திரு.T.சிவகுமார்

**இசையரங்கம்**



பாட்டு : செல்வி பாலமுருகன் தரங்கினி
வயலின் : செல்வி பிரிசில்லா ஜோர்ஜ்
மிருதங்கம் : திரு.ஞா.வசந்த்
கெஞ்சிரா : திரு.எஸ்.டிலுக்சன்

நீர்வையூர் "பொன் சக்தி" கலாகேந்திரா மாணவிகள் வழங்கும்

**நாட்டியாஞ்சலி**



நட்டுவாங்கம் : திருமதி சத்தியபிரியா கஜேந்திரன்
பாட்டு : திருமதி தமிழினி மயூரன்
வயலின் : திரு.அ.ஜெயராமன்
மிருதங்கம் : திரு.க.கஜன்

சுவாமி விபுலானந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் மாணவிகள் வழங்கும்

**வள்ளி திருமணம்** (நாட்டிய நாடகம்)



**கலைஞர்கள் கௌரவிப்பு**
**பிரதம விருந்தினர் உரை**

கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கத்தின்
**"யாரோடு நோகேன்"**
நெறியாள்கை : கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸ்

**நன்றியுரை**

அனுசரணை:
**கிருபா லேணர்ஸ்** (KIRUBAA LEARNERS)
தலைமைக் காரியாலயம்
226, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
021 222 4353
021 492 3200



# முள்ளிவாய்க்காலில் உயிரிழந்த மக்களின் ஞாபகார்த்த நினைவுக்கல்

முல்லைத்தீவு, மே 12

இறுதி யுத்தத்தின்போது முள்ளிவாய்க்கால் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் உயிரிழந்த 500 பொது மக்களின் நினைவாக நினைவுக்கல் நடப்படவுள்ளது.

முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் உள்ள கிறிஸ்தவ ஆலயத்தில் இந்த நினைவுக் கல்லை அமைப்பதற்கான வேலைகள் தற்போது இடம்பெற்று வருகின்றன.

யுத்தத்தில் அகப்பட்டு மரணித்த பொதுமக்களின் நினைவாக இந்த ஆலயத்தின் காணியில் நினைவுக்கல் அமைக்கப்படவுள்ளது. இதற்கமைவாக



முதல்கட்டமாக 500 பொதுமக்களின் நினைவாக நினைவுக் கற்களில் பெயர் பொறிக்கும் நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-100)

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுக்கான ஏற்பாடுகள் தீவிரம்

வடமாகாண சபையின் ஏற்பாட்டில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் கிழக்குப் பகுதியில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாடுகள் முல்லைத்தீவு மாவட்ட வட மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தலைமையில் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன.

இறுதி யுத்தம் நடைபெற்ற இடத்தில் நினைவேந்தல் நிகழ்வு நடைபெறவுள்ள நிலையில் அந்த இடத்தில் துப்புரவுப் பணிகளில் மக்கள் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அஞ்சலி நிகழ்வுக்கு மக்களை அழைத்துச் செல்வதற்கான இலவசப் போக்குவரத்து ஒழுங்குகளும் செய்யப்படவுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-100)

# பிலியந்தலை சம்பவத்துக்கு பாதாளக் குழுவே காரணம்!

## பொலிஸாருக்குத் தகவல் கிடைத்துள்ளதாம்

கொழும்பு, மே 12

பிலியந்தலையில் இடம் பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம், தெற்கிலுள்ள பாதாள உலகக் குழுத் தலைவர் மடூஷ் மற்றும் தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டுள்ள வெலே சுதா ஆகியோரின் திட்டத்தின் கீழ் இடம் பெற்ற ஒரு நடவடிக்கை என்று பொலிஸாருக்கு தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கு கடந்த 9 ஆம் திகதி இரவு முன்னெடுக்கப்பட்ட சுற்றி வளைப்புக்குச் சென்ற பொலிஸார் மீது மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டிருந்தனர்.

இதில் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டார் ஆறு பேர் காயமடைந்தனர்.

குற்றவாளிகளைப் பிடிப்பதற்கு 11 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# வரணிச் சந்தையில் நாய்களால் தொல்லை

வரணிச் சந்தைப் பகுதியில் கட்டாக் காலி நாய்கள் பெரும் தொல்லைகளைக் கொடுத்து வருகின்றன என்று வியாபாரிகளும் வர்த்தகர்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

சந்தைகளிலும், கடைகளின் முன்பாகவும் இரவு நேரங்களில் படுத்துறங்கும் நாய்கள் அப்பகுதிகளில் அசிங்கம் செய்வதால் காலையில் வியாபாரத்துக்கு வருவோர் பெரும் அசௌகரியங்களுக்கு ஆளாகிவருகின்றனர் என்று அவர்கள் கூறுகின்றனர்.

அது மட்டுமன்றிப் பொருள்களை வாங்குவதற்குச் சந்தைக்கு வருவோர் நாய்க் கடிக்கு ஆளாகும் நிலைக்கும் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-25)

# ரஷ்யக் காதலிக்காக திருடிய இலங்கைக் காதலன்!

## பொலிஸாரிடம் வசமாக மாட்டினார்!!

கொழும்பு, மே 12

ரஷ்ய நாட்டுக் காதலிக்காகக் குற்றச் செயல்களில் ஈடுபட்ட இலங்கைக் காதலன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

காதலிக்கான செலவினங்களை சமாளிக்கும் வகையில் திருட்டு மற்றும் போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

காலி ஊழல் குற்றத் தடுப்புப் பிரிவு அதிகாரிகளால் இந்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலிஹபராதுவ பிரதேசத்திலுள்ள வைத்தியரின் வீடொன்றுக்குள் நுழைந்து இந்த இளைஞன், நான்கு லட்சத்துக்கும் அதிக பெறுமதி கொண்ட தங்க நகைகளைத் திருடியுள்ளார். இந்தச் சம்பவம் அங்கு பொருத்தப்பட்டிருந்த கண்காணிப்புக் கமராவில் பதிவாகியுள்ளது.

அதற்கமைய விசாரணை மேற்கொண்ட பொலிஸ் குற்றத் தடுப்பு பிரிவு அதிகாரிகளால் இந்தச் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது, தனது ரஷ்ய நாட்டுக் காதலிக்கான செலவுகளை மேற்கொள்வதற்காக இந்தத் திருட்டுச் சம்பவத்தில் தாம் ஈடுபட்டுள்ளார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

சந்தேக நபரை காலி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)

# கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சிலர் ஐ.தே.கவுக்கு மறைமுக ஆதரவு!

## யோகேஸ்வரன் எம்.பி. சாடல்



மட்டக்களப்பு,மே 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் சிலர், ஐக்கிய தேசியக் கட்சிக்கு மறைமுகமாக ஆதரவு வழங்கி வருகின்றனர்.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.யோகேஸ்வரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

ஐக்கிய தேசியக் கட்சியை வளர்க்க வேண்டும் என்று விரும்புகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சில ஆதரவாளர்களுக்கு கல்குடாவில் எரிசாராய உற்பத்தி நிலையம் அமைக்கப்படுவதில் சந்தோஷம் இருக்கும்.

மேற்படி நிலையத்துக்கு முஸ்லிம் சமூகம் எதிர்ப்புத் தெரிவிக்கின்றது. எதிர்க்கட்சித் தலைவரும் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன், தமிழ் -முஸ்லிம் உறவில் மிக உறுதியாக இருப்பவர். ஆகவே, இரண்டு சமூகங்களும் இணைந்து எதிர்க்கின்ற இந்த மதுபான நிலையம் இங்கு இயங்குவதற்கு அவர் ஆதரவு வழங்கமாட்டார்.

இந்த மதுபான உற்பத்தி நிலையம் தொடர்பான தகவல்களை வெளிக்கொண்டு வந்து, அதன் நிர்மாணப் பணியை நிறுத்துவதற்காக வாழைச்சேனைப் பிரதேச அபிவிருத்திக் குழுவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, இந்த நிலையத்தால் ஏற்படும் பாதிப்புக்களைச் சுட்டிக் காட்டி, மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 6 நாடாளுமன்ற உறுப்பினர்களும், 6 மாகாண சபை உறுப்பினர்களுமாக 12 பேர் கையொப்பம் இட்டு ஜனாதிபதிக்கு மகஜர் அனுப்பி உள்ளோம். - என்றார். (ச)

## 'அரசிடம் கூட்டமைப்பு பேரம் பேசவில்லை'!

### கிழக்குப் பிரமுகர் தெரிவிப்பு



கல்முனை,மே 12

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்த அபிவிருத்தியையும் மையப்படுத்தி இலங்கை அரசிடம் பேரம் பேசவில்லை எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

கல்முனை-பெரியநீலாவணை விஷ்ணு மகாவித்தியாலயத்தின் விளையாட்டுப் போட்டி நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

'கிழக்கு மாகாணத்தைப் பொறுத்த வரையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நல்லிணக்க அடிப்படையில் தீர்வு பெற வேண்டும் என்பதற்காகவே அரசுடன் சேர்ந்து இயங்குகிறது. அதனை சிலர் விமர்சிக்கிறார்கள். இந்த நாட்டிலே ஆட்சி மாற்றம் ஏற்பட்டுள்ளது. எனினும், வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருக்கின்றது' என அவர் மேலும் தெரிவித்தார். (ச)



## நியமனம் வழங்குவது தொடர்பில் அரசு அக்கறை காட்டவேண்டும்!

### மட்டு. மாவட்ட பட்டதாரிகள் தெரிவிப்பு

மட்டக்களப்பு ,மே 12

ஏனைய பிரச்சினைகளில் அக்கறை காட்டும் அரசு பட்டதாரிகளுடைய நியமனம் தொடர்பில் முழு மூச்சுடன் அக்கறை காட்டவேண்டும்.

-இவ்வாறு மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுவரும் சத்தியாக்கிரக போராட்டம் தொடர்ச்சியாக நடைபெற்றுவருகின்றது.

இது தொடர்பில் பட்டதாரிகள் தெரிவிக்கையில்-

எமது தொழில் உரிமையை வலியுறுத்தி தொடர்ச்சியாகப் போராடி வருகிறோம். ஆனால், எமது நிலைமை தொடர்பில் முறையான நடவடிக்கைகள் இதுவரையில் மேற்கொள்ளப்பட்டனவா என்ற சந்தேகமே ஏற்பட்டுள்ளது.

போராட்டத்தைத் தொடர்ந்து தொழில் நியமனங்களுக்கான ஆளணி அனுமதி கிடைத்துள்ளது. ஆனால், இது வரையில் திறைசேரி அனுமதி வழங்கவில்லை. இந்தப் பிரச்சினை தொடர்பில் பிரதமர், ஜனாதிபதி ஆகியோர் கரிசனையுடன் செயற்பட வேண்டும்.

போராட்ட இடத்துக்கு விஜயம்செய்த பிரதமரின் ஆலோசகர்கள் ஒரு மாத கால அவகாசம் கோரியிருந்தனர். ஆனால், அந்த ஒரு மாத காலம் கடந்துவிட்டது. இதுவரையில் உறுதியான பதில் வழங்கப்படவில்லை.

இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதியான நடவடிக்கை அரசால் எடுக்கப்பட்டிருக்குமாயின் அது தொடர்பில் உறுதிமொழியை வழங்குவதற்கு ஏன் அரசு தயக்கம் காட்டுகின்றது.- என்றனர். (ச)

## கடலில் மூழ்கி சிறுவன் சாவு!

திருகோணமலை மட்கோ பகுதியில், கடலில் மூழ்கி நேற்று வியாழக்கிழமை சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.

மட்கோ முஹம்மதியா நகரைச் சேர்ந்த டி.எப்.சர்பான் (வயது-16)என்ற சிறுவனே உயிரிழந்தான்.

பிரஸ்தாப சிறுவன் நண்பர்களுடன் சேர்ந்து கடலில் நீராடிக்கொண்டிருக்கும் போதே இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ச)

## முதலையிடம் அகப்பட்டு இளைஞர் சாவு!

மட்டக்களப்பு, மே 12

மட்டக்களப்பு முறுத்தானைப் பிரதேசத்திலுள்ள ஆற்றில் நீராடிக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் முதலையிடம் அகப்பட்டு உயிரிழந்துள்ளார்.

இளையதம்பி தங்கராஜா (வயது-20) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை முறுத்தானை ஆற்றில் நண்பர்களுடன் நீராடிக் கொண்டிருந்த போதே இவரை முதலை பிடித்துள்ளது.

இதனையடுத்து, நண்பர்களும் உறவினர்களும் அவரைக் காப்பாற்றுவதற்கு முயற்சித்தபோதும் அது பலனளிக்கவில்லை. இந்நிலையில், அவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார். (ச)

## டெங்கு காய்ச்சலால் காத்தான்குடியில் சிறுமி உயிரிழப்பு!

காத்தான்குடி, மே 12

மட்டக்களப்பு காத்தான்குடியில் டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட சிறுமி ஒருவர், நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை உயிரிழந்தார் என மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர், டாக்டர் எம்.எஸ்.இப்றாலெப்பை தெரிவித்துள்ளார்.

காத்தான்குடியைச் சேர்ந்த பாத்திமா சஹ்றா (வயது-12) என்ற சிறுமியே உயிரிழந்தவர் ஆவார்.

டெங்குக் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட பிரஸ்தாப சிறுமி, காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்புப் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு கடந்த 21 நாள்களாகச் சிகிச்சை பெற்றுவந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மட்டக்களப்பில் டெங்குக் காய்ச்சலினால் 6 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச)

### பத்திரிகை ஊடாக மக்களிடம் மன்னிப்புக் கோருமாறு

## தவறிழைத்த மருந்தாளருக்குத் திருகோணமலை நீதிமன்றம் உத்தரவு!

கிண்ணியா,மே 12

திருகோணமலை கிண்ணியா பகுதியைச் சேர்ந்த, தவறிழைத்த மருந்தக உரிமையாளர் ஒருவருக்குத் தினசரிப் பத்திரிகைகளின் முன்பக்கத்தில் மன்னிப்புச் செய்தியை வெளியிட்டு பொதுமக்களிடம் மன்னிப்புக் கோருமாறு, திருகோணமலை நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

தேசிய மருந்துகள் ஒழுங்குபடுத்தும் அதிகார சபையின் திருகோணமலை பிராந்திய உணவு மற்றும் மருந்துப் பரிசோதகர்களால், மருந்தகங்கள் சுற்றி வளைக்கப்பட்ட போது, குற்றங்களுக்கு இலக்கான மேற்படி மருந்தக உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. இந்த வழக்கு கடந்த செவ்வாய்க்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் போதே, திருகோணமலை நீதிவான் மேற்படி உத்தரவைப் பிறப்பித்தார்.

அதிகார சபையின் உரிமம் பெறாமல் மருந்தகத்தை நடத்தியமை, மருந்தாளர் அல்லாதவரினால் மருந்துகள் விற்பனை செய்யப்பட்டமை மற்றும் காலாவதியான மருந்துகள் விற்பனை செய்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் கீழேயே மேற்படி மருந்தக உரிமையாளருக்கு எதிராக, வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இவ்வாறான தவறுகள் இனிமேலும் நடைபெறாமல் இருப்பதற்காக, தினசரிப் பத்திரிகைகள் மூன்றின் முன் பக்கங்களில் மன்னிப்புச் செய்தியை வெளியிட்டு, பொதுமன்னிப்புக் கேட்க வேண்டும் எனவும், அந்தப் பத்திரிகைகளின் பிரதிகளை நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் நீதிவான் மேலும் உத்தரவிட்டுள்ளார். (ச)

# காலி கடற்படைத் தளத்தில் நெதர்லாந்தின் ஆயுதக்களஞ்சியம்!

கொழும்பு, மே 12

இந்தியப் பெருங்கடல் வழியாகச் செல்லும் தமது நாட்டுக் கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிப்பதற்குத் தேவையான ஆயுதங்களை, நெதர்லாந்து அரசு காலி கடற்படைத் தளத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கவுள்ளது.

இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் இது தொடர்பான புரிந்துணர்வு உடன்பாடு விரைவில் கையெழுத்திடப் படவுள்ளது.

சோமாலிய கடற்கொள்ளையர்களை எதிர்கொள்ளும் வகையில், தமது நாட்டுக் கொடியுடன் செல்லும் கப்பல்களுக்குப் பாதுகாப்பு வழங்குவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு இலங்கையுடன் புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றில் நெதர்லாந்து கையெழுத்திடவுள்ளது.

இலங்கையின் காலித் துறைமுகத்தில் இருந்து நெதர்லாந்து பாதுகாப்புப் பிரிவினர், கப்பல்களுக்குப் பாதுகாப்பு அளிக்கவுள்ளனர்.

இதற்காக, காலி கடற்படைத் தளத்தில் தேவையான ஆயுதங்களைக் களஞ்சியப்படுத்தி வைப்பது தொடர்பாக புரிந்துணர்வு உடன்பாடு செய்து கொள்ளப்படவுள்ளது.

இதுகுறித்து இரண்டு நாடுகளினதும் பாதுகாப்பு அமைச்சுக்களுக்கு இடையில் பேச்சுகள் நடத்தப்பட்டுள்ளன.

கடற்கொள்ளைக்கு எதிரான நடவடிக்கைகளுக்கான பின்புலத் தளமாக சிங்கப்பூரையே நெதர்லாந்து பயன்படுத்தி வந்துள்ளது. எனினும், இதன் பயன்பாடுகள் குறைந்துள்ள நிலையில், காலி கடற்படைத் தளத்தைப் பயன்படுத்தலாம் என்று இலங்கைக் கடற்படை அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

நெதர்லாந்து கடற்படைத் தளபதி லெப்.ஜெனரல் ரொப் வெர்கேர்க் கடந்த ஆண்டு இறுதியில் நடந்த காலி கலந்துரையாடல் என்ற கடற் பாதுகாப்பு மாநாட்டுக்காக இலங்கைக்கு வந்திருந்த போது காலி கடற்படைத் தளத்தை ஆய்வு செய்திருந்தார்.

அதேவேளை, இலங்கைக்கும் நெதர்லாந்துக்கும் இடையில் செய்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள உடன்படிக்கை தொடர்பாக, கடந்த 9ஆம் திகதி இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில், பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அமைச்சரவைப் பத்திரம் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தார்.

இலங்கையின் தளத்தைப் பயன்படுத்துவதற்கு நெதர்லாந்து கட்டணம் செலுத்தும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

# பௌத்தர் அல்லாத ஒருவரே சர்வதேச வெசாக்கில் அதிதி!

## குற்றம் சாட்டுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, மே 12

பௌத்தர் அல்லாத ஒருவர் சர்வதேச வெசாக் தினத்தில் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கிறார் என்று தூய ஹெல உறுமய கட்சியின் தலைவர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.

சர்வதேச வெசாக் தின நிகழ்வில் கலந்துகொள்வதற்காக இந்தியப் பிரதமர் மோடி இலங்கைக்கு விஜயம் செய்தார். அவரது விஜயம் குறித்துக் கருத்துத் தெரிவிக்கையிலேயே உதய கம்மன்பில மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

உலகில் பௌத்த நாடுகள் இருக்கின்ற நிலையில், மகாயான, தந்திரயான கொள்கை கொண்ட பௌத்த தலைவர்கள் பலர் உலகில் உள்ளபோது, புத்தர் பெருமானின் பிறந்த தினத்தை சர்வதேச ரீதியில் கொண்டாடுவதற்கான நிகழ்வில், பௌத்தர் அல்லாத ஒருவரை அழைத்திருப்பது விசனத்துக்குரிய ஒன்றாகும்.

அரசின் போக்கு என்ன என்பது இதன் மூலம் தெளிவாகிறது. உலகில் பௌத்தர்கள் இல்லை என்பதை உலகிற்கு சொல்ல இலங்கை அரசு முயற்சிக்கிறது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# இலங்கையில் மோடிக்கு பாதுகாப்பு வழங்கும் கறுப்புப் பூனைகள்!



கொழும்பு, மே 12

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்குப் பாதுகாப்பு வழங்கும் கறுப்புப் பூனை கொமாண்டோக்கள் கொழும்புக்கு வந்துள்ளனர் என்று கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஐ.நா. வெசாக் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி இரண்டு நாள்கள் விஜயமாக நேற்று மாலை கொழும்பு வந்துள்ளார்.

இன்று பிற்பகல் வரை இலங்கையில் தங்கியிருக்கும் இந்தியப் பிரதமருக்கு பாதுகாப்பு அளிப்பதற்கான பணிகளில் இலங்கை அரசு 6000 பொலிஸாரைப் பணியில் அமர்த்தியுள்ளது.

எனினும், இந்தியப் பிரதமருக்கான தனிப்பட்ட பாதுகாப்புப் பணியில் கறுப்புப் பூனைகள் எனப்படும் இந்தியாவின் மிக முக்கிய பிரமுகர்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் கொமாண்டோக்களே ஈடுபடுத்தப்படுவர்.

இந்தியப் பிரதமர் இலங்கையில் தங்கியிருக்கும் போதும், அவர் பயணம் செய்யும் இடங்களிலும் பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்ளும் வகையில் ஏற்கனவே, கறுப்புப்பூனை கொமாண்டோக்களின் அணியொன்று கொழும்புக்கு வந்துள்ளது.

அத்துடன் இந்தியப் பிரதமர் பயணம் செய்யும் மற்றும் அவருக்குப் பாதுகாப்பு அளிக்கும் நான்கு எம்.ஐ.-17 உலங்கு வானூர்திகளும் ஏற்கனவே, கொழும்புக்கு வந்திருந்தன.

இவை ஹட்டனில் கடந்த இரண்டு நாட்களாகத் தரையிறங்கி இந்தியப் பிரதமரின் வருகைக்கான ஒத்திகைகளில் ஈடுபட்டிருந்தன.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்!



கொழும்பு, மே 12

கட்டுநாயக்க விமான நிலையத்தில் பாதுகாப்புப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

சர்வதேச வெசாக் நிகழ்வுகளை முன்னிட்டு நேற்றைய தினம் வெளிநாட்டு அரச தலைவர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்தத் தலைவர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஊடாகவே இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

எனினும், கட்டுநாயக்க விமான நிலையத்தில் வெசாக் நிகழ்வுக்கான எவ்வித ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

வெசாக் கொண்டாடும் வகையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் எவ்வித அலங்கரிப்புகளும் மேற்கொள்ளப்படவில்லை.

எனினும், பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது. ஆயுதம் தாங்கிய சிறப்பு அதிரடி படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

# கொழும்பில் இன்று பல வீதிகள் மூடப்படும்: ஒழுங்கைகள் ஊடாக பயணிப்பதிலும் சிக்கல்!

கொழும்பு, மே 12

சர்வதேச வெசாக் நிகழ்வை முன்னிட்டும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் இலங்கை விஜயத்தை முன்னிட்டும் கொழும்பு நகரின் பல வீதிகள் மூடப்படுகின்றன.

இந்திய பிரதமர் பயணிக்கும் பாதை வழியே அவர் பயணிக்கும் சமயம் வேறு எவரும் பயணிக்க அனுமதி வழங்கப்படாது என்று பாதுகாப்பு தரப்பு அறிவித்துள்ளது.

இந்த நிலையிலேயே கொழும்பின் பல வீதிகள் மூடப்படுகின்றன.

குறிப்பாக, கட்டுநாயக்க விமான நிலையத்தின் ஒரு பக்க ஒழுங்கை, பேலிய கொடை முதல் பேஸ்லைன் வீதியூடாக பயணித்து தாஜ் சமுத்திரா ஹோட்டல் வரையிலான வீதிகள் மற்றும் அப் பிரதான வீதிகளுடன் இணையும் அனைத்து ஒழுங்கைகளும் முற்றாக மூடப்படுகின்றன.

இது தொடர்பில் விஷேட போக்குவரத்து திட்டம் ஒன்று அமுல்படுத்தப்படுகிறது.

இன்றைய தினம் காலை 09.05 மணிக்கு - தாஜ் சமுத்திரா ஹோட்டல், காலி முகத் திடல் சுற்றுவட்டம், கொள்ளுப்பிட்டி சந்தி, லிபர்ட்டி சந்தி, சுதந்திர சதுக்க சுற்றுவட்டம், சுதந்திர மாவத்தை, பௌத்தாலோக மாவத்தை, பௌத்தாலோக மாவத்தை ஊடாக பண்டார நாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம் வரையான வீதிகள் மூடப்படவுள்ளன.

# மோடியின் வருகையால் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்த்துள்ள குளவிக் கூடுகள்!

கொழும்பு, மே 12

இந்தியப் பிரதமர் மோடியின் வருகையை முன்னிட்டு மலையகத்தில் குளவிக் கூடுகள் அகற்றப்பட்ட சம்பவம் பலரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

மோடியின் விஜயத்தை முன்னிட்டு மலையகத்தில் பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

அதன் ஒரு கட்டமாக தேயிலைத்தோட்டத்திலிருந்து இரண்டு பெரிய குளவிக் கூடுகள் அகற்றப்பட்ட விடயம் சர்வதேச ஊடகங்களின் கவனத்தை ஈர்த்துள்ளது.

சர்வதேச வெசாக் தினத்தில் பங்கேற்பதற்காக இந்தியப் பிரதமர் நேற்று மாலை இலங்கை வந்தார். அவரை வரவேற்பதற்கு கடந்த ஒரு வாரமாக பல்வேறு பாதுகாப்பு வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்த வகையில் ஹட்டன் பொலிஸாரால் எடுக்கப்பட்ட சிரமமான நடவடிக்கைகளை பல சர்வதேச ஊடகங்கள், பல்வேறு விதமாக செய்தி வெளியிட்டுள்ளன.


அந்த வகையில், ஆயிரக்கணக்கான குளவிகளை அகற்றுவதற்காக ஒரு தனிப்பட்ட தேனீப் பாதுகாப்பு அமைப்பு இந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.

வலிமையான கொடுக்குகளைக் கொண்ட குளவிகள் இலங்கையில் காணப்படுகின்றன. மலையகத் தேயிலை தோட்டங்களில் பெரும்பாலும் இந்தக் குளவிகள் மக்கள்மீது தாக்குதல்கள் மேற்கொள்கின்றன. இதில் தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்படுகின்றனர் என்றும் ஓர் ஊடகம் சுட்டிகாட்டியுள்ளது.

முக்கிய பிரமுகளுக்காக அந்த பகுதியில் குளவிகள் தற்போது அழிக்கப்பட்டுள்ளன என்று மற்றொரு ஊடகம் குறிப்பிட்டுள்ளது.

மோடி விஜயம் செய்யும் சந்தர்ப்பத்தில் அங்கிருந்து அகற்றப்பட்ட குளவிகள் திரும்ப வந்துவிடக் கூடாது என்பதை உறுதிசெய்வதற்காக அந்தப்பகுதியில் இன்னுமொரு குழு தயாராக உள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

# 198 கிலோ ஹெரோயினுடன் சிலாபத்தில் ஒருவர் கைது!



புத்தளம், மே 12

சிலாபத்தில் 198 கிலோ கிராம் நிறையுடைய ஹெரோயின் போதைப் பொருளுடன் சந்தேகநபர் ஒருவர் புத்தளம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலக புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது நேற்று அதிகாலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் தெரியவந்துள்ளது.

அந்தச் சந்தேக நபர் கடல் வழியாக ஹெரோயின் போதைப்பொருளை முத்துபந்திய தீவுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து டிபெண்டர் ரக சொகுசு வாகனத்தில் கொழும் புக்கு எடுத்துச் சென்று கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டார் என்று சுற்றி வளைப்பை நடத்திய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட போதைப்பொருள், வாகனம் என்பன தற்போது சிலாபம் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

புத்தளம் பிரதிப் பொலிஸ் மா அதிபர் சம்பிக்க சிறிவர்தனவின் ஆலோசனைப் படி இந்தச் சுற்றிவளைப்பு நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# தினசரி ராசி பலன் 12.05.2017

ஏவிளம்பி வருஷம் 2017 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 29ஆம் நாள் துவிதியைத்திதி முழுவதும். நட்சத்திரம் அனுஷம் இரவு 8.12 மணி வரை. பின்னர் கேட்டை. மரணயோகம் முழுவதும். ராகுகாலம் பகல் 10.33 மணி முதல் 12.06 மணி வரை. சுபநேரம் மாலை 5.54 மணி முதல் 7.23 மணி வரை. திவசம் செய்ய வேண்டிய திதி. சித்திரை மாதநேய்பிறை துவிதியை. பிறந்த நட்சத்திர வழிபாடு. அனுஷம்.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** கவலையான நாள். பணவரவு குறையும். தொழிலில் பல இடையூறுகள் உண்டாகும். வியாபாரத்தில் பழைய முதலீடுகளால் நட்டமுண்டாகும்.

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள்வரவு மத்திமமாய் இருக்கும். புதிய முயற்சிகளைத் தவிர்ப்பது நன்று. கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**மிதுனம்:** யோகமான நாள். தனலாபம் பெருகும். வியாபாரிகளுக்கு வெளிநாட்டு ஒப்பந்தங்கள் கிடைக்கும். வீடு, வாகனம் வாங்கும் யோகமுண்டு.

**கடகம்:** இன்பமான நாள். பணம் தாராளமாகப் புழங்கும். உறவுகள் மேம்படும். நினைத்த காரியம் நடக்கும்.

**சிம்மம்:** சஞ்சலமான நாள். குடும்பத்தில் குழப்பம் மிகுந்து காணப்படும். தொழிலில் கடின உழைப்பு இருக்கும். கொடுக்கல் வாங்கலில் சிக்கல் உண்டாகும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. தேவையற்ற செலவுகளால் கடன்படநேரும். வர்த்தகம் சுமாராக நடக்கும்.

**துலாம்:** சபீட்சமான நாள். பணபலம், மனபலம் அதிகரிக்கும். அசையாச் சொத்துக்கள் கைக்கு வந்துசேரும்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். பிரிந்த குடும்பங்கள் ஒன்று சேரும். பெண்களின் திருமணம் மனம்போல் ஒப்பேறும்.

**தனுசு:** யோகமான நாள். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். வியாபாரத்தில் போட்டிகளின் அதிகரிப்பால் வருமானம் குறையும்.

**மகரம்:** நன்மையான நாள். குடும்ப ஒற்றுமை நீடிக்கும். வியாபாரம் செழிப்படையும். உத்தியோகத்தர்களின் கோரிக்கைகள் நிறைவேறும்.

**கும்பம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. எடுக்கும் கருமங்கள் தடை, தாமதமாகும். கொடுக்கல், வாங்கலில் அவதானம் தேவை.

**மீனம்:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. இதுவரை நோயால் அவதிப்பட்டவர்கள் நோய் நீங்கி, ஆரோக்கியமடைவார்கள்.

சந்திராட்டமநாள்: அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகாரியங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.

# கொழும்புத் துறைமுக நகரத்தால் 80 ஆயிரம் இலங்கையருக்கு தொழில் வாய்ப்புக் கிடைக்குமாம்!

## இவ்வாறு கூறுகிறது சீனா

கொழும்பை அண்மித்த கடலை நிரப்பி அமைக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரம் ஆசியாவின் பிரதான வர்த்தக மையமாக மாற்றமடைவது மாத்திரமன்றி 80 ஆயிரம் இலங்கைப் பிரஜைகளுக்கு புதிய வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் என்று சீனா தெரிவித்துள்ளது.

எனவே, சீனாவால் நிர்மாணிக்கப்படும் கொழும்புத் துறைமுக நகரால் இலங்கைக்கே உச்சபட்ச நன்மைகள் கிடைக்க உள்ளன என்று கொழும்புத் துறைமுக நகர நிர்மாணப்பணிகளுக்குப் பொறுப்பாக இருக்கும் சீன நிறுவனமான சீனத் தொலைத் தொடர்புகள் மற்றும் கட்டட நிர்மாணத்துறை நிறுவனத்தின் துணைத்தலைவர் சன் ஷியூ தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீனாவின் பட்டுப்பாதைத் திட்டத்தின் ஓர் அங்கமாக கொழும்புத் துறைமுக நகர நிர்மாணப்பணிகளை 40 லட்சம் அமெரிக்க டொலர் செலவில் சீன நிறுவனம் ஆரம்பித்திருந்தது.

இதற்கமைய கொழும்புத் துறைமுகத்தை அண்மித்த 269 ஹெக்ரெயர் கடற்பிரதேசம் நிரப்பப்பட்டு 2 லட்சம் பேர் வாழக்கூடிய அதி நவீன அடுக்குமாடிக் கட்டடங்கள், வர்த்தக நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள், நட்சத்திர விடுதிகள், அதி சொகுசு அலுவலகங்கள், கண்காட்சிக் கூடங்கள், மாநாட்டு மண்டபங்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய வகையில் நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2030 ஆம் ஆண்டில் நிர்மாணித்து முடிக்கத் திட்டமிட்டுள்ள இந்தத் திட்டத்தால் இலங்கையைச் சேர்ந்த 80 ஆயிரம் பேருக்குத் தொழில் வாய்ப்புகள் கிடைக்கும்.

ஒட்டுமொத்தத்தில், இந்தத் திட்டத்தை எந்தவிதத் தடையும் இன்றி முன்னெடுப்பதால் சீனாவை விட அதிக நன்மைகள் இலங்கைக்கே கிடைக்கும். -என்றார்.

கொழும்புத் துறைமுக நகர நிர்மாணப் பணிகள் தொடர்பில் தொடர்ந்தும் இலங்கை அரசுக்கும் - சீனாவுக்கும் இடையில் இழுபறி நிலை நீடித்து வருவதை அடுத்தே சீன நிறுவனத்தின் துணைத் தலைவர் இந்தக் கருத் துக்களைத் தெரிவித்திருக்கின்றார்.

# ஆற்றுநீரைப் பயன்படுத்துவதற்கான புதிய திட்டம் விரைவில் அறிமுகம்

கொழும்பு, மே 12

ஆற்று நீரைப் பயன்படுத்துவதற்கான புதிய திட்டம் ஒன்றை அறிமுகப்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தியுள்ளது.

இதன்படி 2016 ஆம் ஆண்டில் ஆற்று நீரைப் பயன்படுத்துவதற்கான திட்டத்துக்கு 350 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. 2017 ஆம் ஆண்டில் இந்தத் திட்டத்துக்காக 380 கோடி ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது. நீரைப் பாய்ச்சி நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளுதல், நீர்ப் பிரதேசங்களைப் பாதுகாத்தல், வெள்ளத்தைக் கட்டுப்படுத்தல் முதலான திட்டங்கள் இதன்கீழ் நடைமுறைப்படுத்தப்பட உள்ளன.

இதுதொடர்பாக அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க சமர்ப்பித்த ஆவணத்துக்கு அமைச்சரவை அங்கீகாரமளித்துள்ளது.

2010 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஏற்பட்ட கடும்மழை காரணமாக கொழும்பில் ஏற்பட்ட பெரும் வெள்ளத்தின் பின்னர் கொழும்பு மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வேலைத்திட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டது. ஆனால் அது இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

# டெங்கு நோய்க்கான தடுப்பூசி விரைவில் இலங்கையில் அறிமுகம்

டெங்குக் காய்ச்சலைத் தடுப்பதற்கான தடுப்பூசி செலுத்தும் திட்டத்தை எதிர்காலத் தில் நாட்டில் அறிமுகம் செய்ய முடியும் என்று சுகாதார சேவை கள் பணிப்பாளர் நாயகம் ஜயசுந்தர பண்டார தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

'இந்தத் தடுப்பூசி, பிரான்ஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இதை இலங்கையில் பயன்படுத்த முடியுமா என்பது தொடர்பிலான ஆராய்ச்சிகள் இடம் பெற்றுவருகின்றன. இதற்குமேலதிகமாக, உலக நாடுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் மற்றுமொரு தடுப்பூசி தொடர்பிலும் ஆராய்ச்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின் றன'.-என்றார்.

# வாசகர் கருத்து மேடை



## கண்தானம் செய்து விழி இழந்தோர்க்கு வழி காட்டுவோம்...!

மனிதவாழ்வு நிச்சயமற்றது. இறப்பு உறுதியானது மனிதனின் சாவு எங்கே எப்படி எந்த வடிவத்தில் வரும் என்று எவராலும் கூறமுடியாது. மனிதனுடன் சாவும் பின் தொடர்வதை எவரும் மறுக்க முடியாது. சாவின் பின்னர் எமது உடலில் விலை மதிக்க முடியாத உறுப்புக்கள் உள்ளமையை மறந்து மண்ணுக்கும் அக்கினிக்கும் தாரை வார்த்து விட்டு வருவதே அநேகமாக நடைபெறுகிறது.

ஒரு மனிதன் தான் உயிருடன் இருக்கும்போது செய்ய முடியாத அளப்பரிய சேவையை தன் இறப்பின் பின் செய்யலாம். உதாரணமாக விழி இழந்தோர்க்கு தனது விழிகளை தானமாக வழங்கலாம். இதனால் இருட்டில் வாழும் ஒருவரை வெளிச்சத்துக்குக் கொண்டு வரலாம். ஒரு மனிதன் தன் இறப்பின் பின்பு தன் கண்ணைத் தானம் செய்வதால் அவனுக்கு எந்த விதப் பாதிப்போ ஏற்படப் போவதில்லை.

இப்படிப்பட்ட நல்ல காரியங்கள் மக்களைச் சென்றடைய மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒருவர் இறந்தால் கண்ணைத் தானம் செய்ய விரும்பும் பட்சத்தில் அந்தப் பகுதி கிராம அலுவலருக்கோ அல்லது அருகில் உள்ள மருத்துவமனையுடனோ தெரியப்படுத்தி உறவுகளே முன் வாருங்கள்.

'ஐயம் புகினும் செய்வன செய்' என்கிறார் தமிழ்ப்புலவர் ஔவையார். அதற்கமைய நாம் உயிருடன் இருக்கும் போது கூட செய்ய முடியாத மிகப்பெரிய தானமாக (சேவையாக) கண்தானம் செய்து இருட்டில் வாழும் எமது உறவுகளுக்கு ஒளியூட்டுவோம். வழிகாட்டுவோம். அவர்கள் எமது இறப்பின் பின்னாவது வெளிச்சத்தில் வாழட்டும். இது அவர்களுக்கு நாம் செய்யும் மிகப் பெரிய சேவையாகும். உறவுகளே சற்றுச் சிந்திப்போம் செயற்பட்டு மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவோமாக!

மு.அன்பண்ணா
வடவரணி



# உணர்வோடு செயற்படும் தாதியர் சேவை மெச்சத்தக்கது!

*1974 ஆம் ஆண்டில் இருந்து ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் மே 9 முதல் மே 15 வரை செவிலியர் வாரம் கொண்டாடப்படுகிறது.*

இன்று உலக தாதியர் தினம்

வெள்ளைச் சீருடை என்றாலே சேவையின் அடையாளமாய், தாதியர்கள் தான் நினைவுக்கு வருவர். பொறுமையும், சகிப்புத் தன்மையும் இந்தப் பணியின் இருகண்கள். உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு மே 12 ஆம் திகதியும் சர்வதேச தாதியர் தினமாகக் கொண்டாடப்பட்டு வருகின்றது.

செவிலியர்கள் (தாதியர்கள்) சமூகத்துக்கு ஆற்றும் பங்களிப்பும் அவர்களின் சேவைத் தியாகங்களையும் சிறப்பாக நினைவு கூர இந்தத் தினம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. சர்வதேச செவிலியர் அமைப்பு இந்தத் தினத்தை 1965 ஆம் ஆண்டில் இருந்து நினைவு கூருகிறது.

1953 இல் ஐக்கிய அமெரிக்காவின் அரச சுகாதாரத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரியான டொரத்தி சதர்லாண்ட் என்பவர் இந்தத் தினத்தை செவிலியர் தினமாக அறிவிக்க வேண்டும் என்று விடுத்த அழைப்பை அன்றைய ஜனாதிபதி ஐசன்ஹோவர் நிராகரித்துள்ளார்.

இருப்பினும் 1965 ஆம் ஆண்டில் இருந்து நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்தைச் சேர்ந்த புளோரன்ஸ் நைட்டிங்கேலின் பிறந்த நாளான மே 12 ஆம் திகதியை சிறப்பாக நினைவுகூர முடிவு செய்யப்பட்டது.

இங்கிலாந்தில் ஆண்டுதோறும் மே 12 ஆம் திகதி லண்டனில் உள்ள வெஸ்ட்மின்ஸ்டர் அபேயில் சம்பிரதாயபூர்வமாக இந்நாள் கொண்டாடப்படுகிறது. இங்குள்ள செவிலியர் (தாதியர்கள்) மூலம் மாளிகையில் உள்ள விளக்கு ஏற்றப்பட்டு அங்கு வருகைதரும் செவிலியர்கள் ஒவ்வொருவராலும் கைமாறப்பட்டு பின்னர் அது அங்குள்ள உயர் பீடத்தில் வைக்கப்படும்.

இது ஒரு செவிலியரில் இருந்து மற்றொருவருக்கு தமது அறிவுப் பரிமாறப்படுவதைக் குறிப்பதாகக் கருதப்படுகிறது. அதேநேரம், 1974 ஆம் ஆண்டில் இருந்து ஐக்கிய அமெரிக்காவிலும் கனடாவிலும் மே மாதம் 9 முதல் மே மாதம் 15 ஆம் திகதி வரை செவிலியர் வாரம் கொண்டாடப்படுகிறது.

ஒரு மருத்துவமனையின் இன்றியமையாத ஊழியர்கள் செவிலியர்கள் என்பது எல்லோரும் ஒத்துக்கொள்ளும் ஒரு விடயம். ''செவிலியர்கள்'' உலக அரங்கில் அங்கீகரிக்கபடுகிறார்கள். இன்றைய மனித சமூகத்துக்கான தாதிமாரின் சேவையை இலகுவாக மதிப்பிட்டுவிட முடியாது.

சாதாரண வைத்திய சேவைகளில் இருந்து யுத்தகால வைத்திய சேவைகள்வரை ஒவ்வொரு கட்டத்திலும் இவர்களது சேவைகள் வியாபித்துக் காணப்படுகின்றது. பக்குவமாகவும் அதே நேரம், பொறுப்புள்ள முறையிலும் மனித அசிங்கங்களைக் கூட கவனத்தில் கொள்ளாமல் உணர்வோடு உரசி இவர்கள் ஆற்றும் சேவை மெச்சத்தக்கதே. இந்த அடிப்படையில் இவர்களின் சேவைகளை மனித சமூகம் நினைவு கூர வேண்டியது சமூகத்தின் ஒரு கட்டாயக் கடமையாகவும் உள்ளது.

மறுபுறமாக தாதியார்தினம் என்று வரும் போது நவீன தாதியியல் முறையை உருவாக்கிய இங்கிலாந்துத் தாதியான புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவுகூராமல் இருக்க முடியாது. தாதித் தொழிலின் புனிதத்துவத்தை உணர்த்திய இவர் போரில் காயம்பட்ட வீரர்களுக்கு ஓய்வின்றி மருந்திட்டு சேவை செய்தார்.

தாதிகளுக்கான பயிற்சிப் பள்ளியையும் இவரே முதலில் ஆரம்பித்தார். விளக்கேந்திய சீமாட்டி, கை விளக்கேந்திய காரிகை என்று அனைவராலும் போற்றப்பட்ட இவர் ஒரு எழுத்தாளரும், புள்ளி விவரவியலாளரும் ஆவார். பிரித்தானியாவில் செல்வச் செழிப்புமிக்க உயர்குடிக் குடும்பமொன்றைச் சேர்ந்த இவர், இத்தாலி, புளோரன்ஸ் நகரில் பிறந்தார். இவர் பிறந்த இடத்தின் பெயரைத்தழுவி இவருக்குப் பெயரிட்டார்கள்.

இவரின் தந்தை வில்லியம் எட்வர்ட் நைட்டிங்கேல் (1789-1880), தாயார் பிரான்செஸ் நைட்டிங்கேல் (முன்னர் ஸ்மித்) (1794- 1875). புளோரன்சின் தாய்வழிப் பாட்டனான வில்லியம் சிமித் அடிமை முறை ஒழிப்புக்காக வாதாடியவராவார். எம்ப்லீ பார்க் இது புளோரன்ஸ் நைட்டிங்கேலின் குடும்ப வசிப்பிடமாகும். சிறுவயதில் கணிதத்தில் திறமையுள்ளவராயிருந்த இவர் தனது தந்தையாரின் கற்பித்தலில் அப்பாடத்தில் வல்லவாரானார்.

குறிப்பாகப் புள்ளி விவரவியலில் ஆர்வமுள்ளவராக இருந்த இவர், தனது ஆய்வறிக்கைகளில் புள்ளி விவரங்களை அதிகளவில் பயன்படுத்தினார். தரவுகளை வரைபடமாக்கி அளிப்பதில் முன்னோடியாகத் திகழ்ந்தார். பலவிதமான வரைபுகளை உருவாக்கி அவற்றின் மூலம் தரவுகளை வகைப்படுத்தி அறிக்கைகளில் பயன்படுத்தினார்.

இந்தியாவின் கிராமப் புறங்களின் சுகாதாரம் பற்றிய விரிவான ஆய்வை மேற்கொண்ட புளோரன்ஸ் நைட்டிங்கேல் சீர்திருத்தப்பட்ட மருத்துவ மற்றும் கிராம கவனிப்புச் சேவைகளை நடைமுறைப்படுத்துவதிலும் முக்கியமானவராய் இருந்தார். 1858 இல் பதவியேற்றதன் மூல அரச புள்ளி விவரவியல் கழகத்தின் தலைமைப் பொறுப்பேற்ற முதல் பெண்மணியானார். அதேபோல இவர் ஒரு எழுத்தாளருமாவார். ஒரு கிறிஸ்தவரான இவர் தனக்கு இறைவனால் விதிக்கப்பட்ட பணியாகவே தாதியர் சேவையை உணர்ந்து மேற் கொண்டார். 1837 ஆம் ஆண்டில் அவருக்கு ஏற்பட்ட இந்த உணர்வு அவரது வாழ்நாள் முழுதும் நீடித்தது. பெற்றோரின், எதிர்ப்புக்கும் மத்தியில், தாதியர் சேவையில் ஈடுபடவேண்டும் என்னும் தனது முடிவை புளோரன்ஸ் 1845 ஆம் ஆண்டு அறிவித்தார்.

இதையடுத்து தன் வாழ்நாளையே தாதிச் சேவையில் இவர் இணைத்துக் கொண்டமை இவரது உளவிருப்பையும், அவரது காலத்தைய பெண்ணுக்குரிய எதிர்பார்ப்புகளை முறியடிப்பதற்கான அடையாளப்படுத்தலாகவும் கொள்ளப்படுகின்றது. அந்தக் காலத்தில் தாதியர் சேவை ஒரு மதிப்புள்ள பணியாகக் கருதப்படவில்லை. வறிய குடும்பங்களைச் சேர்ந்த பெண்களே இந்தப் பணியில் ஈடுபட்டு வந்தனர். அந்தக் காலத்தில் தாதியர் சமையல் வேலையாள்களாகவும் உயர் குடும்பங்களில் வேலை செய்யவேண்டி இருந்தது.

புளோரன்ஸ் வறியவர்கள் மீதும், இயலாதவர் மீதும் அக்கறை கொண்டிருந்தார். 1844 ஆம் ஆண்டு டிசெம்பரில், லண்டனிலிருந்த ஆதரவற்றோர் விடுதி ஒன்றில் வறியவர் ஒருவர் இறந்தது பெரும் பிரச்சினையாக உருவெடுத்தது. இதனைத் தொடர்ந்து புளோரன்ஸ், ஆதரவற்றோர் விடுதிகளில் மருத்துவ வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக முன்னணியில் நின்று வாதாடினார். அந்தக் காலத்தில் வறியோர் சட்டம் தொடர்பான சபையின் தலைவராக இருந்த சார்லஸ் வில்லியர்ஸ் என்பவரின் ஒத்துழைப்பையும் அவர் பெற்றுக் கொண்டார். இது வறியோர் சட்டத்தில் சீர்திருத்தம் கோருவதில் அவரை ஈடுபடுத்தியதுடன், மருத்துவ வசதிகளின் வழங்கலுக்கும் அப்பால் அவரது ஈடுபாட்டை விரிவாக்கியது.

1846 ஆம் ஆண்டில் இவர் ஜேர்மனி சென்றார். அங்கு கெய்சர்ஸ்வர்த் மருத்துவமனையில் நோயாளிகளுக்குக் வழங்கப்படும் கவனிப்புக்களும், மருத்துவச் சேவைகளும் இவரை மிகவும் கவர்ந்தன. 1851 ஆம் ஆண்டில் தொடர்ச்சியாக 4 மாதங்களாக ஜேர்மனியில் கெய்சர்ஸ்வர்த் மருத்துவமனையில் இவர் தீவிர பயிற்சியைப் பெற்றார். தாதியர் சேவையில் முழுமையாகத் தன்னை ஈடுபடுத்திக் கொள்வதிலிருந்து திருமணம் தடை செய்யும் எனக் கருதி ரிச்சர்ட் மொங்க்டன் மில்ன்ஸ் எனும் அரசியல்வாதியுடனான தனது உறவை முறித்துக் கொண்டார்.

பின்னாளில்- சிறந்த அரசியல் வாதியும், போர்ச் செயலராகப் பணியாற்றியவருமான சிட்னி ஹேர்பேர்ட் என்பவரை ரோமில் சந்தித்து அவர்பால் ஈர்க்கப்பட்டார். சிட்னி ஹேர்பேர்ட் ஏற்கெனவே மணமானவர். எனினும் இருவரும் வாழ்நாள் முழுதும் நெருங்கிய நண்பர்களாகத் திகழ்ந்தனர். கிரீமியாவில் நைட்டிங்கேல் ஆற்றிய பணிகளுக்கும், பொதுவாக அவரது துறையில் ஆற்றிய பணிகளுக்கும், ஹேர்பேட் வசதிகள் செய்து கொடுத்ததுடன் ஊக்கமும் கொடுத்து வந்தார். புளோரன்சும் ஹேர்பேட்டின் அரசியல் பணிகளுக்கு ஆலோசனை வழங்கி வந்தார் எனக் கூறப்படுகின்றது.

ரஷ்யப் பேரரசுக்கும், பிரான்ஸ் - ஐக்கிய இராச்சிய மற்றும் ஒட்டோமான் பேரரசுப் படைக் கூட்டணிக்குமிடையே 1854 - 1856 ஆம் ஆண்டு நடந்த கிரிமியன் போரில் தனது மருத்துவப் பங்களிப்பின் மூலம் புளோரன்ஸ் நைட்டிங்கேல் புகழ் பெற்றவரானார். இந்த யுத்தத்தின்போது வெளிச் சுகாதார விடயங்களில் இவர் கூடிய கரிசனை காட்டினார். மேலும், மருந்துத் தட்டுப்பாடும், குறையூட்டமும் அதிக பணியுமே நோயாளிகளான வீரர்களின் இறப்புக்குக் காரணமென புளோரன்ஸ் நைட்டிங்கேல் கருதினார்.

இந்தப் போர் அனுபவம் அவரது பிற்கால வாழ்வில் சுகாதாரமான சூழலைப் பேணலின் முக்கியத்துவத்தை அவர் எடுத்துரைப்பதில் பெரும்பங்கை வகித்தது.

பிரித்தானியாவில் இருந்த இராணுவ மற்றும் பொது மருத்துவமனைகளில் கவனிப்பையும், சூழலையும் மேம்படுத்த வேண்டும் என்று நைட்டிங்கேல் வாதாடி வந்தார். மருத்துவ வசதிகளுக்கும், சுகாதார நுட்பங்களுக்கும் இடையிலான தொடர்புகள் குறித்த மருத்துவமனைகள் பற்றிய குறிப்புக்கள், அந்தக் காலத்தில் தாதியர்களுக்கான மிகச் சிறந்த பாடநூலாகக் கருதப்பட்ட தாதியர்பணி பற்றிய குறிப்புக்கள், உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் விடயங்கள், பிரித்தானிய இராணுவத்தின் மருத்துவமனை நிர்வாகமும், செயல் திறனும் என்பவை நைட்டிங்கேல் எழுதிய புகழ் பெற்ற நூல்களுள் சில. போரிலிருந்து நாடு திரும்பிய புளோரன்ஸ் நைட்டிங்கேல் சாதனைப் பெண்மணியாக வரவேற்கப்பட்டார்.

விக்டோரியா அரசிக்கு அடுத்தபடியாக மிகவும் அறியப்பட்ட பெண்ணாக இனங்காட்டப்பட்டார். விக்டோரிய அரசியின் வேண்டுகோளை ஏற்று படை வீரர்களின் உடல்நலன் குறித்த அரசு ஆணைக்குழுவை அமைப்பதிலும் அவ்வாணைக் குழுவுக்குத் தேவையான அறிக்கைகள் ஆயத்தப்படுத்தி வழங்குவதிலும் ஈடுபட்டார். அத்துடன், அரசாணைக் குழுவுக்கு இவர் சமர்ப்பித்த அறிக்கையில் படை வீரர்களின் இறப்புக்கு படை வீரர்களின் வாழ்க்கைத் தராதரம் மற்றும் சுகாதாரமான் சூழல் கீழ் மட்டத்தில் இருப்பதுவும் முக்கிய காரணமென எடுத்துரைத்தார். பெண்ணானகையால் இந்த ஆணைக் குழுவுக்குத் தலைமை தாங்க இவருக்கு அனுமதி இருக்கவில்லை. சிட்னி ஹேர்பேர்ட் தலைமையைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அறிக்கையில் குறிப்பிட்ட சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதில் புளோரன்ஸ் நைட் டிங்கேல் முன்னின்று செயலாற்றினார். இந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டின் மூலம் படை வீரர்களது மருத்துவக் கவனிப்பு மாற்றம் பெற்றதுடன் இராணுவத்தினருக்கான மருத்துவப் பாடசாலையும் ஆரம்பிக்கப்பட்டது.

தாதியர் சேவையை நிறுவி அதை முன்னேற்றும் பணியிலேயே அவர் தனது வாழ்நாளைக் கழித்தார். மருத்துவமனைத் திட்டமிடலிலும் இவரது கருத்துக்கள் முன்னோடிகளாக இருந்ததுடன் இங்கிலாந்தின் பிற பகுதிகளிலும் ஏனைய நாடுகளிலும் அவை முன்னெடுத்துச் செல்லப்பட்டன. 1869 இல் எலிசபெத் பிளாக்வெல் என்பவருடன் இணைந்து பெண்களுக்கான மருத்துவக் கல்லூரி ஒன்றையும் இவர் தோற்றுவித்தார். 1882 ஆம் ஆண்டளவில் நைட்டிங்கேல் தாதியர் பரவலாகச் சேவை புரிந்தனர். அதீத களைப்பு ஏற்படல் எனும் நோய் இவருக்கு இருந்ததாக கருதப்படுகிறது. இவரது பிறந்த நாள் இந்த நோய் பற்றிய விழிப்புணர்வைப் பரப்பும் நாளாகவும் உள்ளது.


எனவே இந்தத்தினத்தில் புளோரன்ஸ் நைட்டிங்கேலை நினைவு கூரும் அதே நேரத்தில் உலகெங்கிலும் சேவை புரியும் தாதியர்களின் மகத்தான பணிகளையும் கண்ணியப்படுத்தி கௌரவிப்பதானது அவர்களுக்கு உலக மக்கள் வழங்கும் அதியுயர் அங்கீகாரமாகும். ★




பொன்.வேணு கிருஷ்ணா

### அணு ஆயுத அரசியல்

2006 ஒக்ரோபர் 9ஆம் திகதியன்று வடகொரியா பூமிக்கடியில் நிகழ்த்திய அணு ஆயுதச் சோதனை எழுப்பிய அதிர்வு ரிக்டர் அளவீட்டில் 4.2ஆக இருக்கும் என்று மதிப்பிட்டி ருக்கிறது அமெரிக்காவின் நில அமைப்பியல் துறை. இதை வைத்து வடகொரியா சோதித்த அணுகுண்டு, 1945இல்




ஹிரோஷிமாவில் வெடித்த அணுகுண்டை விட 20 மடங்கு சிறியதாக இருக்கும் என்றனர் விஞ்ஞானிகள். இது ஒப்பீட்டளவில் பலவீனமானதுதான். ஆனால் இந்தச் சோதனை வடகிழக்காசியாவின் பாதுகாப்பிலும் அமெரிக்காவின் செல்வாக்கிலும் சர்வதேச அணு ஆயுதக் கொள்கைகளிலும் உண்டாக்கிய பாதிப்புக்கள் பலமானவை. வொஷிங்டனில், பெய்ஜிங்கில், அதற்கப்பால் உலகெங்கிலும் அது உண்டாக்கிய அதிர்வலைகள் இன்னும் அடங்கவில்லை.

இதை ஒரு 'வரலாற்று நிகழ்வு' என்று வர்ணித்த வடகொரியா, 'கொரிய தீபகற்பத்தின் பாதுகாப்புக்காக நடத்தப்பட்ட சோதனை இது' என்றும் கூறியது. ஆனால் இந்தச் சோதனையால் உலக நாடுகள் கடும் அதிருப்தியடைந்தன. வடகொரியாவின் ஒரே சகாவான சீனாவிற்கும் இது உவக்கவில்லை போலும். மனித குலத்தைப் பெருந்திரளாய் அழிக்க வல்ல ஆயுதம் இரகசியமாக ஆட்சியாளர்களிடம் இருக்குமானால், அது பேரழிவிற்கு வழிவகுக்கும் எனும் கவலை எல்லோருக்கும் இருக்கிறது. ஐ.நா. பாதுகாப்பு மன்றம் ஒருமனதாகவும் உடனடியாகவும் வடகொரியாவின் மீது பல தண்டனைத் தடைகளை நிறைவேற்றியது. 'ரகசிய தேசம்', 'ரவுடி ராஜ்ஜியம்' என்றெல்லாம் வர்ணிக்கப்படும் வடகொரியாவை, அதன் அணு ஆயுதத் திட்டத்தைக் கைவிடச் செய்வதுதான் தடைகளின் நோக்கம். ஆனால் அது அத்தனை சுலபமில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. இதற்கு முன்பும் இப்போதும் வடகொரியா எதிர்கொண்டுவரும் சர்வதேசத் தடைகளால் அதைப் பணியவைக்க முடியவில்லை. அதனால்தான் சீனா சமரசத்திற்கு முயன்றது. கடந்த நவம்பர் மாதத் தொடக்கத்தில் வடகொரியா பேச்சுவார்த்தைக்கு இணங்கியது. ஓராண்டுக்கும் மேலாக முடங்கியிருக்கும் 'ஆறு நாடுகளின் பேச்சுவார்த்தை' பெய்ஜிங்கில் மீண்டும் 2006 டிசெம்பரில் தொடங்கியது. இந்தப் பேச்சுவார்த்தைகளில் விருந்தினரான சீனா முக்கிய பங்கேற்கவிருந்தது; கொரிய தீபகற்பத்தின் பங்காளிகளான வடகொரியாவும் தென்கொரியாவும் பங்கேற்றது; அண்டை நாடுகளான ஜப்பானும் ரஷ்யாவும், கூடவே அமெரிக்காவும் பங்கேற்றது.

### வரலாறு

பேச்சுவார்த்தைகளில் இடம்பெறப் போகும் நாடுகள் அனைத்திற்கும் குருதி புரண்டோடும் கொரிய வரலாற்றில் பங்குண்டு. 5000 ஆண்டுகளுக்கு முன்னர் சீனாவின் வட பகுதியிலிருந்து கொரிய தீபகற்பத்திற்குச் சீனர்கள் குடியேறியதிலிருந்து கொரியாவின் ஏடறிந்த வரலாறு தொடங்குகிறது. பல்வேறு சாம்ராஜ்ஜியங்களின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பிறகு 1910இல் ஜப்பானிய ஏகாதிபத்தியம் கொரியாவைக் கைப்பற்றியது. ஜப்பானின் பிடி, 1945இல் இரண்டாம் உலகப் போரில் அது தோல்வியுறும் வரை நீடித்தது. போரில் வெற்றி ஈட்டிய 'நேச நாடு'களான அமெரிக்காவும் சோவியத் யூனியனும் கொரியாவைத் தத்தமது செல்வாக்குப் பகுதிகளாகப் பிரித்துக் கொண்டன. 38ஆம் அட்சரக் கோட்டின்




வடபுறம் சோவியத் யூனியனின் ஆதரவுடன் கிம் இல் சுங்-இன் தலைமையில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சியும் தென்புறம் அமெரிக்க ஆதரவு முதலாளித்துவ ஆட்சியும் அமைந்தன.

1950இல் தென்கொரியாவை முற்றிலும் எதிர்பாராத ஒரு தருணத்தில் தாக்கியது வடகொரியா. தென்கொரியத் துருப்புக்களாலும் ஜப்பானியத் தளங்களிலிருந்து விரைந்த அமெரிக்கத் துருப்புகளாலும் தாக்குதலைச் சமாளிக்க முடியவில்லை. இந்தத் தாக்குதலுக்கு எதிராக ஐ.நா.வின் பாதுகாப்பு மன்றத்தில் தீர்மானம் கொண்டு வந்தது அமெரிக்கா. அப்போது பாதுகாப்பு மன்றத்தில் சீனாவின் இடத்தைத் தைவான் வகித்துவந்தது. இதை எதிர்த்துச் சோவியத் யூனியன் மன்றத்தைப் புறக்கணித்துவந்தது. அமெரிக்காவின் தீர்மானம் எதிர்ப்பின்றி நிறைவேறியது. 3 லட்சம் பேரைக் கொண்ட ஐ.நா.வின் பன்னாட்டுப் படை உருவானது. இதில் 2.60 லட்சம் பேர் அமெரிக்கர்கள்தான். இந்தப் படை 1950 செப்ரெம்பரில்தான் கொரியாவை அடைந்தது. அதன் தாக்குதலில் வடகொரியப் படை வேகமாய்ப் பின் வாங்கியது. செப்ரெம்பர் இறுதியிலேயே தென் கொரியப் பகுதிகள் மீட்கப்பட்டன.

போர் இங்கே முடிந்திருந்தால், ஒரு வேளை வரலாறு வேறு விதமாக இருந்திருக்கலாம். ஆனால் அமெரிக்க ஜனாதிபதி ஹாரி ட்ரூமன் இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி, தீபகற்பம் முழுவதையும் மேற்குலகின் செல்வாக்குப் பகுதியாக மாற்ற விரும்பினார். ஐ.நா.வின் படை 38ஆம் அட்சரக் கோட்டைக் கடந்து, வடகொரியாவுக்குள்ளும் புகுந்தது. சீன-வடகொரிய எல்லையில் நீண்டு கிடக்கும் யாலு ஆற்றின் கரைகளை நோக்கி முன்னேறியது. அப்போது, மலைகளுக்குப் பின்னாலிருந்து வெளியேறிய சீனாவின் 'தொண்டர் படை'யை எதிர்கொள்ள வேண்டிவரும் என்று ட்ரூமன் எதிர்பார்க்கவில்லை. 1950இன் டிசெம்பரின் கடுங்குளிரில் ஐ.நா.வின் படை பின்வாங்க நேர்ந்தது. போர் மேலும் இரண்டாண்டுகள் நீண்டது. வரலாற்றாளர்களின் கணிப்பில் மாண்டவர்களின் எண்ணிக்கை 20 லட்சத்திற்கும் மேல். 1953இல் போர் நிறுத்தம் கையெழுத்தானது. எனினும் இதுவரை சமாதான உடன்படிக்கை ஏற்படவில்லை. அமெரிக்க-தென்கொரியப் படைகள் ஒரு புறமும் வடகொரியப்படைகள் மறுபுறமும் 241 கி.மீ. நீளமுள்ள எல்லையை இராப்பகலாய்ப் பாதுகாத்துவருகின்றன. 38ஆம் அட்சரக்கோடு உலகின் அதிகப் பாதுகாப்பு மிக்க எல்லைக் கோடாய்த் தொடர்கிறது.

### வடகொரியாவின் வறுமை

வடகொரியாவில் கிம் இல் சுங்-இன் ஆட்சி, 1994இல் அவர் மரணம்வரை நீடித்தது. தொடர்ந்து அவரது மகன், இப்போதைய தலைவர் கிம் ஜாங் இல் பதவியேற்றார். தந்தை 'பெருந்தலைவர்' என்றும் மகன் 'அன்புத் தலைவர்' என்றும் அரசின் முழுக்கட்டுப்பாட்டில் உள்ள ஊடகங்களால் அழைக்கப்படுகின்றனர். தலைவர்களால் மக்களுக்கு




அவசியமான உணவுப் பொருள்கள் கிடைக்க வகைசெய்ய முடியவில்லை. 1950களில் விவசாயத்தில் அமுல்படுத்தப்பட்ட கூட்டு கம்யூன் முறையும் ரேஷன் பங்கீடும் எதிர்பார்த்த பலனைத் தரவில்லை என்கிறார் அரசியல் விமர்சகர் சாரா பக்லி. மிகுதியும் மலைப்பாங்கான நாட்டில் 18% நிலமே விவசாயத்திற்கு ஏற்றதாக இருப்பதும் ஒரு காரணம். மின்சக்தி மற்றும் உரப் பற்றாக்குறைப் பிரச்சினைகள் வேறு. தவிர, வறட்சியும் வெள்ளமும் மாறி மாறித் தாக்குகின்றன. 1990இல் நாடு கடும் பஞ்சத்திற்கு உள்ளானது. பட்டினியால் மாண்டவர்களின் எண்ணிக்கை 20 லட்சம் வரை இருக்கும் என்கிறார் 'டைம்' செய்தியாளர் டொனால்ட் மெக்கின்டயர்.

வடகொரியாவின் 2 கோடியே 30 லட்சம் மக்களுக்கு 50 லட்சம் தொன் அரிசியும் தானியங்களும் தேவைப்படுகின்றன. விளைச்சல், தேவையைக் காட்டிலும் பலபடிகள் பின்தங்கியிருக்கிறது. இவ்வாண்டு ஜூலை மாதம் பெருகிய வெள்ளத்தில், ஒரு லட்சம் தொன் அரிசியாக விளைந்திருக்கக்கூடிய பயிர்கள் மூழ்கிப்போயின. அதே மாதம் வடகொரியா ஏவுகணைச் சோதனைகள் நிகழ்த்தியது. இதனால், முன்னதாக ஐந்து லட்சம் தொன் உணவுப் பொருளை வழங்க முன்வந்திருந்த தென் கொரியா அதை நிறுத்திவைத்தது.

1995இலிருந்து வடகொரியாவில் ஐ.நா.வின் உலக உணவுச் செயல் திட்டம் (World Food Programme - WFP) பணியாற்றிவருகிறது. இப்போது 13 ஆட்சிப் பகுதிகளில் (counties) 19 லட்சம் பேருக்கு உணவு வழங்கிவருகிறது கீதிறி. யூனிசெவ் 2004இல் மேற்கொண்ட ஆய்வொன்று சுமார் 40% குழந்தைகளும் 30% தாய்மார்களும் கடுமையான ஊட்டச் சத்துக் குறைவால் பாதிக்கப்பட்டிருக்கின்றனர் எனத் தெரிவிக்கிறது. வார்விக் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஹேஸல் ஸ்மித், வடகொரியாவின் அணு ஆயுத அரசியலால் அதன் உணவுப் பிரச்சினை உலக நாடுகளின் கண்களில் படுவதேயில்லை என்கிறார்.

### அணு ஆயுதப் பரவல் தடை உடன்படிக்கை

1985இலேயே அணு ஆயுதப் பரவல் தடை உடன்படிக்கையில் (Nuclear Non - Prolife ration Treaty - NPT) ஒப்பமிட்டது வடகொரியா. ஆனால் சர்வதேச அணு ஆற்றல் நிறுவனத்தின் ஆய்வுகளுக்கு 1992 இல்தான் இணங்கியது. காரணம், அதுவரை அமெரிக்காவின் அணு ஆயுதங்கள் தென்கொரியாவில் இருந்தன. அமெரிக்கா- வடகொரியா இடையே பரஸ்பர அவநம்பிக்கை தொடர்ந்தது. 1999இல் கிளின்டனின் அரசு ஓர் இணக்கமான சூழலுக்கு முயற்சித்தது. பொருளாதாரத் தடைகள் சிலவற்றை விலக்கிக்கொண்டது; மின் உற்பத்திக்கு வழிவகுக்கும் மென்னீர் அணு உலைகள் அமைத்துத் தரவும் முன்வந்தது. எனினும் இன்று வரை இந்த வாக்குறுதி நிறைவேற்றப்படவில்லை.

(கேள்வி தொடரும்...)




# தமிழ்த் தேசிய எழுச்சி



ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.




143

## புலிகளின் போரியல் வளர்ச்சியும் நோர்வேயின் சமாதான முயற்சியும்

### பிரபாகரனுடனான வன்னிச் சந்திப்பு

இந்துப் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து, அதன் அலகுகளை நடைமுறைப்படுத்துவதில் தடங்கல்களும் தாமதங்களும் எழுந்தன. எனவே, இந்த விவகாரத்தை நாம் நோர்வே அனுசரணையாளர்களின் கவனத்துக்கு எடுத்துச் சென்றோம். அப்போது அதி முக்கியத்துவம் வாய்ந்த இந்த விவகாரத்துக்குத் தீர்வு காண்பதற்கு சிறிலங்கா அரசுடன் நேரடியாகக் கலந்துரையாடுவதே பொருத்தமான மார்க்கமாக இருக்கும் என்று அவர்கள் சுட்டிக் காட்டினர். அதனால், முடிந்தளவு விரைவாகப் பேச்சுகளை ஆரம்பிக்குமாறு அவர்கள் யோசனை தெரிவித்தனர். அப்போது, நேரடிப் பேச்சுத் தொடர்பான விடயங்களை ஆழமாகவும், விரிவாகவும் கலந்தாலோசிக்கும் பொருட்டு, தலைவர் பிரபாகரனை நான் சந்திக்க வேண்டியிருந்தன் அவசியத்தை நோர்வேத் தரப்பினரிடம் வலியுறுத்தினேன். பேச்சுக்கான திகதி , பேசுவதற்கான இடம், பேசப்பட வேண்டிய விடயங்கள் உட்பட ஏனைய முக்கிய விவகாரங்கள் தொடர்பான அவரது கருத்துக்களைப் பெற்று , தீர்மானங்கள் எடுக்கப்பட வேண்டியிருந்தன. அத்தோடு, சிறிலங்காவின் தலைநகர் கொழும்பில் பேச்சுகள் நிகழ்த்துவதற்கு, பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு, புலிகள் இயக்கம் இணங்காது என்பதை நோர்வே தரப்பினருக்குத் தெளிவுபடுத்தியமையுடன் பேச்சு நடக்கும் இடம், சிறிலங்கா அல்லாமல் வேறு ஏதாவது ஒருநட்பு நாடாகவே இருக்க வேண்டும் என்று நான் யோசனை தெரிவித்தேன். சமரச முன்னெடுப்பு முயற்சியில் பல முக்கிய விவகாரங்கள் தொடர்பாக பிரபாகரனுடன் நேரடியாகக் கலந்தாலோசிக்க வேண்டிய தேவை இருந்ததமையால் நானும் அடேலும் வன்னிக்குச் சென்று அவரைச் சந்திப்பதற்கான பயணத்தை ஏற்பாடு செய்து தருமாறு நோர்வே அனுசரணையாளர்களிடம் நான் கேட்டேன். போர் நிறுத்தம் ஒன்று அமுலில் இருந்த போதும் கூட சிறிலங்கா அரசிலோ அல்லது அதன் படைகளிலோ போதுமான அளவுக்கு எமக்கு நம்பிக்கை வளர்ந்திருக்காத ஒரு சூழலில், கொழும்புக்கு ஊடாகப் பயணிப்பது ஓர் உசிதமான எண்ணமாக எமக்குத் தோன்றவில்லை. அதன் காரணமாக சிறிலங்காவின் சர்வதேச விமான நிலையத்தையும் வன்னிக்கான தரைப்பாதைகளையும் தவிர்த்து மாலைதீவினூடாக ஒரு நீண்ட சுற்றுப் பாதையை நோர்வே தரப்பினர் ஒழுங்கு செய்தனர். ''பயங்கரவாத''த் தலைவர்களைத் தனது நாட்டுக்குள் அனுமதிப்பது தொடர்பில் மாலைதீவு அரசுக்குத் தயக்கங்கள் இருந்தபோதும் தனது விமான விடுதியில் நாம் ஓர் இரவு தங்குவதற்கு விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் இடமளித்தமையுடன், தனது நாட்டுக் கடல் விமானத்தை எமது பயணத்துக்கு பாவிப்பதற்கும், தனது வான் பரப்பின் ஊடாக நாம் பயணிப்பதற்கும் அது தாரண்மையோடு அனுமதியளித்திருந்தது. அத்தோடு - இந்தத் பயணத் திட்டம் பற்றி சிறிலங்கா அரசுடன் ஆலோசிக்கப்பட்டு, அதன் ஒத்தாசையும் பெறப்பட்டிருந்தது.



இந்தத் திட்டத்துக்கு அமைவாக எரிக் சொல்ஹெய்மும், அவரது இரண்டு மெய்ப்பாதுகாவலர்களும் லண்டன் விமான நிலையத்தில் எங்களைச் சந்தித்து அழைத்துச் செல்ல, மார்ச் மாதம் 24 ஆம் திகதி நாங்கள் மாலைதீவு தலைநகரில் தரையிறங்கினோம். கொழும்பு நோர்வே தூதரகத்தில் இருந்து ஜோன்வெஸ்ட் பேர்க், தோமஸ், ஸ்ரீமதி ஜெஸ்ரி, ரோம்ஸ்டல் ஆகியோர் எங்களைச் சந்திப்பதற்காக அங்கு வந்திருந்தார்கள். வன்னியை நோக்கிய இறுதிக் கட்டப் பயணத்தில் எம்மை அழைத்துச் செல்வதற்காக தோமஸ் அவர்களை விட்டு விட்டு எரிக்சொல்ஹெய்ம், ஜோன் வெஸ்ட் பேர்க் ஆகியோர் அன்று மாலையே கொழும்பு திரும்பினர். சிங்கள இனவாதிகள் கருதியதைப் போல, நாட்டிற்குள் நாங்கள் சட்டவிரோதமாக நுழையவில்லை. ஏற்கனவே செய்யப்பட்டிருந்த முன்னேற்பாடுகளின் படி, குடி வரவுத் திணைக்கள அதிகாரிகளிடம் இருந்து நுழைவு அனுமதியை நாம் முன் கூட்டியே பெற்றிருந்தமையுடன் ஒரு மாத காலம் அங்கு தங்கியிருப்பதற்கு நாம் அனுமதி அளிக்கப்பட்டிருந்தோம்.

மாலைதீவில் இருந்து வன்னிக்குச் சென்று திரும்பும் எட்டு மணித்தியாலத்துக்கும் அதிகமான பயண நேரத் தூரத்தைத் தொடர்ந்து பறப்பதற்கு அமைவாக, நாம் பயணிக்கவிருந்த கடல் விமானத்தில் சில மாற்றி அமைப்புக்கள் செய்யப்பட வேண்டியிருந்தன. அதன்படிக்கு, நோர்வே அரசு வாடகைக்கு அமர்த்தியிருந்த இரட்டை இயந்திரக் கடல் விமானத்தில் பயணிகள் இருக்கைகள் அகற்றப்பட்டு அந்த இடத்தில், மேலதிக எண்ணெய் எடுத்துச் செல்வதற்காக பெரிய எண்ணெய்த் தாங்கி ஒன்று பொருத்தப்பட்டிருந்தது. தோமஸ் அவர்களுக்காக சிறிய ஒரு ஜன்னல் ஓர இருக்கை ஒதுக்கப்பட்டிருந்ததுடன் விமானத்தின் பிற்பகுதியில், விமான எண்ணெய் தாங்கியின் பின்புறமாக இரண்டு இருக்கைகள் எமக்காக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. அந்த விமானத்தின் இரண்டு கனேடிய ஓட்டிகளும் மிகுந்த உபசரிப்போடு எம்மைக் கவனித்துக் கொண்டார்கள். குறிப்பாக, என்னுடைய சௌகரியத்தை உறுதி செய்வதில் அதிக அக்கறை எடுத்திருந்தமையுடன், எமக்குத் தேவையான உணவு மற்றும் குடிபானங்களைப் பிரத்தியோகமாகத் தயாரித்தும் ஒழுங்கு செய்திருந்தார்கள். பயணம் ஆரம்பித்து அதிக நேரமில்லை. கீழே அகன்று விரிந்து கிடந்த இந்து சமுத்திரத்தின் மேலே, ஆயிரம் அடி உயரத்தில் நாம் பறந்து கொண்டிருந்தபோது, திடீரென விமான எண்ணெயின் குமட்டுகின்ற மணம் காற்றிலே மிதந்து எங்கள் மூக்கைத் துளைத்தது. அருகிலே அமர்ந்திருந்த அடேல் கீழே குனிந்து பார்த்த போது தனது காலுக்கு கீழே இருந்த தளத்தில் எண்ணெய் உயர்ந்து கொண்டிருந்ததைக் கவனித்து விட்டார். எமக்கு முன்னாலே இருந்த தாங்கியிலிருந்து எண்ணெய் வழிந்து கொண்டிருந்தது. விடயத்தை நாம் உதவி விமானியிடம் தெரிவித்திருந்தபோது - எண்ணெய் தாங்கிக்கு இடையே தன்னை நசித்து, சிரமப்பட்டு நகர்ந்து கசிவிடத்தை அடைந்து, அதன் சில நட்டுக்களை இறுக்கி வெளியேற்றத்தை நிறுத்தி - பயப்படுவதற்கு ஒன்றுமில்லை என்பதை அவர் மீள உறுதி செய்தார்.

அசைய வழியேதுமற்று, கீழே நாற்புறமும் பரந்து கிடந்த கடலைத் தவிரப் பார்ப்பதற்கு வேறெதுவுமின்றி, அந்த சிறிய கடல் விமானத்தின் பின் மூலைக்குள் அடைபட்டுக் கிடந்த போது அந்த நான்கு மணி நேரப் பயணம் சகிக்க முடியாததாக இருந்த போதும் மன்னார் கரையின் நீலக் கடல் கீழே தென்பட்டு, விமானி மெல்லத் திரும்பி நாங்கள் அண்மித்து விட்டோம் என்பதையும் குறிப்புணர்த்திய போது, ஒரு இனம்புரியாத பூரிப்பு என்னை சிலிர்த்திட வைத்தது.

மூன்று வருடங்களுக்கு முன்னர், மிகக் கடுமையாக நோய் வாய்ப்பட்டு, வன்னியை விட்டு நான் புறப்பட்ட அந்த நாள் அப்போது என் நினைவில் வந்தது. எப்போது நான் வன்னிக் குத் திரும்புவேன் என்று - அதுவும் உயிரோடு திரும்புவேன் என்று - அப்போது நான் கற்பனை செய்து கூடப் பார்த்திருக்கவில்லை. விமானத்தின் உயரம் மெல்ல மெல்லக் குறைந்து வன்னியின் மிகப் பெரிய நீர்ப்பாசனக் குளமான இரணைமடுவில் அது இறங்கி விட்டபோது, ஜன்னல் கண்ணாடி வழியாக வெளியே கூர்ந்து பார்த்து, தெரிந்த முகங்களைத் தேடினேன். சிரித்த முகத்தோடு எங்களின் நெடுங்கால நண்பனும், கடற்புலிகளின் தளபதியுமான சூசையைக் கண்டேன். நாம் பயணித்த அந்த கடல் விமானம் இறங்குவதற்கான ஒழுங்குபடுத்தல்களுக்கும், விமானத்தில் இருந்து எம்மைக் கரைக்கு அழைத்துச் செல்வதற்கும் அவர் தான் பொறுப்பு. விமானம் இறங்குவதற்குப் போதுமான ஆழம் உடையதாக அவர் ஏற்கனவே இனம் கண்டு அடையாளப்படுத்தியிருந்த பாதுகாப்பான நீர்ப் பகுதியில் விமானம் இறங்கி நிலை கொண்டது. சூசையோடு நடேசன் - தமிழீழ காவல் துறையின் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் - புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் ஆகியோர் ஒரு சிறிய மிதவைப் படகில் எம்மிடம் வந்து நாம் விமானத்தில் இருந்து இறங்கு வதற்கு உதவினர்.



(தொடரும் ...)




# ஈழமக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கு ஒன்றியம்

## நோர்வே தமிழர்கள் அமைப்பு

தமிழ் நோர்வே வள ஒன்றியத்தினுடைய உருவாக்கம் தொடர்பான அறிமுகக் கூட்டமாகவும், தாயகத்திலுள்ள 'வாசம் உதவும் உறவுகள்ச அமைப்புடன் இணைந்து ஏற்கனவே முன்னெடுக்கும் பணிகள் தொடர்பாகவும், தொடர்ந்து முன்னெடுக்கப்படவுள்ள செயற்பாடுகள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வாசம் உதவும் உறவுகள் அமைப்பின் ஆலோசகர் வசந்தராஜா தம்பிப்பொடி மற்றும் அதன் இணைப்பாளர் விஜயராஜா விநாயக மூர்த்தி ஆகியோருடன் 'ஸ்கைப்' வழியான நேரடிக் கலந்துரையாடல் இடம்பெற்றது. அவர்களது கருத்துரையைத் தொடர்ந்து கேள்விகளையும் கேட்பதற்கும் கருத்துக்கள் ஆலோசனைகளைப் பகிர்ந்து கொள்வதற்குமான நேரமாகவும் அது அமைந்தது.



போருக்குப் பின்னான தாயக நிலைமைகள், வாழ்வாதாரம் சார்ந்து மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவை சார்ந்து முன்னெடுக்கப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் கருத்துக்கள் பகிரப்பட்டன.

மட்டக்களப்பில் போரால் பாதிக்கப்பட்ட கிராமங்களின் வரிசையில் மிகவும் பின்தங்கிய அடிப்படை வசதிகளற்ற நிலையிலுள்ள, மயிலந்தனை கிராமத்தின் இன்றைய நிலை பற்றிய தரவுகள் தகவல்களும் அதனை முன்னேற்ற வேண்டிய தேவை குறித்தும் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

குடிதண்ணீர்ப்பிரச்சினை, மருத்துவவளமின்மை, போக்குவரத்து, கல்வி என அனைத்து வகைப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுக்கின்றது மட்டக்களப்பு நகரிலிருந்து 50 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள இந்தக் கிராமம். அடிப்படை வசதியின்மை ஒருபுறமிருக்க, காட்டு விலங்குகளின் அச்சுறுத்தலையும் அது எதிர்கொண்டுள்ளது - என்று இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது. (ஐ)

போருக்குப் பின்னான சூழலில் ஈழ மக்களுக்கு நிலையான வாழ்வாதாரத்துக்கும், வளர்ச்சிக்கும் உரிய விளைவுகளைத் தரவல்ல பணிகள் அவசியமானவை. அதற்கு இங்குள்ள வளங்கள் ஒருங்கிணைக்கப்பட வேண்டிய அவசியம். நிதியுதவி என்பதற்கு அப்பால் பல துறை சார்ந்த வளங்களை ஒருங்கிணைப்பதும் அதற்கு ஊடாக தாயக மக்களுக்கு நீண்ட காலம் நிலைத்திருக்கக் கூடிய வாழ்வாதார செயற்பாடுகளை முன்னெடுப்பதும் அவசியம்.

இந்த நோக்கத்தின் அடிப்படையில் தமிழ் நோர்வே வள ஒன்றியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நோர்வே வள ஒன்றியத்தின் தொடக்க நிகழ்வும் கலந்துரையாடலும் கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை ஒஸ்லோவில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு ஆயர் ஜோசப் பொன்னையா பங்கேற்புடன் நடைபெற்ற இந்த நிகழ்வில் சமூக ஆர்வலர்கள் பலர் பங்கேற்றிருந்தனர்.

# பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு

பாரிஸின் புறநகர்ப் பகுதிகளில் ஒன்றான குசான்வில் பகுதியில் குசான்வில் பிரான்ஸ் தமிழ்ச் சங்கத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவு விழா அண்மையில் இடம்பெற்றது.

மங்கலவிளக்கேற்றப்பட்டு, அகவணக்கத்தைத் தொடர்ந்து தமிழ்ச்சோலை கீதம் இசைக்கப்பட்டது. தொடர்ந்து வரவேற்புரை இடம்பெற்றது.

குசான்வில் மாநகரச்பை உறுப்பினர்கள், பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக்குழு மற்றும் அதன் உபகட்டமைப்பு உறுப்பினர்கள் உட்பட அனைவரும் வரவேற்கப்பட்டனர்.

பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து குசான்வில் தமிழ்ச்சோலை ஆசிரியர்கள் பிரதமவிருந்தினரால் மதிப்பளிக்கப்பட்டனர். நடன ஆசிரியையும் மாணவிகளால் நினைவுப் பரிசு மற்றும் வாழ்த்துரைகள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டமை குரு பக்தியை அரங்கில் பறைசாற்றியிருந்தது.

நிகழ்வில் சிறப்புரையை பிரான்ஸ் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் சார்பில் ஆசிரியர் சத்தியதாசன் ஆற்றியிருந்தார்.

நிகழ்வில், சிறப்புத் தேர்ச்சி பெற்ற மாணவர்கள் அனைவரும் வெற்றிக்கிண்ணம்,சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். அனைத்து மாணவ மாணவியர்களும் இணைந்து தமிழ்மொழி வாழ்த்து இசைத்தமையைத் தொடர்ந்து நிகழ்வுகள் நிறைவுகண்டன. (ஐ)







# மே 18 நினைவேந்தல் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸ்ஸில்

தமிழீழ தேசிய துக்க நாளாகிய மே 18ஆம் திகதியன்று நினைவேந்தல் நிகழ்வுகள் பல்வேறு பிரதேசங்களில் இடம்பெறவுள்ளன.

இந்த நிலையில் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சலஸ் நகரில் முள்ளிவாய்க்கால் நினைவுப் பேருரை மே 18 ஆம் திகதியன்று இடம்பெறவுள்ளது.

இதனைத் தொடர்ந்து வரும் நாள்களான மே 19 முதல் மே 21 வரையான திகதிகளில் நாடு கடந்ததமிழீழ அரசின்இரண்டாவது நாடாளுமன்றின் ஏழாவது அமர்வு இதே நகரில் இடம்பெறுகின்றது.

உலகின் பல பாகங்களில் இருந்து வரும் நாடு கடந்த தமிழீழ அரசின்நாடாளுமன்ற உறுப் பினர்களும், செனற்சபைஉறுப்பினர்களும் இன்றைய கால கட்டத்தில் தமிழ் மக்கள் எதிர் நோக்கும் சவால்கள் பற்றியும்அவற்றைகையாள்வதற்கு பாவிக்க வேண்டிய உத்திகள் பற்றியும் இதன்போது விவாதிக்கவுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கனேடியத் தமிழர்களது ஏற்பாட்டில்

# முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

கனேடியத்தமிழர்கள் ஆண்டு தோறும் முள்ளிவாய்க்கால் வலி சுமந்த காலங்களின் நினைவாக மே மாதம் முழுவதையும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பு நினைவுத் திங்களாக நினைவு கூர்ந்து பல்வேறு நிகழ்வுகளை அனைத்து அமைப்புக்களையும், மக்களையும் ஒருங்கமைத்து நடத்தி வருவது வழக்கம்.

அந்த வகையில் இந்த ஆண்டின் மே மாதத்திலும் பின்வரும் நிகழ்வுகளை கனேடியத் தமிழர் தேசிய அவை யானது அனைத்து தமிழ் மக்களுடனும் தமிழ் அமைப் புக்களுடனும் இணைந்து முள்ளிவாய்க்கால் இனப் படுகொலை நினைவு நிகழ்வுகளாக நடத்தவுள்ளது:-

நாளை சனிக்கிழமை - விக்டோரியா பார்க் மற்றும் எல்லெஸ்மெயர் சந்திப்பிற்கு அருகில் உள்ள பார்க்வெய் மாலில் குருதிக்கொடை.

14 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை - எவெர்கிறீன் ப்ரிக்வேர்க்கில் மரம் நடல்

16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தலைநகர் ஒட்டாவாவில் நாடாளுமன்ற வளாக முன்றிலில் தமிழின அழிப்பின் நினைவு நாள் நிகழ்வு. இனவழிப்பின் அடையாளங்களையும் சாட்சிகளையும் உலகுக்கு எடுத்துச் செல்லும் வகையான காட்சிப் படங்கள் காண்பிக்கப்படவுள்ளன.

18 ஆம் திகதி வியாழக்கிழமை - முள்ளிவாய்க்கால் தமிழினப்படுகொலையை நினைவு கூரும் கடைசி நிகழ்வாக தமிழின அழிப்பு நினைவு நாள் ஸ்கார்புரொ டவுன் சென்டருக்கு அருகில் உள்ள ஆல்பர்ட் கம்பெல் சதுக்கத்தில் ஒன்றிணைந்த கனேடிய தமிழ் மக்களின் பெரு நிகழ்வாக நடைபெறவுள்ளது.

கனடா வாழ் தமிழ் உறவுகள் அனைவரும் எம் இனத்தின் பேரிழப்பின் வலியை சுமந்து வாழும் தமிழினமாக ஒற்றுமையாக வரலாற்றில் தடம் பதிக்கும் நினைவு நிகழ்வுகளில் பங்கேற்று எழுகை கொள்ளுமாறு அனைவரையும் வேண்டுகின்றோம் என்று கனேடியத் தமிழர் தேசிய அவை தெரிவித்துள்ளது. (ஐ)

## டொப்லர் ராடர் கருவி வலையமைப்புக்கு அமைச்சரவை அனுமதி

காலநிலை மாற்றங்களைத் துல்லியமான முறையில் அறிவிக்கும் வகையில் வளிமண்டலவியல் திணைக்களத்தில் டொப் லர் ராடர் கருவி வலைய மைப்பை நிறுவுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

தேசிய கொள்கை மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சர் எனும் ரீதியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் இதற்காக முன்வைக்கப்பட்டயோசனைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இந்தத் திட்டத்துக்காக 250 கோடி 3 லட்சம் ரூபா ஜப்பானிய யென்மானியத்தை வழங்குவதற்கு ஜப்பான் சர்வதேச கூட்டுறவு நிறுவனம் இணக்கம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பான உடன்படிக்கையொன்று கைச்சாத்திடப்படவுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தேர்தலை ஒத்திவைப்பது அடிப்படை உரிமை மீறல்!

## குற்றஞ்சாட்டுகிறது கூட்டு எதிர்க்கட்சி



கொழும்பு, மே 12

தோல்வியடைந்து விடுவோம் என்ற அச்சத்திலேயே உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதை அரசு ஒத்தி வைத்துள்ளது. தேர்தலை ஒத்திவைப்பது மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல் எனக் கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அந்தக் கட்சியின் முக்கிய உறுப்பினரும், முன்னாள் வெளிவிவகார அமைச்சருமான ஜீ.எல். பீரிஸ் இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேர்தலை நடத்தினால் தோல்வியடைந்து விடுவோம் என்ற அச்சத்தில் தேர்தலை நடத்தமாட்டார்கள். உள்ளூராட்சி தேர்தலை இரண்டு வருடங்களுக்கு மேல் ஒத்திவைப்பது மக்களின் அடிப்படை மனித உரிமை மீறல், அதற்கு மாற்றுவழி என்ன? மக்கள் வீதிக்கு இறங்கினால் அதனைக்கட்டுப்படுத்தவிசேட சட்டத்தைக் கொண்டுவர முயற்சிக்கின்றார்கள். இதுவும் அடிப்படை மனித உரிமை மீறல்.

அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள் ஆகியோரின் சொகுசு வாகனக் கொள்வனவுக்காக 120 கோடி ரூபாவை ஒதுக்கீடு செய்ய நாடாளுமன்றில் அனுமதி கோரப்பட்டுள்ளது.

நாடாளுமன்றச் செயலாளர் என்ற புதிய பதவியை உருவாக்கி அந்தப் பதவியை வகிக்கும் நபருக்கு 430 லட்சம் ரூபா பெறுமதியான சொகுசு வாகனம் ஒன்றைக் கொள்வனவு செய்வதற்கு நாடாளுமன்றத்தில் நிதி கோரப்பட்டுள்ளது. இந்த வருடம் மாத்திரம் மூன்று குறைநிரப்பு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மார்ச் மாதமளவில் இரண்டு குறைநிரப்பு மதிப்பீடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 9 சொகுசு வாகனங்களைக் கொள்வனவு செய்வதற்காக மாத்திரம் 375 லட்சம் ரூபா தேவை என்று கோரப்பட்டுள்ளது.

மக்களைக் கருத்தில் கொள்ளாதஅரசின்நடவடிக்கைகளால் தான் தற்போது அரசுக்கு எதிரான செயற்பாடுகள் மக்களால் முன்னெடுக்கப்படுகின்றன. அதனைத் தடுக்க முடியாது. எனினும் சட்ட விரோதமான முறையில் அரசு அவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளை கட்டுப்படுத்த முனைகின்றது.-என்றார்.

## புஸல்லாவவில் வாகன விபத்து; படுகாயமடைந்தார் ஒருவர்!



நுவரெலியா, மே 12

புஸல்லாவ பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் ஒருவர் படுகாயம் அடைந்தார்.

நுவரெலியாவில் இருந்து கண்டி நோக்கிச் சென்ற ஓட்டோ ஒன்று புஸல்லாவ நகர தபால் நிலையத்தின் அருகில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறி ஒன்றுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தில் ஓட்டோவில் பயணித்த ஒருவரே பலத்த காயங்களுக்கு உள்ளானார். காயமடைந்தவர் புஸல்லாவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை புஸல்லாவபொலிஸார்மேற்கொண்டு வருகின்றனர்.

## ஊழியர் சேமலாப நிதிய முதலீடுகள் தொடர்பில் ஆதாரங்கள் இருந்தால் விசாரணை நடத்தப்படும்

### மத்திய வங்கி ஆளுநர் தெரிவிப்பு

கொழும்பு, மே 12

ஊழியர் சேமலாப நிதிய முதலீடுகள் தொடர்பில் உள்ளக விசாரணையில் ஆதாரங்கள் கண்டு பிடிக்கப்படுமாயின் அது தொடர்பில் ஆணைக் குழு ஒன்று விசாரணையை மேற்கொள்ளும் என்று மத்திய வங்கி ஆளுநர் கலாநிதி இந்திரஜித்குமாரசுவாமி தெரிவித்துள்ளார்.

மத்திய வங்கியை நிர்வகிக்கும் நிதி சபை இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது என மத்திய வங்கியில் இடம் பெற்ற ஊடகச் சந்திப்பில் அவர் கூறியுள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நிறுவன நடைமுறைகளுக்கு அமைய ஊழியர் சேமலாப நிதி முதலீடுகள் தொடர்பில் தற்போது உள்ளக விசாரணைகள்மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், ஊழியர் சேமலாப நிதிக்கையாளுகை தொடர்பில் நிதிச்சபைக்குஅறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அது தொடர்பில் மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்த விடயம் தொடர்பில் நடவடிக்கை எடுப்பதற்கு முன்னர் அதனுடன் தொடர்புடைய அதிகாரிகளுக்கு தமது தரப்பு வாதங்களை முன்வைப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

விசாரணை அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள பணப் பரிமாற்றங்களுடன் தொடர்புடைய உத்தியோகத்தர்களுடன் மத்திய வங்கியின் உதவி ஆளுநர் கலந்துரையாடுவார். இந்த விடயங்களை விசாரணை ஆணைக்குழுவிடம் அவர் முன்வைப்பார்.

விசாரணை ஆணைக்குழுவை மத்திய வங்கியின் நிதிச் சபை அமைக்கும். அந்த ஆணைக்குழுவில் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரும் கணக்கியல் பின்னணியைக் கொண்ட ஒருவரும் நியமிக்கப்படுவார்கள்.-என்றார்.



காடழிப்பைக் குறைப்பதன் ஊடாக, பச்சைவீட்டு வாயு வெளியேற்றத்தைக் குறைக்கும் ஐக்கிய நாடுகள் நிகழ்ச்சித் திட்டத்துக்கு (UN - REDD+) ஏற்பத் தயாரிக்கப்பட்டுள்ள REDD+ முதலீட்டுச் சட்டகம் மற்றும் செயற்றிட்டம், ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ஊனா மெக்கோலியால், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது.

## இலங்கை - அரபு ராஜ்ஜிய வர்த்தகத் தொடர்பு மாநாடு மே 23 இல்!

கொழும்பு, மே 12

இலங்கை மற்றும் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்துக்கு இடையிலான வர்த்தகத் தொடர்புகள் குறித்த மாநாடு ஒன்று எதிர்வரும் 23 ஆம் திகதி, கொழும்பு - தேசிய சம்மேளன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை வர்த்தக சம்மேளனம் இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

இந்த மாநாட்டில் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தின் இலங்கைக்கான தூதுவர் அப்துல் ஹமிட் அல் முல்லா கலந்து கொள்ளவுள்ளார்.

## 13 மாவட்டங்களில் டெங்கின் தாக்கம்; விசேட சூழல் சோதனை நடவடிக்கை!

கொழும்பு, மே 12

நாட்டில் டெங்கு நோயின் தாக்கம் ஏற்பட்டுள்ள 13 மாவட்டங்களில் எதிர்வரும் 18 மற்றும் 19 ஆம் திகதிகளில்விசேடசூழல்சோதனை நடவடிக்கைகளை முன்னெடுக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்று நோய் ஆராய்ச்சிப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தச்சோதனைநடவடிக்கைகளுக்காக ஆயிரத்து 500 குழுக்களை ஈடுபடுத்துவதற்கும்திட்டமிடப்பட்டுள்ளதாக அந்தப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் டாக்டர் பிரஷிலா சமரவீர குறிப்பிட்டார்.

இந்தச் சோதனையின் போது வெசாக் பண்டிகை காலத்தில் சேர்கின்ற உக்கிப் போகாத பொலித்தீன் உள்ளிட்ட பொருள்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்என்றும்அவர்மேலும் கூறினார்.

# ஆட்சியைக் காப்பாற்றுவதிலேயே தமிழக அரசின் கவனம் உள்ளது!

## தி.மு.க. செயல் தலைவர் ஸ்டாலின் குற்றச்சாட்டு



சென்னை,மே 12

தமிழக அரசு மக்களைப் பற்றிச் சிந்திக்காமல் ஆட்சியை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது என்பது தொடர்பிலேயே அதிக கவனம் செலுத்துகிறது.

-இவ்வாறு தமிழக எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு.க. செயல் தலைவருமான மு.க. ஸ்டாலின் குற்றம் சாட்டியுள்ளார்.

கொளத்தூர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட முத்து மாரியம்மன் கோயில் குளத்தை தூர்வாரும் பணி நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அ.தி.மு.கவினர் ஜெயலலிதா மறைவுக்குப் பிறகு அந்தக் கட்சியில் ஏற்பட்டுள்ள பிளவை சரி செய்து, அணிகளை இணைப்பது தொடர்பிலும், கொள்ளையடிப்பது, லஞ்சம் வாங்குவது , அதில் சிக்கிக்கொள்ளாமல் இருப்பது எவ்வாறு என்பதைப் பற்றியுமே சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு மக்கள் நலனைப் பற்றிச் சிந்திப்பதற்கு நேரமில்லை.

தமிழகத்தில் நடைபெற்று வரும் அ.தி.மு.க. ஆட்சியில் தற்போது கடுமையான குடிதண்ணீர்ப் பற்றாக்குறை நிலவுகிறது. கடந்த தி.மு.க. ஆட்சியில் குடிதண்ணீர் தட்டுப்பாடு ஏற்பட்டபோது, அதனை சமாளிப்பதற்கு பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன.

சென்னையின் நீர் ஆதாரங்களான செம்பரம்பாக்கம், புழல் ஏரிகள் எல்லாம் வறண்டு வருகின்றன. தமிழகம் முழுவதுமே ஏரிகள் வறண்டு விட்டன. எனவே, தண்ணீர் தட்டுப்பாடு அதிகரித்துள்ள நிலையில் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால், இதுபற்றியெல்லாம் கவலைப்படாமல் பதவியைத் தக்க வைத்துக் கொள்வதில்தான் முதலமைச்சரும், அமைச்சர்களும் அக்கறை காட்டி வருகின்றனர். -என்றார். (ச)

# மும்மொழிகளிலும் பிரதமர் மோடி 'ட்விட்'



இந்திய பிரதமர் நரேந்திர மோடி இலங்கை விஜயம் குறித்துத் தமிழ், ஆங்கிலம் மற்றும் சிங்களம் ஆகிய மும்மொழிகளிலும், தனது உத்தியோகபூர்வ ட்விட்டர் வலைத்தளத்தில் பதிவு செய்துள்ளார்.

பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில்,

'இரண்டு நாள் விஜயத்தை மேற்கொண்டு இலங்கையில் இருப்பேன். இதன்போது வெசாக் தினக் கொண்டாட்டங்கள் மற்றும் ஏனைய நிகழ்வுகளில் இணைந்து கொள்வேன்' என்று தெரிவித்துள்ளார்.

## அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்க

# அ.தி.மு.க இரு அணிகளுக்கும் தேர்தல் ஆணையகம் அழைப்பு!

தேர்தல் ஆணையகம் நடத்தும் அனைத்து கட்சி கூட்டத்தில் பங்கேற்கும்படி, அ.தி. மு.கவின் இரு அணிகளுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சமீபத்தில் நடந்த ஐந்து மாநில சட்டசபைத் தேர்தலில், பா.ஜ.க. நான்கு மாநிலங்களில்வெற்றிபெற்று, ஆட்சியைப் பிடித்தது. அதைத் தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் முறைகேடு செய்து, பா.ஜ.க. வெற்றி பெற்றது என எதிர்க்கட்சிகள் குற்றஞ்சாட்டின.

அந்தக் குற்றச்சாட்டை தேர்தல் ஆணையகம் மறுத்தது. இதையடுத்து, இந்த முறைப்பாடு தொடர்பாக அனைத்து கட்சி தலைவர்களை அழைத்து அவர்களின் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்பதை விளக்குவதற்குத் தேர்தல் ஆணையகம் திட்டமிட்டது. அதன்படி, டில்லியில் அனைத்துக் கட்சி கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. இதில் பங்கேற்கும்படி, அங்கீகாரம் பெற்ற கட்சிகளுக்கு மட்டும் அழைப்பு அனுப்பப்பட்டுள்ளது.

தமிழகத்தில், அ.தி.மு.க. பிளவுபட்டுள்ள நிலையில் இரு அணிகளுக்கும் தேர்தல் ஆணையகம்அழைப்பு அனுப்பி உள்ளது. பன்னீர் அணி சார்பில் ராஜ்யசபா அமைச்சர் மைத்ரேயன், முன்னாள் அமைச்சர் மனோஜ் பாண்டியன் ஆகியோர் பங்கேற்கின்றனர். சசிகலா அணி சார்பில் பங்கேற்க உள்ளவர்கள் பெயர் வெளியிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

அனைத்துக் கட்சி கூட்ட அழைப்பிதழ் கடிதம் சசிகலா அணிக்கு சென்னை ராயப்பேட்டையில் அமைந்துள்ள கட்சி தலைமை அலுவலக முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டது. அதில்,பொதுச் செயலர் என மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளமை. சசிகலா எனக் குறிப்பிடப்படவில்லை.

சசிகலா பொதுச் செயலராக நியமிக்கப்பட்டமை செல்லாது என அறிவிக்க கோரி பன்னீர் அணியினர் தாக்கல் செய்துள்ள மனு நிலுவையில் உள்ளமையால், அவரது பெயர் குறிப்பிடப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# இந்திய ஜனாதிபதித் தேர்தலில் காந்தியின் பேரன் போட்டி?



புதுடில்லி, மே 12

ஜனாதிபதித் தேர்தலில் எதிர்க்கட்சிகள் சார்பில், மகாத்மா காந்தியின் பேரன் கோபால கிருஷ்ண காந்தி போட்டியிட வாய்ப்பு உள்ளது எனக் கூறப்படுகிறது.

மகாத்மா காந்தியின் கடைசி மகன் தேவதாஸ் காந்தி. இவரது மனைவி ராஜாஜியின் மகள் லட்சுமி. இந்த தம்பதியின் மகன் தான் கோபால கிருஷ்ண காந்தி. இவர், முன்னாள் ஐ.எ.எஸ். அதிகாரி. ஜனாதிபதியின் செயலாளராக பணியாற்றியவர். மேலும், மேற்கு வங்க ஆளுநராகவும் பதவி வகித்தவர்.

### சோனியா பேச்சு

தற்போதைய ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியின் பதவிக் காலம், ஜூலை மாதம் 19 ஆம் திகதி முடிவடைகிறது. எனவே, எதிர்க்கட்சிகள் சார்பில் பொதுவான ஒரு வேட்பாளரை நிறுத்தும் முயற்சியில் காங்கிரஸ் தலைவர் சோனியா ஈடுபட்டுள்ளார்.

இந்த சூழ்நிலையில் கோபால கிருஷ்ண காந்தியைப் பொது வேட்பாளராக நிறுத்த எதிர்க்கட்சிகள் திட்டமிட்டுள்ளன. இது குறித்து கோபால கிருஷ்ண காந்தி தெரிவிக்கையில்-

இந்த விடயம் தொடர்பில் பேசப்பட்டுள்ளது. ஆனால், இது குறித்த பேச்சு தொடக்க நிலையில்தான் உள்ளது. இதற்கு மேல் இப்போது எதையும் கூற முடியாது.-என்றார்.

கோபால கிருஷ்ண காந்தி அல்லது லோக்சபா முன்னாள் சபாநாயகர் மீரா குமார் ஆகியோர் தான் எதிர்க்கட்சிகளின் பரிசீலனையில் உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# திருமண மண்டப சுவர் விழுந்து ராஜஸ்தானில் 26 பேர் உயிரிழப்பு!



ராஜஸ்தான் பரத்பூர் மாவட்டத்தில் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு திருமண மண்டபத்தின் சுற்றுச் சுவர் இடிந்து விழுந்ததில், 26 பேர் உயிரிழந்துள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட முதற்கட்ட விசாரணையில் பருவநிலை மாற்றத்தால் ஏற்பட்ட சூறாவளி காற்றினாலேயே இந்த விபத்து இடம்பெற்றது எனத் தெரிவிக்கப்படுகிறது.

திருமண நிகழ்வு ஒன்றில் சுமார் 400 இற்கும் மேற்பட்டவர்கள் கலந்துகொண்டுள்ள நிலையில், அந்தப்பகுதியில் சூறாவளி ஏற்பட்டது. இதிலிருந்து மக்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்தாக 90 அடி நீளமும் 13 அடி உயரமும் கொண்ட திருமண மண்டபச் சுவர் அருகே தஞ்சம் அடைந்தனர். இதன்போதே, மேற்படி விபத்து ஏற்பட்டது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# கொடநாடு எஸ்டேட்டில் புதிய சோதனைச் சாவடி: 'ஜெ' இன் பங்களாவில் பாதுகாப்பு அதிகரிப்பு!



கொடநாடு எஸ்டேட்டின் கெரடாமட்டம் என்ற இடத்தில் புதிதாகச் சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அதேசமயம், நேற்றுமுன்தினம் புதன்கிழமை மாலை முதல் ஜெயலலிதாவுக்குச் சொந்தமான கொடநாடு பங்களாவின் 7, 8 மற்றும் 9 ஆம் நுழைவு வாயில்களில் கூடுதல் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. இதற்காக 30 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொடநாடு பங்களாவின் தொலைபேசி அழைப்புக்கள் குறித்தும் பொலிஸ் அதிகாரி தலைமையில் வல்லுநர்கள் ஆராய்ந்து வருகிறார்கள்.

கொடநாடு காட்சி முனைக்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் வாகனங்கள் கடும் சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு சொந்தமான கொடநாடு எஸ்டேட் பங்களாவில் கடந்த மாதம் 24 ஆம் திகதி கொள்ளைச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது. இந்தச்சம்பவத்தில் ஒரு காவலாளி கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். மற்றுமொரு காவலாளி தாக்கப்பட்டார்.

இந்தக் கொலை மற்றும் கொள்ளைச் சம்பவத்துடன் 11 பேருக்குத் தொடர்பு இருக்கின்றமை பொலிஸாருக்குத் தெரியவந்துள்ள நிலையில், விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் மேலும் 4 பேருக்கு தூக்கு

இஸ்லாமபாத், மே 12

பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகள் மேலும் 4 பேர் நேற்று முன்தினம் தூக்கிலிடப்பட்டுள்ளனர்.

அப்பாவி மக்களைக் கொன்றமை, மசூதி மீது தாக் குதல் நடத்தியமை, பாதுகாப்புப்படைகளைத் தாக்கியமை உள்ளிட்ட குற்றங்களில் ஈடுபட்டவர்களே இவ்வாறு தூக்கிலிடப்பட்டனர்.

இது தொடர்பில் பாகிஸ்தான் இராணுவம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தூக்கில் இடப்பட்ட வர்கள் தெஹ்ரீக்-இ- தலிபான் பாகிஸ்தான் என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது. அதேவேளை அவர்கள் எந்தச் சிறையில் தூக்கிலிடப்பட்டனர் எங்கு விசாரணை நடந்தது, எப்போது மரண தண்டனை விதிக்கப்பட்டது என்பன போன்ற விவரங்கள்வெளியிடவில்லை.

இதேவேளை பெஷாவர் தாக்குதலுக்குப் பின்னர் 441 பேரை பாகிஸ்தான்தூக்கிலிட்டுள்ளனர் என்று மனித உரிமை அமைப்புதெரிவித்துள்ளது.

# யாசிதி சமூகத்தவர் 10 ஆயிரம் பேர் ஐ.எஸ்.தீவிரவாதிகளால் வேட்டை!

## ஆய்வாளர்கள் அதிர்ச்சித் தகவல்

பக்தாத், மே 12

ஐ.எஸ். தீவிரவாதிகளால் ஈராக்கில் யாசிதி சமூகத்தைச் சேர்ந்த சிறுவர்கள் மற்றும் பெண்கள் உட்பட 10 ஆயிரம் பேர் கடத்தப்பட்டும் கொலை செய்யப்பட்டும் இருக்கலாம் என்று ஆய்வாளர்களால் அதிர்ச்சித் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

ஈராக்கில் இருந்து யாசிதி சமூகத்தினர் கூண்டோடு மாயமாகி வந்த விவகாரத்தில் அவர்கள் என்ன ஆனார்கள் என்ற உறுதியான தகவல் இதுவரை வெளியாக வில்லை. இந்த நிலையில், இதுவரை 9 ஆயிரத்து 900 பேர் கொடூரமாகக் கொலை செய்யப்பட்டிருக்கலாம் அல்லது கடத்தப் பட்டிருக்கலாம் என்ற தகவல் பிரிட்டன், அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நாட்டு ஆய்வாளர்களால் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.



இதுதொடர்பில் ஆய்வாளர்களின் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

இதில் அதிர்ச்சி தரும் தகவல் என்னவெனில், 2014 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத் தின் ஒரு சில தினங்களில் இந்த அதிகொடூர செயல் நடைபெற்றுள்ளது.

இதில் 3 ஆயிரத்து 100 பேர் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அது மட்டுமின்றி இந்த எண்ணிக்கையில் அரைவாசிக்கும்அதிகமானோரை துப் பாக்கியால் சுட்டும், தலையைத்துண்டித்தும், உயிருடன் எரித்தும் கொலை செய்துள்ளனர்.

மேலும், ஒருபகுயினர் உணவின்றி பட்டினியாலும்,தண்ணீரின்றியும் மற்றும் படு காயங்களாலும் உயிரிழந்துள்ளனர்.

இளைஞர்களைக் கொத்துக் கொத்தாகக் கொன்றொடுக்கிய ஐ.எஸ். தீவிரவாதிகள், யாசிதி சிறுவர்களையும் குறிவைத்து வேட்டையாடியுள்ளனர்.

அந்தக் காலகட்டத்தில் யாசிதி சமூகத்தினர் 6 ஆயிரத்து 800 பேரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கடத்திச் சென்றுள்ளனர். இதில் நான்கில் மூன்று பகுதியினர் ஆய்வு மேற்கொள்ளப்பட்ட காலத்திலும் மாயமானவர்கள் பட்டியலில் இருக்கின்றனர்.

ஐ.எஸ். தீவிரவாதிகள் மேற்கொண்ட யாசிதி இனப்படு கொலையில் மிகக்கடுமையாகப் பாதிப்புக்குள்ளானது 15 வயதுக்கும் குறைவான சிறுவர்களே. எனவே ஐக்கிய நாடுகள் மன்றம் இது குறித்து உரிய ஆய்வு மற்றும்விசாரணை மேற்கொள்ள வேண்டும். யாசிதி சமூகத்தின்மீது நடத்தப்பட்டது இனப்படு கொலை என்று கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஐ.நா. சபையால் அறிவிக்கப்பட்ட நிலையில் இந்த ஆய்வு மேலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.- என்றுள்ளது.

# பிரான்ஸில் அகதிகள் முகாமிலிருந்து 1600 பேர் பலவந்தமாக வெளியேற்றம்

பரிஸ், மே 12

பிரான்ஸில் அகதிகள் முகாமிலிருந்து அகதிகள் ஆயிரத்து 600 பேர் வலுக் கட்டாயமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் உள்ள லாச்சப்பல் பகுதிக்கு இரு தினங்களுக்கு முன்னர் அதிகாலையில் 350 இற்கும் அதிகமான பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

அங்கு தற்காலிகமாக அமைக்கப்பட்டிருந்த அகதிகள் முகாமுக்குச் சென்ற பொலிஸார் அங்கு தங்கியிருந்த ஆயிரத்து 600 பேரை அங்கிருந்து வலுக்கட்டாயமாக வெளியேற்றினார்கள்.

சட்டத்துக்குப் புறம்பாக அமைக்கப்பட்ட அந்த முகாம், அதிகாரபூர்வமாக அரசால் அமைக்கப்பட்ட அகதிகள் முகாம் அருகில் உள்ளது.



அதிகாரபூர்வ முகாமில் அதிகளவில் அகதிகள் தங்கியுள்ளனர் என்பதால் அங்கு இடமில்லாத சூழல் ஏற்பட்டுள்ளது. இதன் காரணமாக அகதிகள் தனியாக வேறு முகாம் அமைத்துள்ளார்கள் என்று தெரியவந்துள்ளது.

இந்தநிலையில் அகதிகளை அங்கிருந்து வெளியேற்றும் போது, அவர்களுக்கும் பொலிஸாருக்கும் நடைபெற்ற மோதலில் சிலர் காயம் அடைந்தனர்.

அவர்கள் சட்டபூர்வமான இடத்தில் தங்க வைக்கப்படுவார்கள் என்று தெரிகிறது.

# சீனாவில் நில அதிர்வு எண்மர் உயிரிழப்பு!

பீஜிங், மே 12

சீனாவின்ஜின் ஜியாங் பிராந்தியத்தில்நேற்றுதிடீரெனஏற்பட்டநில நடுக்கத்தால் 8 பேர் உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.



வடக்கு சீனாவில் ஜின் ஜியாங் தன்னாட்சி பிராந்தியமாக உள்ளது. அங்குள்ள டேக்ஸ் கோர்கான் கவுண்டி என்ற பகுதியில் நேற்று அதிகாலை 5.58 மணிக்கு நில நடுக்கம் ஏற்பட்டது. இது ரிச்டர் அளவு கோலில் 5.4 ஆகப் பதிவாகி இருந்தது.

இதையடுத்து திறந்த வெளிக்கு மக்கள் பீதியில் அங்கிருந்து ஓடினார்கள். மரப் பலகைகளால் செய்யப்பட்ட கட்டடங்கள் இடிந்து விழுந்தன.

இந்த நிலநடுக்கத்தால் 8 பேர் உயிரிழந்தனர். 20 இற்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். காயம் அடைந்தவர்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். மீட்புப் பணியில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர். நிலநடுக்கத்தைத் தொடர்ந்து அங்கு பல முறை நில அதிர்வு ஏற்பட்டது.


ஆப்கானிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் எல்லையில் தஜிகிஸ்தான் அமைந்துள்ளது. இதனால் அந்த நாடுகளின் எல்லையோரப் பகுதிகளிலும் நில அதிர்வு உணரப்பட்டது.

# ஜேம்ஸ் கோமியின் பதவி நீக்கம் இருநாட்டு உறவைப் பாதிக்காது!

## பதிலளித்தார் ரஷ்ய ஜனாதிபதி புடின்

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் ரஷ்யாவின் தலையீடுகள் தொடர்பில் விசாரணை செய்த புலனாய்வுப் பிரிவின் தலைவர் ஜேம்ஸ் கோமி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பால் பணி நீக்கம் செய்யப்பட்டமை இருநாட்டு உறவுகளிலும் எவ்வித பாதிப்பையும் எற்படுத்தா என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் தெரிவித்துள்ளார்.

ஜேம்ஸ் கோமியின் பணி நீக்கம் ரஷ்யாவில் எத்தகைய விளைவுகளை ஏற்படுத்தும் என்ற ஊடகவியலாளர் ஒருவரின் கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் மேற்படி தெரிவித்துள்ளார்.



மேலும், இந்தக் கேள்வி மிகவும் வேடிக்கையாக உள்ளது. ஜனாதிபதி ட்ரம்ப், சட்டத்துக்கும் அரசமைப்புக்கும் ஏற்ப செயற்படுகின்றார். இதில் நாம் எதுவும் செய்ய முடியாது என்று அவர் மேலும் கூறினார்.

# புகலிடக்கோரிக்கையாளர் 350 பேர் லிபியக் கடற்பிராந்தியத்தில் மீட்பு!


சட்டவிரோதமாகபடகுமூலம் ஐரோப்பாவுக்கு பயணிக்க முயன்ற புகலிடக் கோரிக்கையாளர்கள்350 பேர் லிபியக்கடற்பரப்பில் மீட்கப்பட்டுள்ளனர்.

இந்தப் புகலிடக்கோரிக்கையாளர்கள் 350 பேரும் மீட்கப்பட்டு திரிபோலிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

அந்தப் புகலிடக்கோரிக்கையாளர்கள் கடற்படையினரால் அரச சார்பற்ற நிறுவனத்தின் கப்பல் மூலம் மீட்கப்பட்டுள்ளனர் என்று அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துனீசியா, மொரோகோ, சிரியா, எகிப்து மற்றும் பங்களாதேஷ் ஆகிய நாடுகளைச் சேர்ந்த புகலிடக் கோரிக்கையாளர்களே சப்ரதா நகரிலிருந்து 17 மைல் தொலைவில் மீட்கப்பட்டனர் என்று லிபிய கடற்படை அதிகாரி அபோ அகில அப்டல்பெரி தெரிவித்துள்ளார்.


அந்தப் புகலிடக் கோரிக்கையாளர்கள் சப்ரதா நகரிலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை பயணித்தனர் என்று அவர்களை மேற்கோள்காட்டி ரொய்ட்டர் செய்திச் சேவை செய்தி வெளியிட்டுள்ளது.



கடற்பயணம் மூலம் ஐரோப்பாவினுள் பிரவேசிப்பதற்கான பிரதான மார்க்கமாக லிபியா காணப்படுவதால் அபாயகர கடற் பயணம் மேற்கொள்ளும் சட்டவிரோத புலிடக்கோரிக்கையாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

2016 ஆம் ஆண்டில் இவ்வாறு கடல்பயணம் மூலம் ஒரு லட்சத்து 81 ஆயிரம் பேர் லிபியாவுக்குள் பிரவேசித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சம்பியன் கிண்ணத் தொடரில் சாதிப்பாராம் லசித் மலிங்க!



தெரிவிக்கும் போதே மலிங்க

கொழும்பு, மே 12

இங்கிலாந்தில் நடைபெறவுள்ள சம்பியன் கிண்ணத் தொடரில் சிறப்பாக விளையாடி தாக்கத்தை ஏற்படுத்துவோம் என்று இலங்கை அணிக்குத் திரும்பியுள்ள வேகப் பந்து வீச்சாளர் லசித் மலிங்க கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் எதிர் வரும் ஜுன் மாதம் முதலாம் திகதி சம்பியன் கிண்ணத் தொடர் நடைபெற உள்ளது. இதற்காக அனைத்து அணிகளும் தங்கள் நாட்டு அணி வீரர்களின் பெயர்களை வெளியிட்டுள்ளன.

அந்த வகையில், இலங்கை அணிக்கு வலுச் சேர்க்கும் வகையில் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க இலங்கை அணியில் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இது குறித்து கருத்துத் தெரிவிக்கும் போதே மலிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பின்னர் தற்போது ஒரு நாள் தொடருக்கு திரும்பியுள்ளேன். இது எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது.

இங்கிலாந்தில் இந்தத் தொடர் நடைபெறுவதால், மிகவும் சிறப்பானதாக அமையும். எங்கள் குழுவில் இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா போன்ற பலம் வாய்ந்த அணிகள் உள்ளன.

அதனால், போட்டிகள் கடுமையாக இருக்கும். இருந்த போதிலும் எங்கள் அணியிலும் சிறப்பான வீரர்கள் இருப்பதால், சம்பியன் கிண்ணத் தொடரில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்துவோம்.- என்றும் அவர் கூறியுள்ளார்.

கடந்த 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திற்குப் பின்னர் ஒரு நாள் போட்டிகளில் இலங்கை அணிக்கு திரும்பும் மலிங்க, சம்பியன் கிண்ணத் தொடரில் சாதிப்பார் என்று இலங்கை ரசிகர்கள் பெரிதும் எதிர்பார்க்கின்றனர்.

# ஜெயசூர்யா அற்புதமான வீரர்: சச்சின் டெண்டுல்கர் புகழாரம்!



மும்பை, மே 12

இலங்கை அணியின் முன்னாள் அதிரடி ஆட்டக்காரரான ஜெயசூர்யா ஓர் அற்புதமான வீரர் என்று இந்திய அணியின் முன்னாள் வீரர் சச்சின் டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணிக்கு பல்வேறு வெற்றிகளைத் தேடிக் கொடுத்தவர் ஜெயசூர்யா. இவரின் அதிரடியால் பெரிதும் ஈர்க்கப்பட்ட மும்பை அணி ஐ.பி.எல். தொடரில் இவரை முதல் ஆளாக ஏலத்திற்கு எடுத்தது.

அத்தொடரிலும் தன்னுடைய அதிரடியை விட வில்லை. வயதானாலும் தனது அதிரடி அப்படியே இருக்கிறது என்பதை நிரூபித்தார். அதன் பின் கிரிக்கெட் உலகிலிருந்து ஓய்வு பெற்றார்.

இந்த நிலையில், மும்பை அணி அண்மையில் ஐ.பி.எல். தொடரில் சிறப்பாகச் செயற்பட்ட அனைத்து அணியைச் சேர்ந்த வீரர்களுக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தது. அந்நிகழ்ச்சிக்கு மும்பை அணியின் முன்னாள் வீரராக ஜெயசூர்யா சென்றிருந்தார். இந்த விடயம் சிறப்பான அம்சமாக நோக்கப்பட்டது.

அதன்பின் மும்பை அணி ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளது.

அந்த வீடியோவில் தோன்றிக் கருத்துத் தெரிவிக்கும் போதே சச்சின் டெண்டுல்கர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜெயசூர்யா ஓர் அற்புதமான வீரர், கிரிக்கெட் விளையாடுவதற்கு அவர் கை ஓர் அற்புதமான கை. அவருடைய அடி ஓர் டென்னிஸ் 'ரொக்கெட் ஷொட்' போன்று இருக்கும். என்று கூறியுள்ளார்.

# மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுகளை வீழ்த்தினார் கோஸ்சுவாமி!



போச்செவ்ஸ்ட்ரோம், மே 12

மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர் என்ற பெருமையை இந்திய வேகப்பந்துவீச்சு வீராங்கனை ஜீலான் நிஷித் கோஸ்சுவாமி பெற்றுக் கொண்டுள்ளார்.

தென்னாபிரிக்காவில் நடைபெற்றுவரும் நான்கு முனை மகளிர் சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் தொடரில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக போச்செவ்ஸ்ட்ரோமில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற லீக் போட்டியில் 3 விக்கெட்டுக்களை வீழ்த்தியதன் மூலம் கோஸ்சுவாமி தனது மொத்த விக்கெட்டுகளின் எண்ணிக்கையை 181 ஆக உயர்த்தி இந்த மைல்கல்லை எட்டினார்.

இந்தப் போட்டியில் தென்னாபிரிக்காவை 7 விக்கெட்டுகளால் இந்தியா வெற்றிகொண்டது.

தென்னாபிரிக்கா 39.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இந்தியா 41.2 ஓவர்களில் 3 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 121 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதற்கு முன்னர் அதிக விக்கெட்டுகள் வீழ்த்திய வீராங்கனைகள் வரிசையில் அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீராங்கனை கெத்ரின் லொரெய்ன் பிட்ஸ்பெட்றிக் 109 போட்டிகளில் 180 விக்கெட்டுகளுடன் முதலிடத்தில் இருந்தார்.

# ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட வல்லவர் போட்டி; 15 கோல்கள் வித்தியாசத்தில் இலங்கை அணி வெற்றி!



சியோல், மே 12

தென் கொரியாவின் ஜியொங்சு உள்ளக விளையாட்டரங்கில் நடைபெற்றுவரும் பத்தாவது ஆசிய இளையோர் வலைப்பந்தாட்ட வல்லவர் போட்டிகளில் நேற்றுமுன்தினம் மிகவும் அவசியமான வெற்றியை இலங்கை பதிவு செய்தது.

ஹொங் கொங்கிற்கு எதிராக நடைபெற்ற குழு 'ஏ' இற்கான தீர்மானமிக்க போட்டியில் 60 - 45 என்ற கோல்கள் கணக்கில் இலங்கை வெற்றிபெற்றது.

இந்த வெற்றியுடன் அரை இறுதிச் சுற்றில் விளையாடுவதை இலங்கை உறுதி செய்து கொண்டது.

கோல்நிலை வீராங்கனை கவீனா ராஜபக்ஷ, கோல்நிலை எதிர்த்தாடும் வீராங்கனை ரஷ்மி பெரேரா ஆகியோரின் சிறந்த கோல் போடும் ஆற்றல்கள் இலங்கையின் வெற்றியில் முக்கிய பங்காற்றியமையுடன் ஏனைய வீராங்கனைகளும் உத்வேகத்துடன் விளையாடியுள்ளனர்.

போட்டியின் முதலாவது ஆட்ட நேர பகுதியில் 18 - 11 என்ற கோல்கள் அடிப்படையில் முன்னிலையில் இருந்த இலங்கை, இரண்டாவது ஆட்ட நேர பகுதியை பலத்த சவாலுக்கு மத்தியில் 11 - 11 என்ற கோல்கள் கணக்கில் சமப்படுத்திக்கொண்டது. எனினும், இடைவேளையின்போது 29 - 22 என்ற கோல்கள் அடிப்படையில் இலங்கை முன்னிலையில் இருந்தது.

இடைவேளையின் பின்னர் மீண்டும் திறமையை வெளிப்படுத்திய இலங்கை மூன்றாவது ஆட்ட நேர பகுதியை 17 - 11 என தனதாக்கிக் கொண்டது. கடைசி ஆட்ட நேர பகுதியில் மீண்டும் கடும் சவாலை எதிர்கொண்ட இலங்கை ஒருவாறு 14 - 13 என முன்னிலை வகித்து ஆட்ட முடிவை தனக்கு சாதகமாக்கிக்கொண்டது. இலங்கை சார்பாக கவீனா ராஜபக்ஷ 47 முயற்சிகளில் 47 கோல்களையும் ரஷ்மி பெரேரா 19 முயற்சிகளில் 13 கோல்களையும் போட்டனர்.

அரை இறுதிப் போட்டிகள் இன்று நடைபெறவுள்ளன. முதலாவது அரை இறுதிப் போட்டியில் மலேஷியாவை ஹொங் கொங் எதிர்த்தாடவுள்ளதுடன் இரண்டாவது அரை இறுதிப் போட்டியில் சிங்கப்பூர், இலங்கை அணிகள் மோதவுள்ளன.

# ஐயரின் அதிரடித் துடுப்பாட்டத்தால் ஆறுதல் வெற்றி பெற்றது டில்லி!



கான்பூர், மே 12

10 ஆவது ஐ.பி.எல். தொடரில் நேற்றுமுன்தினம் விறுவிறுப்பிற்கு சற்றும் குறைவில்லாத வகையிலான போட்டி ஒன்று இடம்பெற்றது.

கான்பூர் மைதானத்தில் இடம்பெற்ற இந்தப் போட்டியில் டில்லி டேர்டெவில்ஸ் மற்றும் குஜராத் லயன்ஸ் ஆகிய அணிகள் பலப்பரீட்சை நடத்தின.

இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற டில்லி டேர்டெவில்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடக் களம் இறங்கிய குஜராத் லயன்ஸ் அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக டுவைன் ஸ்மித் மற்றும் இஷான் கிஷான் ஆகியோர் களமிறங்கினர்.

ஆரம்பம் முதலே டில்லி டேர்டெவில்ஸ் அணியின் பந்து வீச்சாளர்கள் ஆதிக்கம் செலுத்தினர். மொஹம்மத் ஷமி வீசிய 4 ஆவது ஓவரில் ஸ்மித் 8 ஓட்டங்கள் எடுத்த நிலையில் 'ரன் அவுட்' முறையில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய அணித் தலைவர் சுரேஷ் ரெய்னாவும் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

பின்னர் இஷான் கிஷானுடன் ஜோடி சேர்ந்த தினேஷ் கார்த்திக் நிதனாமாக விளையாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையைப் படிப்படியாக உயர்த்தினார். குஜராத் லயன்ஸ் அணியின் ஓட்ட எண்ணிக்கை 56 என்ற நிலையில் இருந்தபோது, அமித் மிஷ்ரா வீசிய 7 ஆவது ஓவரில் இஷான் கிஷான் ஆட்டமிழந்தார்.

அவர் 25 பந்துகளில் 5 பவுண்டரிகள் மற்றும் 1 சிக்ஸர் அடங்கலாக 34 ஓட்டங்களை எடுத்தார்.

அடுத்துக் களமிறங்கிய ஆரோன் பிஞ்ச், தினேஷ் கார்த்திக்குடன் ஜோடி சேர்ந்து அதிரடியாக விளையாடினார். குஜராத் லயன்ஸ் அணி 17ஆவது ஓவரில் 146 ஓட்டங்கள் எடுத்திருந்த நிலையில் தினேஷ் கார்த்திக் 40 ஓட்டங்களில் கார்லோஸ் பரத்வெயிட்டின் பந்துவீச்சில் அண்டர்சனிடம் பிடிகொடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்து ரவீந்திர ஜடேஜா களமிறங்கினார். இதே ஓவரின் அடுத்த பந்தில் ஆரோன் பிஞ்ச் சிக்ஸர் அடித்து அரைச் சதம் கடந்தார்.

இறுதியில் 20 ஓவர்கள் நிறைவில் குஜராத் லயன்ஸ் அணி 5 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 195 ஓட்டங்களைக் குவித்தது.

இதனையடுத்து 196 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் டில்லி டேர்டெவில்ஸ் அணி துடுப்பாடக் களமிறங்கியது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான எஸ்.வி. சாம்சன் 10 ஓட்டங்களையும், கே.கே. நாயர் 30 ஓட்டங்களையும் குவித்து ஆட்டமிழந்தனர். பின் களமிறங்கிய ஆர்.ஆர். பான்ட் 4 ஓட்டங்களில் ஆட்டமிழக்க எஸ்.எஸ். ஐயர் களமிறங்கினார்.

ஆரம்பம் முதலே அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய எஸ்.எஸ். ஐயர் 57 பந்துகளில் 15 பவுண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்கள் அடங்கலாக 96 ஓட்டங்களைக் குவித்து ஆட்டமிழந்தார்.

இறுதியில் மொஹம்மத் ஷமி 4 ஓட்டங்களுடனும், அமித் மிஷ்ரா 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இறுதியில் டில்லி டேர்டெவில்ஸ் அணி 19.4 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்கள் இழப்பிற்கு 197 ஓட்டங்களைக் குவித்து வெற்றி பெற்றது.

# ஐ.சி.சி. தலைவர் பதவியில் நீடிக்க ஷாஷாங் மனோகர் இணங்கினார்!



டுபாய், மே 12

சர்வதேச கிரிக்கெட் சபைக்கு புதிய அவைத் தலைவர் ஒருவர் இம் மாதம் நியமிக்கப்படுவாரா என நிலவி வந்த சந்தேகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

அவைத் தலைவர் பதவியிலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக கடந்த மார்ச் மாதம் விலகுகிறார் என்று அறிவித்த ஷாஷாங் மனோகர் தனது இரண்டு வருட தவணைக் காலம் 2018 ஆண்டு ஜீன் மாதம் பூர்த்தியாகும் வரை அப் பதவியில் இருக்கப்போகிறார் என்று நேற்றுமுன்தினம் அறிவித்துள்ளார்.

ஷாஷாங் பதவி விலக முன்வந்த போதிலும் இம் மாதம் நடைபெறவுள்ள சர்வதேச கிரிக்கெட் சபையின் பொதுச் சபைக் கூட்டம் வரை அவைத் தலைவர் பதவியைத் தொடருமாறு ஐ. சி. சி. பணிப்பாளர்கள் பலர் கேட்டுக்கொண்டதற்கு அமைய அவர் தனது தீர்மானத்தை மாற்றி அப் பதவியைத் தொடர்ந்து வகித்துவந்தார்.

எனினும், பொதுச்சபைக் கூட்டம்வரை மாத்திரமே அவைத் தலைவராக இருக்க முடியும் எனக் கூறிய ஷாஷாங் மனோகர், இரண்டாவது தடவையாக தனது நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு அப் பதவியில் தொடர்வதற்கு தீர்மானித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையில் பூரண அங்கத்துவம் உடைய நாடுகளின் வேண்டுகோளுக்கு அமையவே அவர் தனது பதவியைத் தொடர்வதற்கு தீர்மானித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபை வருவாயில் பெரும் பகுதியை முன்னைய முப் பெரும் சக்திகளான இந்தியா, ஆஸ்திரேலியா, இங்கிலாந்து ஆகிய நாடுகள் பகிர்ந்துகொண்டன.

ஆனால், இந்த முறைமையை மாற்றி அமைக்கும் வகையில் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற கூட்டத்தின் போது புதிய திருத்தங்களுடன் புதிய நிதிக்கொள்கையையும் பிரேரித்தார்.

இந்தப் பிரேரணைகள் சர்வதேச கிரிக்கெட் சபையால் கடந்த மாதம் நடைபெற்ற ஐ.சி.சி. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன. இந்தக் கூட்டத்தின்போது ஆளுகை முறையில் திருத்தம் செய்வதற்கு 10 பூரண அங்கத்துவ நாடுகள் ஆதரவாக வாக்களித்தன.

ஆனால், நிதிப் பகிர்வு விடயத்தில் எட்டு நாடுகள் ஆதரவாக வாக்களித்தன. இந்தியாவும் இலங்கையும் எதிராக வாக்களித்தன.

ஆளுகை முறைமை மற்றும் நிதிப் பகிர்வு விடயங்களில் மாற்றம் கொண்டுவருவது தொடர்பாக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் ஐ.சி.சிக்கும் வெற்றி கிட்டியதால் அவைத் தலைவர் பதவியை ஷாஷாங் மனோகர் தொடரவேண்டும் என பூரண அங்கத்துவ நாடுகள் விரும்பின எனக்கூறப்படுகின்றது.

# ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டம்: யுவென்டஸ் அணி இறுதிப்போட்டிக்குத் தகுதி!

துரின், மே 12

ஐரோப்பிய சம்பியன்ஸ் லீக் உதைபந்தாட்டப் போட்டியின் அரை இறுதியில் யுவென்டஸ் அணி, மொனாக்கோ அணியை வீழ்த்தி இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளது.

ஐரோப்பிய கிளப் அணிகளுக்கு இடையிலான சம்பியன்ஸ் லீக் போட்டி பல்வேறு நகரங்களில் இடம்பெற்று வருகிறது.

32 அணிகள் பங்கேற்ற இந்தப் போட்டி இறுதிக் கட்டத்தை நெருங்கி விட்டது. இதில் யுவென்டஸ் (இத்தாலி), மொனாக்கோ எவ்.சி. (மொனாக்கோ), அட்லெடிகோ மாட்ரிட் (ஸ்பெயின்), ரியல் மாட்ரிட் (ஸ்பெயின்) ஆகிய அணிகள் அரை இறுதிக்கு முன்னேறின. அரைஇறுதி ஆட்டங்கள் 2 சுற்றுகள் கொண்டவையாகும். 2 சுற்றுகள் முடிவில் அதிக கோல் அடித்த அணி வெற்றி பெறும். இதன் அரை இறுதியில் முதல் சுற்றில் ரியல் மாட்ரிட் அணி 3-0 என்ற கோல் கணக்கில் அட்லெடிகோ மாட்ரிட்டையும், யுவென்டஸ் அணி 2-0 என்ற கோல் கணக்கில் மொனாக்கோ அணியையும் தோற்கடித்து முன்னிலை பெற்றன.



இந்த நிலையில், துரினில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற அரைஇறுதி 2 ஆவது சுற்று ஆட்டத்தில் யுவென்டஸ்-மொனாக்கோ அணிகள் மோதின.

விறுவிறுப்பான இந்த ஆட்டத்தில் யுவென்டஸ் அணி 2-1 என்ற கோல் கணக்கில் மொனாக்கோ அணியை மீண்டும் வீழ்த்தியது. யுவென்டஸ் அணியில் மரியோ மான்ட்சுகிச் 33 ஆவது நிமிடத்திலும், டேனி ஆல்வ்ஸ் 44 ஆவது நிமிடத்திலும் கோல் அடித்தனர். மொனாக்கோ அணி தரப்பில் கெய்லியன் மாப்பே 69 ஆவது நிமிடத்தில் பதில் கோல் திருப்பினார்.

அரைஇறுதியின் இரண்டு சுற்று ஆட்டங்கள் முடிவில் யுவென்டஸ் அணி 4-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குள் அடியெடுத்து வைத்துள்ளது.

## மீண்டும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைக்கு வழங்கப்பட்டு வந்த இந்த வரிச்சலுகை, மனித உரிமை விவகாரங்களை அடிப்படையாகக் காட்டி நிறுத்தப்பட்டிருந்தது.

எனினும், 2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்பட்டபின்னர் அதை மீள பெற்றுக்கொள்வதற்கு இலங்கை அரசு கடும் முயற்சிகளை மேற்கொண்டது. இதற்கு ஐரோப்பிய ஒன்றியத்தால் பச்சைக்கொடியும் காட்டப்பட்டிருந்தது.

இந்நிலையில், இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை மீள வழங்கக்கூடாது என்றுகோரி 52 ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் பிரேரணை ஒன்றை முன்வைத்திருந்தனர்.

இந்தப் பிரேரணை மீது பிரஸெல்ஸில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்தப்பட்டு வாக்கெடுப்பும் நடத்தப்பட்டது. இதன்போது, இலங்கைக்கு ஜி.எஸ்.பி. பிளஸ் சலுகையை வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பிரேரணைக்கு 119 உறுப்பினர்கள் மாத்திரம் ஆதரவளித்தனர். பிரேரணைக்கு எதிராக 436 உறுப்பினர்கள் வாக்களித்தனர். 22 நாடாளுமன்ற உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

இதையடுத்து மீண்டும் வரிச்சலுகையை வழங்கும் யோசனை ஐரோப்பிய அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இதற்கே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 3 வருடங்களுக்கு மாத்திரமே இலங்கைக்கு இந்த வரிச்சலுகை இப்போதைக்குக் கிடைக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

## இன்று காலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த நிகழ்வில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதியும் நாடாளுமன்ற உறுப்பினருமான மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்வார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்தன.

இன்று காலை 10 மணி முதல் 10.20 வரை இந்தியப் பிரதமர் அங்கு உரையாற்றுவார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிகழ்வின் இடையே இந்தியப் பிரதமரும், மஹிந்த ராஜபக்ஷவும் நேருக்கு நேர் சந்தித்து, கைலாகு கொடுத்து, குசலம் விசாரிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

எனினும் இருவருக்கும் இடையே விரிவான சந்திப்பு மற்றும் பேச்சுக்கான வாய்ப்பு இருப்பதாகத் தெரியவரவில்லை. (உ)

## இந்தியப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை ஒட்டிக்கொண்டிருந்த ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரைப் பிணையில் விடுவிப்பதற்காக அவர் சார்பில் சட்டத்தரணி ஒருவர் பொரளை பொலிஸ் நிலையத்திற்குச் சென்றிருந்தார்.

எனினும், பொலிஸார் பிணை வழங்க மறுத்துள்ளமையுடன், சந்தேக நபர் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணை நடத்த வேண்டும் எனவும் கூறியுள்ளனர்.

சந்தேக நபர் குறித்து விசாரணை நடத்த வேண்டும் என்பதால், பிணையில் விடுதலை செய்ய வேண்டாம் எனத் தேசிய புலனாய்வுப் பிரிவினர் பொரளைப் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளனர் எனத் தெரிய வருகிறது. (உ)

## முள்ளிவாய்க்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தாகச் சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அரசசார்பற்ற அமைப்பு ஒன்றினால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாகப் புலனாய்வுத் தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் பழைய நினைவுச் சின்னத்தின் துண்டுகளைச் சேகரித்துப் புதிய நினைவுச் சின்னத்தை நிர்மாணிக்கத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அந்த ஊடகம் தெரிவித்திருக்கிறது.

முள்ளிவாய்க்காலில் விடுதலைப் புலிகளை நினைவு கூரும் நிகழ்வு மே 18ஆம் திகதி நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அரசாங்கத்தின் நல்லிணக்கச் செயலணியின் புதிய அறிக்கையில் உயிரிழந்த போராளிகளை நினைவு கூர்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும் எனப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

விடுதலை புலிகளின் நினைவுச்சின்ன நிர்மாணிப்புத் திட்டத்திற்கு பின்னால் விடுதலைப் புலிகளுக்கு நெருக்கமான தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் உறுப்பினர்கள் சிலர் உள்ளனர். – என்றும் அந்தச் சிங்கள ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (உ)

## சீன நீர்மூழ்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யத்தில் இந்தியாவின் நேரடிச் சிரத்தை சம்பந்தப்பட்டிருப்பதால், எதிர்வரும் காலத்திலும் அத்தகைய அனுமதி வழங்குவதற்கான வாய்ப்புக்கள் பெரும்பாலும் இல்லை என்றும் கோடி காட்டியுள்ளனர்.

இதேசமயம், இந்த மாதத்தில் தரித்துநிற்பதற்கான கோரிக்கையே நிராகரிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ள பாதுகாப்பு அமைச்சின் அதிகாரி, எதிர்வரும் காலங்களில் அத்தகைய அனுமதியை வழங்குவதா என்பது குறித்துத் தீர்மானிப்பது ஒத்திவைக்கப்பட்டுள்ளது என்றும் சொன்னார்.

மே மாதம 16 ஆம் திகதி அளவில் கொழும்பில் தரிப்பதற்கான அனுமதியைச் சீனா சில காலத்துக்கு முன்னர் கோரியிருந்தது என்று குறிப்பிட்ட மற்றைய அதிகாரி, அதற்குச் சில சமயங்களில் பிறிதொரு வேளையில் அனுமதி வழங்கப்படலாம் என்றும் சொன்னார்.

முன்னைய அரசின் காலத்தில் – 2014 ஒக்டோபரில் – கடைசியாகச் சீன நீர் மூழ்கிக் கப்பல்கள் கொழும்பில் தரிக்க அனுமதி வழங்கப்பட்டது என்பதும் –

இலங்கையில் சீனாவின் பிரசன்னமும், காலூன்றலும் அதிகரித்து வரும் பின்புலத்தில் அந்த அனுமதி, இலங்கை – இந்திய உறவுகளில் பெரும் மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியது என்பதும் தெரிந்தவையே.

இலங்கைக்கு ஊடாகப் போக்குவரத்துச் செய்யும் கப்பல்களில் எழுபது வீதமானவை இந்தியாவை மையமாகக் கொண்டு இயங்குபவை என்பதும் குறிப்பிடத்தக்கது.

அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீன நிறுவனம் ஒன்றுக்கு 99 வருடக் குத்தகைக்கு வழங்க விரும்பும் இலங்கை, திருகோணமலைத் துறைமுகத்தை எரிபொருள் மையத்துக்கான நிலையமாக இந்தியாவின் உதவியுடன் மாற்றவும் திட்டமிட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (உ)

# தமிழ் மக்களுக்காக பணியாற்ற பிரபாகரன் அனுமதிக்கவில்லை

### இப்படிக் குற்றஞ்சாட்டுகிறார் சந்திரிகா

கொழும்பு, மே 12

தமிழ் மக்களுக்கு தாம் இது வரை எந்த நன்மையும் செய்யவில்லை எனவும் அவ்வாறு செய்வதற்கு விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அனுமதிக்கவில்லை எனவும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

சிங்கள மக்களுக்குப் போதுமான அளவு செய்துவிட்டேன். இனி தமிழ் மக்களுக்காக ஏதாவது செய்ய வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துவெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

நான் சிங்கள மக்களுக்கு எதுவும் செய்யாமல் தமிழர்களுக்கு மாத்திரம் செய்கிறேன் எனத் தென்னிலங்கையை சேர்ந்த சிலர் குற்றம்சுமத்துகின்றனர். சிங்களவர்களுக்கு வேண்டியளவு செய்துவிட்டேன். அதற்கான என் வாழ்நாளின் அதிகளவான காலத்தில் செலவிட்டுள்ளேன்.

நாட்டில் சமாதானத்தை கொண்டு வரும் முயற்சியில் எனது உயிர் பறி போகும் அபாய நிலை ஏற்பட்டது. எனது ஒரு கண் இல்லாமல் போய்விட்டது. தற்போது சிங்களவர்களுக்காக வேலை செய்வதற்கு கிட்டத்தட்ட 200 பேர் உள்ளனர்.

தற்போதுதான் தமிழ் மக்களுக்காக வேலை செய்வதற்கு வாய்ப்பு கிடைத்துள்ளது. அதன்படி செயற்படுகின்றேன். – என அவர் கூறினார். (ம)

## மோடியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருக்கு மிகச் சமீபமாகச் சென்று படம் எடுத்தமை பாதுகாப்புத் துறைக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மோடியின் வருகையை முன்னிட்டு கடந்த இரண்டுநாள்களுக்கு முன்னரே பாதுகாப்பு தீவிரப்படுத்தப்பட்டிருந்தது. இதற்காக இந்தியாவில் இருந்தும் கறுப்புப் பூனைகள் உள்ளிட்ட பாதுகாப்புப் படையினர் வரவழைக்கப்பட்டிருந்தனர்.

பிரதமர் நரேந்திர மோடியை இலங்கை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட அமைச்சர்கள் விமான நிலையத்தில் வைத்து வரவேற்றனர்.

பின்னர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆகியோர் விமான நிலையத்தில் இருந்து வெளியேறும் போது ஒரே காரில் பயணிப்பதற்குத் தயாராகினர்.

அப்போது அந்தக் காரைச் சுற்றி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், அந்த பாதுகாப்பையும் மீறி, ஊடுருவி ஊடகவியலாளர் ஒருவர் துணிச்சலாகக் காரின் கதவு ஜன்னல் வரை நெருங்கிப் படம் எடுத்தார்.

பிரதமர் மோடி காரில் ஏறி அமர்ந்திருந்தபோது கார்க்கதவு சாத்தப்பட முன்னரே குறித்த ஊடகவியலாளர் மோடிக்கு மிக நெருக்கமாகச் சென்று திறந்திருந்த கார்க்கதவுடன் நின்று படம் எடுத்தமை பாதுகாப்புத்தரப்பை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

அந்த ஊடகவியலாளர் பின்னர் பாதுகாப்பு அதிகாரிகளால் பலவந்தமாக வெளியேற்றப்பட்டார். (ம)

## வந்தார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யப்பிரதமர் கலந்து கொண்டார். வெசாக் சோடனைகள், பந்தல்களையும் அவர் பார்வையிட்டார்.

இந்திப் பிரதமரை கங்காராம விகாராதிபதி உள்ளிட்டோர் வரவேற்றுள்ளனர். அதன் பின்னர் அங்கு இடம்பெற்ற வழிபாட்டு நடவடிக்கைகளில் பிரதமர் மோடி கலந்து கொண்டார்.

வெசாக் தினத்தை முன்னிட்டு அங்கு அமைக்கப்பட்டிருந்த அலங்கார வெசாக் வலயத்தை இந்தியப் பிரதமர் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்துவைத்தார்.

விகாரையில் இடம்பெற்ற வழிபாட்டு நிகழ்வில் கலந்துகொண்ட நரேந்திர மோடி வெவ்வேறு நாடுகளிலிருந்து வருகை தந்திருந்த மதத்தலைவர்களையும் சந்தித்தார்.

இந்த நிகழ்வில் சபாநாயகர் கருஜயசூரிய, அமைச்சர்களான ரவிகருணாநாயக்க, சாகலரத்நாயக்க, விஜயதாசராஜபக்ஷ, டி.எம். சுவாமிநாதன், தயா கமகே உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

நேற்றிரவு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன வழங்கிய இராப்போசன விருந்தில் இந்தியப் பிரதமர் பங்கு கொண்டார்.

பின்னர் தாஜ்சமுத்ரா ஹோட்டலில் அவர் தங்கினார். (உ)

# பொன்சேகாவுக்கு ஐ.தே.கவில் பதவி வழங்க கடும் எதிர்ப்பு

### ஊடகவியலாளர்களுக்கு அவரே தகவல்

ஐக்கிய தேசியக் கட்சி தமக்கு பதவியொன்றை வழங்க நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கும் நிலையில், அந்தக் கட்சியில் உள்ள சிலரே அதை எதிர்க்கின்றனர் என அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

கம்பஹா பிரதேசத்தில் நடந்த வைபவம் ஒன்றில் கலந்து கொண்ட அவர், பின்னர் ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்கு பதில் அளிக்கும் போதே இவ்வாறு கூறினார்.

கட்சியில் பிரதித் தலைவர் பதவியை தனக்கு வழங்குவதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சில காலங்களுக்கு முன்னர் தனக்கு அறிவித்திருந்தார் எனவும் பொன் சேகா கூறினார்.

பதவி இருந்தாலும் இல்லாவிட்டாலும் தான் யார் என்பது ஐக்கிய தேசியக் கட்சியினர் அனைவருக்கும் தெரியும் எனவும் இதனால்தான் பதவியைக் கோரி பின்னால் செல்லப்போவதில்லை என்றும் பொன்சேகா குறிப்பிட்டுள்ளார். (ம)

# ஒரே நேரத்தில் 3 வாகனங்கள் கிளிநொச்சியில் நேற்று விபத்து

### எவருக்கும் பாதிப்பில்லை; வாகனங்கள் சேதம்



ஏ-9 நெடுஞ்சாலையில் கிளிநொச்சியில் நேற்று மாலை ஒரே நேரத்தில் மூன்று வாகனங்கள் விபத்துக்குள்ளாகின. எனினும் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை.

சமையல் எரிவாயு சிலிண்டர்களை ஏற்றி வந்த பாரவூர்தி, சுற்றுலா பேருந்து மற்றும் சிற்றூர்தி என்பனவே விபத்துக்குள்ளாகின.

கிளிநொச்சி பிரதான வீதியில் பொதுமகன் ஒருவர் பாதசாரி கடவையைத் திடீரெனக் கடக்க முற்பட்டபோது முன்னால் சென்ற சிற்றூர்தி மற்றும் பேருந்து என்பன சடுதியாக நிறுத்தப்பட்டன. அதன்போது அதே திசையில் பயணித்த சமையல் எரிவாயு பாரவூர்தி முன்னே நின்ற வாகனங்களுடன் மோதியது.

இந்த விபத்தில் எவருக்கும் காயங்கள் ஏற்படாத போதிலும் வாகனங்கள் சேதமடைந்தன. இது தொடர்பாக கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம)

## பிரதமர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ருடன் அமர்ந்திருந்து விருந்தில் கலந்துகொண்டார்.

இந்த விருந்து நிகழ்வுக்கு ஒன்பது மாகாணங்களின் முதலமைச்சர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

அந்த வகையில் வடக்கு முதலமைச்சர் நீதியரசர் சி.வீ. விக்னேஸ்வரனும் அதில் கலந்து கொண்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, அமைச்சர்களான மங்கள சமரவீர, விஜயதாஸராஜபக்ஷ, ரவிகருணாநாயக்க, மலிக் சமரவிக்ரம, நிமல் சிறிபால டி சில்வா, இராஜாங்க அமைச்சர் ஏ.எச்.எம் பௌசி ஆகியோரும் இந்த இரவு விருந்தில் கலந்து கொண்டனர். (உ)

## விடுவிக்கப்பட்ட 3 தமிழக மீனவர்கள் இந்தியா சென்றனர்

மன்னார் நீதிமன்றத்தினால் கடந்த திங்கட்கிழமை விடுவிக்கப்பட்ட மூன்று தமிழக மீனவர்கள் நேற்று இந்திய – இலங்கை கடல் எல்லையில் வைத்து இந்தியக் கடற்படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். (உ)




மானிப்பாய் மக்கள் வங்கியின் பணம் மீளப்பெறும் தன்னியக்க இயந்திரம் (ATM) நேற்று முன்தினம் நண்பகல் மக்கள் வங்கிப் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரனால் வாடிக்கையாளர் சேவைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. (ஐ)

## அடிப்படை வசதிகள் கோரி கிளிநொச்சியில் கவனவீர்ப்பு!

ஏனைய கிராமங்களைப் போன்றே தங்களது கிராமத்திலும் அடிப்படை வசதிகள் வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுத்து, கிளிநொச்சியில் தேசிய மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் ஏற்பாட்டில் அரும்பு மாவட்ட பெண்கள் சம்மேளத்தினரால் கவனவீர்ப்பு ஊர்வலமொன்று நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டது.

கிராஞ்சி, வலைப்பாடு, பள்ளிக்குடா, இரணைமாதாநகர் மற்றும் நாச்சிக்குடா கிராம பெண்கள் ஒன்றிணைந்து பெண்களால், கிராமங்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் மற்றும் தேவைகள் தொடர்பில் மாவட்ட அரச அதிபருக்கு மகஜர் ஒன்று இதன்போது கையளிக்கப்பட்டது.

கிளிநொச்சி பழைய கச்சேரிக்கு முன்பாக ஊர்வலம் ஆரம்பமாகி புதிய கச்சேரியை சென்றடைந்து அரச அதிபருக்கான கோரிக்கைகள் அடங்கிய மகஜர் கையளிக்கப்பட்டது. மகஜரை மேலதிக மாவட்ட செயலாளர் பிருந்தாகரன் பெற்றுக்கொண்டார். (ஐ)





## வவுனியா வடக்கு வலய முழு நிலாக் கலை விழா

வவுனியா, மே 12

வவுனியா வடக்கு கல்வி வலயத்தின் முழு நிலா கலை விழா நேற்று முன்தினம் வவுனியா நெடுங்கேணி மகாவித்தியாலய மைதானத்தில் இடம் பெற்றது.

வவுனியா வடக்கு கல்வி வலயப் பணிப்பாளர் வ.ஸ்ரீஸ்கந்தராசா தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் பல்வேறு கலை,கலாசார நிகழ்வுகள் அரங்கேறின. பிரதேசத்தைச் சித்திரிக்கும் ஊர்திகளும் வலம் வந்தன.

வவுனியா நெடுங்கேணி முருகன் ஆலயத்தின் அதிதிகள் மாலை அணிவித்து ஊர்திகள் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட, மைதானத்தில் நிகழ்வுகள் ஆரம்பமாகின.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் பிரதித் தலைவருமான செல்வம் அடைக்கலநாதன், வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், கே. கே. மஸ்தான், சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா, வட மாகாணசபை உறுப்பினர்களான ஜி.ரி. லிங்க நாதன், எம். தியாகராசா, ஆர். இந்திரராசா, செ. மயூரன் ஆகியோர் உட்படப் பலர் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ஐ-100)



## கொடிகாமம் - யாழ். பேருந்து சேவையில் நெருக்கடியால் பயணிகள் பெரும் அவதி!

தென்மராட்சி, மே 12

கொடிகாமம் - யாழ்ப்பாணம் பேருந்து சேவையில் தினமும் காலை வேளைகளில் பயணிகள் இட நெருக்கடியால் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாக காலை 7.30 மணி தொடக்கம் 9 மணிவரை பெரும் நெருக்கடி நிலவுகிறது என்று பயணிகள் தெரிவிக்கின்றனர்.

அலுவலகம் செல்வோர், கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவோர், நோயாளிகள் எனப் பலரும் தமது வேலைகளின் நிமித்தம் யாழ். நோக்கி செல்வதால் இட நெருக்கடி ஏற்படுகின்றது.

அரச பேருந்துகளிலும் பார்க்க தனியார் பேருந்துகளில்தான் அதிக இட நெருக்கடி ஏற்படுகிறது என்றும் இந்த இட நெருக்கடியைப் போக்க தனியார் போக்குவரத்துச் சங்கம் காலை வேளையிலும் மாலை 4மணி தொடக்கம் 5மணி வரை மேலும் சில தனியார் பேருந்துகளை சேவையில் இணைத்து பயணிகளின் சிரமத்தைப் போக்க முன்வர வேண்டும் எனவும் பயணிகள் கேட்டுக் கொண்டுள்ளனர்.

சிறிய பஸ்களில் அதிக பயணிகளை அடைந்து செல்வதால் நிற்கக் கூட முடியாத நிலை ஏற்படுகிறது. ஒரு பேருந்தில் இவ்வளவு பயணிகளை மாத்திரம்தான் ஏற்றலாம் என்ற வரையறை விதிக்கப்பட வேண்டும். வரையறையை மீறும் பேருந்துச் சாரதி மற்றும் நடத்துனர்கள் மீது போக்குவரத்து பொலிஸார் கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பயணிகள் கேட்டுள்ளனர். (ஐ-21)

## கொடிவாரம்

இந்து இளைஞர் பேரவையால் கொடிவாரம் எதிர்வரும் 15 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கடைப்பிடிக்கப்படவுள்ளது.

கொடிவாரம் 1970 ஆம் ஆண்டுமுதல்வருடாவருடம் இலங்கை இந்து இளைஞர் பேரவை மற்றும் மாவட்டப் பேரவை என்பனவற்றால் நடத்தப்படுகின்றது.

மாவட்டப் பேரவையால் சேர்க்கப்படும் இந்த நிதி அறநெறிப் பாடசாலைகளுக்கும், சமூக சேவைகளுக்காகவும் மன்றத்தால் வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. (ச)

## புத்தாண்டு மரதன் ஓட்டம் விண்ணப்பங்கள் அனுப்பலாம்

யாழ்ப்பாணம்,மே 12

கொட்டடி கிராம அபிவிருத்திச் சங்கமும் சனசமூக நிலையமும் இணைந்து நடத்தும் புத்தாண்டு விழா 2017 இற்கான மரதன் ஓட்டப் போட்டிகள் எதிர்வரும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 5.30மணிக்கு கொட்டடி சனசமூக நிலைய முன்றிலில் ஆரம்பமாகும்.

இதில் ஆண்,பெண் இருபாலருக்குமான போட்டிகள் இடம்பெறும். ஆர்வமுடையோர் விண்ணப்பிக்கலாம் என்று கூறப்பட்டுள்ளது.

பொது அறிவுப் போட்டிகள் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறும்.

இதேவேளைமுட்டிஉடைத்தல், தேங்காய் திருவுதல், மாலை கட்டுதல் போட்டிகளும் நடைபெற உள்ளன. இதற்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளது.

இறுதியாக பரிசில் வழங்கும் நிகழ்வில் ஜே/80, ஜே/81,ஜே/83,ஜே/86 கிராமஅலுவலர்பிரிவுக்குட்பட்ட புலமைப்பரிசில்சித்தியடைந்தவர்கள், பல்கலைக்கழகத்துக்குத் தெரிவானவர்கள் ஆகியோருக்கு பரிசில்களும் சமூக மட்டத்தில் சேவையாற்றியவர்களுக்கு சமூக திலகம் விருதும் வழங்கப்படவுள்ளன. (ஐ-19)

## இளம் விவசாயிகள் கழகம் அங்குரார்ப்பணம்

நாவற்குழி மே. 12

பச்சிலைப்பள்ளி தர்மக்கேணி விவசாயப் போதனாசிரியர் பிரிவுக்குட்பட்ட மாசார் கிராம உத்தியோகத்தர் பிரிவில் வளர்மதி இளம் விவசாயிகள் கழகம் விவசாயப் போதனாசிரியர் வை.ஞானபாஸ்கரன்தலைமையில் அண்மையில் அங்குராப்பணம் செய்துவைக்கப்பட்டது.

இக் கழகத்தின் தலைவராக ந.ஜெயகாந்தனும், செயலாளராக தினேஸ் தர்சாவும், பொருளாளராக தே. சுஜீவனும், உபதலைவராக ம.சுலக்சனும் உபசெயலாளராக வே.சிவராசாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்த நிகழ்வில் இளம் விவசாயிகள் கழகம் பற்றிய அறிமுகமும் இக் கழகத்தால் அங்கத்தவர்களுக்குக் கிடைக்கும் நன்மை பற்றியும் விவசாயப் போதனாசிரியர் வை.ஞானபாஸ்கரனால் விளக்கமளிக்கப்பட்டது. (ஐ-22)

## இலங்கைவேந்தன் கலையரங்கத்தில் இயல், இசை, நாடக அரங்கு

### மூன்றாம் நாள் நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,மே 12

இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நடத்தும் இயல்,இசை, நாடக அரங்கு நேற்றுமுன்தினம் புதன் கிழமை ஆரம்பமானது. இந்த நிகழ்வு நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை வரை இடம் பெறும்.

யாழ்ப்பாணம், நீராவியடி கல்லூரி வீதியில் அமைந்துள்ள இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி கலையரங்கத்தில் நாளாந்தம் நிகழ்வுகள் நடைபெறும்.

இன்றைய மூன்றாம் நாள் நிகழ்வு கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி அதிபர் 'செந்தமிழ்ச் சொல்லருவி' ச.லலீசன் தலைமையில் இடம்பெறும்.

நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.போதனா வைத்திய சாலை பொது வைத்திய நிபுணர் வைத்திய கலாநிதி த.பேராணந்தராஜா கலந்து கொள்வர்.

இணுவையூர் கரிகரன் குழுவினரின் மங்கல இசையுடன் நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

நாதஸ்வரம்: கீத கலாசிகரம் பி.எஸ். கரிகரன், தமிழ்நாடு திருக்கோவிலூர் சிலம்பரசன், தவில்: தாவடியூர் இ.குகன்,பதுளையூர் தவில் இளந்தென்றல் பா. உதயசங்கர்.

தொடர்ந்து சி.மனாமிர்தன், சி.சுபாம்சன், சி.கோபிராம் ஆகியோரின் திருமுறை ஓதல் இடம்பெறும்.

அடுத்து ஆசியுரையை அகில இலங்கை ஜம்பியத்துல் உலமா யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் தலைவர் மௌலவி அப்புல் அசீஸீம் , வாழ்த்துரையை யாழ்.பல்கலைக்கழக ஓய்வு நிலை பேராசிரியர் கலாநிதி கலைவாணி இராமநாதன் ஆகியோர் நிழ்த்துவர்.

தொடர்ந்து சைவ விருத்திச் சங்க 'கருணை இல்ல' மாணவிகள் வழங்கும் வரவேற்பு நடனம் இடம்பெறும். இதில் திருமதி யாழினி ரதீஸ்வரனின் நட்டுவாங்கமும் திருமதி வத்சலா கருணாகரனின் பாட்டும், திருமதி இந்துமதி தயாபரனின் வயலினும், ரி.சிவகுமாரின் மிருதங்கமும் இடம்பெறும்.

இசை அரங்கத்தில் பாலமுருகன் தரங்கினியின் பாட்டும், பிரிசில்லா ஜோர்ஜின் வயலினும், ஞா.வசந்தின் மிருதங்கமும் இடம்பெறும்.

அடுத்து, நீர்வையூர் 'பொன் சக்தி' காலகேந்திரா மாணவிகள் வழங்கும் நாட்டியாஞ்சலி இடம்பெறும். இதில் திருமதி.சத்தியப்பிரியா கஜேந்திரனின் நட்டுவாங்கமும், திருமதி. தமிழினி மயூரனின் பாட்டும், அ.ஜெயராமனின் வயலினும், க.கஜனின் மிருதங்கமும் இடம்பெறும்.

தொடர்ந்து, சுவாமி விபுலாநந்தா அழகியல் கற்கைகள் நிறுவனத்தின் மாணவிகள் வழங்கும் 'வள்ளி திருமணம்' நாட்டிய நாடகம் இடம்பெறும்.

கலைஞர் கௌரவிப்பு, பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்து, கலாநிதி ஜெயரஞ்சினி ஞானதாஸின் நெறியாள்கையில் 'யாரோடு நோகேன்' நாடகம் இடம் பெறும். (இ-ச)

# ராணுவ ட்ரக்கை மோதி இழுத்துச் சென்ற ரயில்!

## சாவகச்சேரியில் நேற்று பிற்பகல் சம்பவம்



சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக பாதுகாப்பற்ற ரயில் கடவையை நேற்று மதியம் 2 மணியளவில் கடக்க முயன்ற இராணுவ ட்ரக் ஒன்று கடுகதி ரயிலுடன் மோதி நீண்ட தூரத்துக்கு இழுத்துச் செல்லப்பட்டது.

எனினும், ரயில் ட்ரக்கை மோதமுன்னரே ட்ரக்கில் இருந்த ஆறு இராணுவத்தினரும் ட்ரக்கில் இருந்து பாய்ந்து உயிர் பிழைத்துக்கொண்டனர். ஒருவர் மாத்திரம் பாயும் போது காலில் அடிபட்டுக் காயமடைந்தார். ஜெயசிங்க (வயது 25) என்ற இந்தசிப்பாய்சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

சாவகச்சேரி தம்பு தோட்டத்தில் நிலை கொண்டுள்ள 523 ஆவது பிரிகேட்டைச் சேர்ந்த ட்ரக்கே ரயில் கடவையைக் கடக்க முற்பட்ட சமயத்தில் அதன் இயந்திரம் செயலிழந்ததாகக் கூறப்படுகின்றது.

ரயிலுடன் மோதுண்ட ட்ரக் மோசமாகசேதமுற்ற நிலையில் விபத்து நடந்த இடத்திலிருந்து சற்றுத் தொலைவு வரை இடித்துத் தள்ளி இழுத்துச் செல்லப்பட்டது. (உ-21)




# கிளிநொச்சி அஞ்சல் அலுவலகம் இனந்தெரியாதோரால் உடைப்பு!



கிளிநொச்சி, மே 12

கிளிநொச்சி பரந்தன் அஞ்சல் அலுவலகம் நேற்றுநண்பகல், இனம் தெரியாதவர்களால் உடைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை அடுத்து, கிளிநொச்சிப் பொலிஸாரினால் விசாரணைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு பொருள்கள் ஏதும் திருடப்பட்டு அல்லது சேதப்படுத்தப்பட்டுள்ளமை தொடர்பில் எதுவித தகவல்களும் வெளியாகவில்லை. (உ)

# வித்தியா படுகொலை வழக்கை யாழிலேயே நடத்த வற்புறுத்தல்

## நேற்று புங்குடுதீவில் கவனவீர்ப்பு



(எஸ்.நிதர்ஷன்)

புங்குடுதீவு மாணவி சிவலோகநாதன் வித்தியா கூட்டுப் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான வழக்கு விசாரணையை கொழும்பு நீதிமன்றுக்கு மாற்றும் முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று புங்குடுதீவில் கவனவீர்ப்பு போராட்டம் ஒன்று இடம்பெற்றது.

புங்குடுதீவு மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட இந்தப் போராட்டத்தில், வித்தியாவின் தாயார் உட்பட குடும்ப உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த வழக்கு 'ட்ரயர் அட் பார்' முறையில் யாழ்.மேல் நீதிமன்றிலேயே இடம்பெறவேண்டும் எனப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

நேற்று மாலை நான்கு மணியளவில் புங்குடுதீவு கந்தசுவாமி கோயிலுக்கு முன்பாக ஒன்றுகூடிய மக்கள், எதிர்ப்பு வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளைத் தாங்கியவாறு பேரணியாக புங்குடுதீவு 11 ஆம் வட்டாரம் ஆலடிச் சந்திவரை சென்றனர். அப்பகுதியில் ஒன்று கூடி நின்று தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

இப்போராட்டத்தில் கலந்து கொண்ட, படுகொலை செய்யப்பட்ட வித்தியாவின் தாயார் திருமதி சிவலோகநாதன் கருத்துத் தெரிவிக்கையில் -

''எனது மகளின் படுகொலைக்கு யாழ்ப்பாண நீதிமன்றிலேயே நீதி வழங்கப்பட வேண்டும். கொழும்புக்குச் சென்று வழக்கு நடத்துவதற்கு எங்களிடம் வசதி இல்லை. எனது மகளுக்கான நீதி விரைவாகக் கிடைக்கவேண்டும்.''- எனக் கண்ணீருடன் கூறினார்.

இப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்கள், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில்–

"வித்தியா படுகொலை செய்யப்பட்ட இடம் யாழ்ப்பாண மேல் நீதிமன்ற எல்லைக்குட்பட்ட பகுதியாக உள்ள நிலையில், தற்போது எதற்காக இவ் வழக்கை கொழும்பு நீதிமன்றுக்கு மாற்ற வேண்டும்? இச்செயற்பாடு யாழ்.மேல் நீதிமன்றின் நீதி வழங்கும் தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியுள்ளது."– என்றனர்.

"மேலும், சம்பவம் இடம் பெற்ற பின்னர் யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்தப் படுகொலை தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விசேட நீதிமன்றம் அமைத்து நீதி வழங்கப்படும் எனக் கூறியிருந்தார்".

"இந்நிலையில், தற்போது இந்த வழக்கை கொழும்புக்கு மாற்றுவதானது ஜனாதிபதி கூறிய வாக்குறுதியை மீறுகின்ற செயற்பாடாகும்." – எனவும் மக்கள் தெரிவித்தனர்.

"ஜனாதிபதி கூறியதுபோன்று யாழ்ப்பாணத்திலேயே விடே நீதிமன்றத்தை அமைத்து திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலுள்ள தமிழ் நீதிபதிகளை நியமித்து இவ்வழக்கை விசாரணை செய்து தீர்ப்பளிக்கவேண்டும்."– எனவும் மக்கள் இதன்போது தெரிவித்திருந்தனர்.

தமது மேற்படி கோரிக்கைகள் அடங்கிய மகஜர்களை ஜனாதிபதி, பிரதம நீதியரசர், வட மாகாண ஆளுநர் ஆகியோருக்கு அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் மக்கள் தெரிவித்தனர். (ம)



யாழ்ப்பாணம், இலங்கை வேந்தன் கலைக் கல்லூரி நீராவியடியில் உள்ள அதன் கலையரங்கத்தில் வருடாந்தம் நடத்தும் ஐந்து நாள் இயல், இசை, நாடக அரங்கு நிகழ்வு கடந்த புதனன்று ஆரம்பமாகியது. முதல் நாள் நிகழ்வின்போது பிடிக்கப்பட்ட படங்கள் இவை.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிரைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.05.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.